கடவுள் துணை.

# விவேக திவாகரன்.

திருச்செங்கோட்டில் மாதந்தோறும் பிரசுரமாகும்,

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" திருவள்ளுவர்.

தொகுதி க.] இராக்ஷஸ வருஷம் புரட்டாசி-அற்பசி. [பகுதி கூ-எ.

உள்ளுறை.

| | |
|---|---|
| பகவின் அபிவிருத்தி—பத்திராசிரியர் ... ... | 105 |
| தாய் பாஷை—ஸ்ரீமான். M. D. சுப்பராய அய்யர் அவர்கள் B. A., B. L. | 107 |
| முப்பொருள் விளைவு—ஸ்ரீமத். தற்புருஷசிவம் ... | 112 |
| இன்செல்—ஸ்ரீமத். அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் | 113 |
| மைசூர் கிருஷ்ணராஜ உடையார் சாசனம் 3 ஸ்ரீமத். நரசிங்கி பண்டிதர் அவர்கள் ... | 118 |
| பயிரில்விழும் பூசிகளைப்பற்றி—சென்னை விவசாயசங்க பூசகி சாஸ்திரி ... ... ... ... | 120 |
| கைகாட்டி மரமும், வழிகாட்டுகிறவனும் ரெவரெண்டு. T. C. உவிட்னி B. A. ... | 129 |
| மிளகு—மிஸ்டர். C. A. பாபர்—கவர்ன்மெண்டு தாவர சாஸ்திரி ... ... ... | 133 |
| கொங்கு—பத்திராசிரியர் ... ... ... ... | 33 |
| விளம்பரங்கள் ... ... ... ... ... | 1 |

பத்திராசிரியர்—தி. அ. முத்துசாமிக் கோனர்.

திருச்செங்கோடு விவேக திவாகரன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

வருஷம் ஒன்றுக்கு ரூ 3.] 1915. [தனிப்பிரதி 6 அணா.

கடவுள் துணை.

# விவேக திவாகரன்.

தொகுதி ௧.] இராக்ஷஸ வருஷம் புரட்டாசி-அற்பசி. [பகுதி ௬-௭.

## பசுவின் அபிவிருத்தி.

நமது தேசத்தில் வாழும் மனிதர்களுக்குப் பசுவைப்போன்ற உபகாரமுள்ள பொருள்களில்லை. சுருக்கமாகச் சொல்லப்புகுந்தால் மனிதவாழ்வுக்கு பசுக்களே மூலாதாரமாகும். இதுபற்றியே சீகாழிப்பிள்ளையாரும், "வாழ்க அந்தணர் மன்னுக ஆனினம்" என்று கூறியுள்ளார். இருக்கு வேதத்தில் "பசுவினை யருளவேண்டும்" என்றும், இன்னும் "நமது நண்பராகிய புலகர்த்தாவுடன், நாம வெற்றியடைவோமாக. அவர் நமக்கு ஆனிரைகள் அசுவங்கள் உணவு ஆகிய இவற்றையளிப்பார். வனொவில இவற்றை நமக்குக் கொடுப்பதால் நம்மை பாக்கியவான்களாக்குகிறார்" என்றும், "புலகர்த்தனே! தேன் சொரிவது போலப் பாற்பசுக்கள் பாலைச் சொரிந்து நவநீதத்தை யுதவுகின்றன." என்றும் "கிருஷ்ண யஜுர் வேதத்தில் "பசுவினையுண்டாக்கும் அதனை யெமக்கருளும்" என்றும், வியந்து கூறப்பட்டுள்ளது. பசுக்கள் மக்களாயுள்ள நம்மைக் குழவிப் பருவந்தொட்டு அன்னையினும் மிக்க பாலைக்கொடுத்து வளர்த்துக் காப்பாற்றுகின்றன. இதுபற்றியன்றோ "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற்பெரும் பசுக்கள்" என்றும் "மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்" என்றும் ஸ்ரீ ஆண்டாள் திவ்வியசூக்தியால் பசுவின் வள்ளற்றன்மையை எடுத்தோதியிருக்கின்றார். பாலும், தயிரும், வெண்ணெயும், நெய்யும் கொடுத்து நம்மை வளர்த்து வருகின்றன. பசுவினங்கள் பரம்படித்து, நீரிறைத்துத், தாம்படித்து, அரும்பாடுபட்டு விளைவித்த தானியராசிகளை நாம் அபகரித்துக்கொண்டு, சாரமில்லாத சக்

கைகளையும் கழிந்த வைக்கோல் தட்டைகளையும் அவைகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கிறோம். அவற்றையும் பவித்ர உணவுபோல் என்று விழுங்கி நீராருந்தி அதிசீக்கிரத்தில் மட்க வைத்து எருக்குப்பையாக்கி உழவுக்கு உபகரிக்கும்படி மீட்டும் நமக்கே கொடுத்துவிடுகின்றன "உள்ளியுள்ள வெல்லா முவந்தீயும் வள்ளியோரின் வழங்கு" மியல்பினையுடைமையினன்றோ தெய்வத்தன்மை யேற்றியபசுக்களை முன்னோர் போற்றினர். இறந்தபின்பும் அதன் தோல், பரியாவியும் இறைவடம், ஏர்வடம், சாட்டைவார் முதலியன ஆதல்மாத்திரமல்ல, நம்காலில் தைக்கும் முள்ளைத் தம் மேலில தைக்கும்படி மிதியடியாகித் தாங்கியும் நம்மைப் பாதுகாக்கின்றது. ஆதலின் அவற்றைப் போஷிக்கவேண்டியது இன்றியமையாத கடனாகும். புன்செய் தானிய விளைவாகும் இடங்களில் பசுக்கள் நன்றாகவிருத்தியாகும். நன்செய்ப்பயிர்செய்யும் இடங்களிலோ பசுவினங்கள் நசித்துப்போவது சகஜமாக இருக்கிறது. தேசத்தின் செல்வ அபிவிருத்திக்கு வேண்டிய உழவுத்தொழில் காளைமாடுகளைப் பொறுத்ததாக இருக்கின்றது. மனிதர்களின் தேக சுகத்துக்கு அவசியமான பால், தயிர், நெய் முதலிய பொருள்கள் கறவைப்பசுவைப் பொறுத்ததாக இருக்கின்றது. புன்செய் நிலங்களிலும் நன்செய் தானியம் பயிரிடப்படுகிறபடியாலும் பாற்செலவு அதிகரித்து வருகிறபடியாலும் காளைமாடுகளையும் கறவை மாடுகளையும் விருத்தி செய்யவேண்டியது அத்தியாவசியமாகின்றது. மாடுகள் விருத்தியடையாமல் நசிப்பதற்குக் காரணம் நல்ல பொலிகாளையில்லாமையே ஆகும். ஏரில் கட்டும் பருவத்தில் காளைகளுக்குக் காயடித்து விடுவார்கள். காயடிக்குமுன் நன்றாக வளர்ச்சிபெறாத இளங்காளையினின்று உற்பத்தியாகுங் கன்றுகள் வலுவற்றதாயும் பருத்து வளராதவையாயும் ஆய்விடுகின்றன. பசுக்களும் நல்லவைகளாயும் பொலிகாளையும் நல்லவைகளாயுமிருந்து கலந்து உற்பத்தியாகும் கன்றுகள் நல்ல வளர்ச்சி, பலம் உள்ளவைகளாய்த் தொழில் செய்யச்சிறந்ததாக ஆகும்; ஆனதால் ஒவ்வொரு பெரிய விவசாயியும், பொலிகாளை வைத்திருக்கவேண்டும். அல்லது ஒவ்வொரு கிராமத்திலும் சிறந்த பொலி

காளைகளைக் கவர்ன்மெண்டார் கொடுத்து பசு விருத்தியாகும்படி செய்யவேண்டும். பசுக்களின் விருத்தியே நம தேசத்தின் பொருளாதாரநிலைக்கு முக்கியமானதாயிருக்கிறது. பசுக்களைச் செவ்வையாக வளர்ப்பதில் பலவிதத்திலும் லாபம் இருக்கிறது. பால், தயிர், வெண்ணெய், நெய்யும் விற்பனையாகும். பசு, காளைகள் விருத்தி செய்து விற்கலாம். பசுக்களின் மல மூத்திரங்களும் விலையுயர்ந்த இன்றியமையாத பெரும் பொருளாக இருக்கின்றது.

இதுபற்றியே பசுபரிபாலனம் விசேஷமாகக் கூறப்படுகிறது. நாராயணன கிருஷ்ணாவதாரத்தில் "குன்றெடுத்தானிரை காத்தபிரான் கோவலனாய்க் குழலூதியூதிக், கன்றுகள் மேய்த்துத் தன்தோழரோடு கலந்துடன் வருவான்" எனப் பெரியாழ்வாரும், அன்றியும் "பெற்றமேய்த்து உண்ணும் குலத்திற் பிறந்து நீ குற்றேவலெங்களைக் கொள்ளாமற்போகாது" என ஸ்ரீ ஆண்டாளும் ஏற்றமாகக் கூறியிருக்கிறார்கள். இதில் உண்பதற்குத் தேவபூஜை பூர்வாங்கமாக இருப்பதுபோல, பசு மேய்த்தலும் உண்பதற்குப்பூர்வாங்கமாக இருக்கிறது.

பத்திராசிரியர்.

## தாய் பாஷை.

---

இந்து தேசத்தில் நமது பெரியோர்கள் வெகுநாளைக்கு முன் நன்னிலைமையிலிருந்தபோது, கல்வியிலும், சாஸ்திரங்களிலும், கைத்தொழில்களிலும் அதிக அபிவிருத்தியை அடைந்து இதர தேசங்களுடன் கடல்மார்க்கமாயும், தரைமார்க்கமாயும் வியாபாரம் செய்துக்கொண்டு இதரதேசங்களுக்குத் தாங்கள் கண்டுபிடித்த ஜோதிட சாஸ்திரங்களையும், கணித நூல்களையும், ஔஷதங்களையும் கற்பித்து மஹா உன்னத ஸ்திதியிலிருந்து பிழைத்து

வந்தார்களென்று நாம் பூர்வீக சரித்திரங்களினால் அறிகிறோம். இப்போது நாம் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்று தெரிந்திருக்கிறது. நமது பெரியோர்கள் இதர தேசங்களுக்குத் தங்கள சாஸ்திரங்களைக் கற்றுக்கொடுக்கும் நிலைமையிலிருந்திருக்க, நாம் இப்போது கல்வியையும் சாஸ்திரங்களையும் அறியக்கூடாமல் மூட ஸ்திதியில் இருக்கிறோம். இதற்கு என்ன காரணம்? நாம் பழையஸ்திதியை, வாசிப்பிலும் அறிவிலும் அடைந்து கல்வியில் ஐரோப்பியர்களுக்கு சமதியாக வரவேண்டுமானால் அதற்கென்ன வழி?

நாம் நமது தாய் பாஷையை திரஸ்கரித்து அன்னிய பாஷையைக் கொண்டாடி இதுவும் அதுவுமில்லாமல் திரிசங்கு சொர்க்கத்திலிருக்கிறோம். நாம் நமது தேசத்தை நமது ஆளுகைக்குள் வைத்துக்கொண்டு, நமது வியவகாரங்களை நாமே தீர்த்துக்கொண்டு நமது வரும்படிகளை நாமே செலவழித்துக்கொண்டு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து ஒரு உன்னத பதவியை அடையவேண்டுமானால் ஆளுகைக்குள் அடங்கிய சகல ஜனங்களுக்கும் வாசிப்பும், கல்வியும், தத்வங்களும், சாஸ்திரங்களும் கற்பித்துக் கொடுக்கவேண்டியது அவசியம். ஜனங்கள் வாசிப்பிலும், அறிவிலும் தேர்ச்சி அடைந்தாலொழிய தேச ஆளுகைக்கு அருகரானவர்களல்லர்? மேலும் வாசிப்பில்லாத ஜனங்களுக்கு கௌரவமும் கிடைக்காது. வாசிப்பில் சகலமான ஜனங்களும் தேர்ச்சி அடைய வேண்டுமானால் அவர்களுக்கு கல்விப் பயிற்சி, தங்கள் தாய்பாஷையில் கொடுக்கவேண்டுமே யொழிய அன்னிய பாஷையினால் அல்ல. நமது தேசத்தில் ஸ்திரிகளுக்கும், விவசாயம், கைத்தொழில் உள்ளவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சாமானியமாகத் தாழ்மை நிலைமை உள்ளவர்களுக்கும் கல்விப் பயிற்சி உண்டாக வேண்டுமானால் ஆங்கிலேய பாஷையினால் கற்பிப்பது சாத்தியமா? சாத்தியமானாலும் நீடித்து நிலைபெறத் தக்கதாவென்று யோசிப்போம். இதுவரையிலும் அன்னிய பாஷையினால் கல்விப்பயிற்சியைத் தேடித், தேசம் அபிவிருத்திக்கு வந்தது, நமக்கு சரித்திரத்தினாலாவது, புராணத்தினாலாவது தெரி

யில்லை. ஜப்பானியர்கள் ஜர்மானியர்கள் முதலானவர்கள் தங்கள் தேசபாஷையைக் கொண்டுதான் அபிவிருத்திக்கு வந்திருக்கிறார்களே தவிர, இதர பாஷையினால் அல்ல. கல்வி பயிற்சி உள்ள ஜனங்கள் என்று சொல்லுவதற்குத் தேசத்தில் 100-க்கு 95 ஜனங்களாவது எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாய் இருக்க வேண்டும். இந்து தேசத்தை இந்த நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமானால் அந்தந்த நாட்டில் வழங்கிவரும் பாஷையினால ஜனங்களுக்கு கல்விப் பயிற்சி உண்டாக்க முயல்வது முக்கியம்.

ஆங்கிலேயர், நம்ம தேசத்திற்கு வியாபாரத்திற்கு வந்தது முதல் ஆங்கிலேய பாஷையில பிரியங்கொண்டு அதை ஒரு கௌரவமாகப் பாராட்டி நமது ஜனங்கள் வமிசாவளியாக அந்த பாஷையைச் சீராட்டி இப்போது அநேக வீடுகளில ஆங்கிலேய பதங்களே வழங்கி வருகின்றன. ஆங்கிலேய பாஷையினால் கல்விப் பயிற்சி தேடுவதில் அநேக கெடுதல்கள இருக்கின்றன. அந்த பாஷையின் உச்சரிப்பு யாதொரு விதிக்கும கட்டுப்பட்டதல்ல. உச்சரிப்பை நமது குழந்தைகளுக்குச சொல்லிக்கொடுக்க சுமார் 2 வருஷமாகின்றன. சில மாணாக்கர்களுக்கு ஸ்கூல் பைனல் கிளாஸ் அதாவது சுமார் 10 வருஷத்து வாசிப்புக்குப பின் கூட அங்கிலேய பதங்களைச் சேர்த்து நன்றாக வாசிக்கவும் பேசவும் தெரிகிறதில்லை. இப்படி பத்து வருட காலங்கள் கேவலம் பாஷைக்காக ப்ரயோகித்து அதன் பிறகு சாஸ்திரங்களையும் தத்வங்களையும தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. இதில் ஒருவனுக்கு 17 வயதாய்விடுகிறது. 22 அல்லது 23 வயதில் நமக்குள்ள ஏழை ஸ்திதியினால் வாலிபர்கள் சம்பாத்தியத்திற்கு யத்தனப்படவேண்டியதா யிருக்கிறது. மத்தியிலுள்ள 4, 5 வருஷத்தில் எவ்வளவு விருத்தி உண்டாகக் கூடும் என்று சுலபமாக ஊகிக்கலாம். ஆங்கிலேய பாஷை மூலமாகக் கல்விப் பயிற்சி தேடுவதில் இன்னொரு பிரதிகூலம் இருக்கிறது. அதாவது ஆங்கிலேய பாஷை வாசித்தவர்களுக்கும அப்பாஷையை வாசிக்காதவர்களுக்கும சமத்துவம் ஏற்படுகிறதில்லை. ஆங்கிலேய பாஷை தெரிந்தவர்கள் ஒரு அகங்காரத்தை அடைந்தவர்களாக இருக்

கிறார்கள் என்பது அபிப்பிராயமல்ல, ஆனால் அப்பாஷை தெரியாதவர்கள், பாஷை தெரிந்தவர்களிடத்தில் அதிக சங்கோசமாகவும், பயபக்தியாகவும் நடந்துக் கொள்வதுடன் தங்கள் ஸ்திதி மிகுந்த ஹீனமுள்ளது என்று தாங்களே நிர்ணயித்துக் கொள்கிறார்கள். இதற்கு காரணமென்னவெனில் உலக நடக்கைகளுள்ள சாஸ்திரங்களை ஆங்கிலேய பாஷையினால் மாத்திரந்தான் இப்பொழுது தெரிந்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இம்மாதிரி அசமத்துவம் நமது தேச அபிவிருத்திக்குண்டான குறியல்ல.

நமது நாட்டில் தமிழ்பாஷையினால் படிப்புக்கற்பிப்பது மிகவும் சுலபம். எழுத வாசிக்க ஆறு மாதத்தில் தெரிந்துகொள்ளலாம். ஆங்கிலேய பாஷையில் எழுதப்பட்டிருக்கும் நூல்களையும் சாஸ்திரங்களையும் தேசாபிமானிகள் தமிழில் மொழி பெயர்த்து சரியானபடி நமது ஜனங்களுக்குக் கற்றுக்கொடுக்கும்பக்ஷத்தில் சாதாரணமாக இப்போது ஆங்கிலேய பாஷையினால் 25 வயதில் தெரிந்துகொள்ளும் சாஸ்திரங்களை 17 வயதிற்குள் தெரிந்துகொள்ளலாம். தமிழ் நாட்டு ஜனங்களுக்குத் தமிழில்தான் கல்விப் பயிற்சி தேடவேண்டும்.

தமிழ் நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மத்யஸ்தலத்தில் தமிழ் கலாசாலை ஏற்படுத்தி ஐரோப்பியர்கள் கண்டுபிடித்திருக்கும் நூல்களையும் சாஸ்திரங்களையும் தமிழில் திருப்பி நமது பழைய நூல்களையும் சாதாரணமாக வழங்கும் தமிழ் நடையிலெழுதிக் கற்பிப்பதில் உண்டாகும் நன்மை அதிகம். ஆகையால், கப்பல் எந்த மாதிரி செய்யப்பட்டிருக்கிறதென்றும் இஞ்ஜின் வண்டிகள் எப்படி ஓடுகிறதென்றும் தந்தியினால் எவ்விதமாக சமாசாரங்கள் அறிவிக்கிறது அறிந்துகொள்ளப்படுகிறதென்றும், மின்சாரம் என்பது என்ன? எப்படி உபயோகப் படுத்தலாம் என்பதை நமது பாஷையில் கற்பிக்கக்கூடாதா? கேவலம் பாஷையின் பிரயோஜனம் என்ன? அறிவு பெறுதற்குப் பாஷை. அது எந்த பாஷையாய் இருந்தால் என்ன?

குருடர்களுக்கு கண் திறந்தாற்போலிருக்குமல்லவா? எப்படி வேளாண்மை அதிகப்படுத்துகிறதென்று ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அப்போதைக்கப்போது கண்டுபிடிக்கும் புது ஆங்கிலேய பாஷையில் பிரசித்தம் செய்கிறார்கள். நமது நாட்டில் ஆங்கிலேயம் தெரிந்தவர்களில் அநேகர்களுக்கு இவைகளைக் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. கவனிக்கவேண்டிய அவசியமுள்ளவர்களுக்கு ஆங்கிலேய பாஷை தெரிகிறதில்லை. நாம் இந்த ஸ்திதியில் இருக்கிறோம். மேற்சொன்ன தமிழ்க்கலாசாலையை ஸ்தாபனம் செய்யவேண்டுமானால் ஏராளமான பணம் அநேக இலக்ஷம் வேண்டியிருக்கும். நமது நாட்டு ஜனங்கள் வியாபாரிகள், ஜமீன்தாரர்கள், பூஸ்வப்பிரபுக்கள் இதன் குணத்தை அறிந்து பணம் ஏராளமாகக் கொடுக்க அவர்களுக்குத் தமிழ்க் கலாசாலையில் உண்டாகும் பிரயோஜனத்தைத் தமிழ்ப்பத்திரிகைகளாலும், பிரசங்கங்களாலும் போதிக்கவேண்டும். இப்படிச் செய்வதில் நமது ஜனங்கள் கவர்ன்மெண்டு உத்தியோகத்தை உத்தேசித்து வாசிக்கிறது என்னும் எண்ணத்தை விட்டுவிட்டு கல்வி கேட்கவேண்டும் கல்வியுள்ளவன் எப்படியாகிலும் பிழைப்பான் என்னும் எண்ணத்தை வைக்கும்பக்ஷத்தில் நமது கோரிக்கை சீக்கிரத்தில் நிறைவேறும். ஜனங்கள் மூடத்தைவிட்டு கல்வியுள்ளவர்களாய் இருப்பார்கள். இது இப்போது சாத்தியமில்லாத பக்ஷத்தில் அதற்குப் பதிலாக ஒரு தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தி சாமான்யமாக விருத்தியைத் தரக்கூடிய ஆங்கிலேய புஸ்தகங்களைச் சாதாரண தமிழ் நடையில் எழுதி அதிக லாபமில்லாமல் அச்சுக்கூலி கட்டுகிறாப்போல் விலைக்கு விற்கும் பக்ஷத்தில் அதனால் நமது நாட்டிற் கல்விப் பயிற்சி அதிகமாகும். இதுதான் சுலபமான வழி. தமிழ் பாஷையை விருத்திசெய்து சாராம்சத்தைக் கிரஹித்துக்கொள்வதுதான் பிரதானம். நமது பாஷையில் கிரஹித்துக்கொள்ள அநுகூலமாயிருந்தால் நமது ஜனங்கள் அன்னிய பாஷையை இச்சிக்கவேண்டிய அவசியமென்ன? மேற்சொன்ன சாஸ்திரங்களைச் சாமானிய ஜனங்களுக்குத் தமிழ் பாஷையில் கற்பிக்க ஒரு கலாசாலை ஏற்படுத்தினால் பழைய இலக்கிய இலக்கணத் தமிழைச் சாமானிய ஜனங்களுக்குச்

சொல்லிக்கொடுப்பதில் பிரயோஜனமில்லை. அறிவுவிசாலிப்புக்கு ஒரு பாஷை என்று அறிந்து அறிவை அறிய அநுகூலங்கள் ஏற்படுவதுதான் முக்கியம். இப்போது மதுரையில் ஏர்பட்டிருக்கும் தமிழ்ச்சங்கமானது ஆங்கிலேய புஸ்தகங்களை சொந்தமிழில்லாமல் சாதாரணமாய்த் தெரு ஜனங்கள் அறிந்துகொள்ளக்கூடிய தமிழ் நடையில் எழுதி ஜனங்களுக்குக் கொடுக்கும் பக்ஷத்தில் ஜனங்கள் சீக்கிரத்தில் விருத்தியடைவார்கள். இதுதான் இப்போது சுலபமான வழி. ஆங்கிலேயத்திலும் தமிழிலும் விற்பத்தியுள்ள தேசாபிமானிகள் சாதாரணமாக ஆங்கிலேயத்திலிருக்கும் மின்சாரம், காந்தம், ரஸாயன சாஸ்திரம், வேளாண்மை, ஆரோக்கியம் முதலான சாஸ்திர முதல்பாட புஸ்தகங்களை மொழி பெயர்த்து மேற்சொன்ன சங்கங்களைப் போன்றவைகளுக்குக் கொடுத்தால் எவ்வளவோ ஜனங்களுக்கு கண் திறந்தாற்போலிருக்கும். இந்து தேசத்தில் ஆங்கிலேய பாஷையினால் சகல ஜனங்களுக்கும் கல்விப் பயிற்சி உண்டாகக்கூடியதல்ல. தமிழ்நாட்டு ஜனங்களுக்கு பாஷையினால்தான் விமோசனம் என்று நமது ஜனங்கள் அறியவேண்டியது அதிக அவசியம்.

எம். டி. சுப்பராய அய்யர் பி. ஏ., பி. எல்.

"மரபு."

## முப்பொருள் நிறைவு.

---

முப்பொருள நிறைவாவது, பதிவியாபகமென்னுந் தாரக நிறைவாயிருக்கும், பசுவும் பாசமும் வியாத்தமென்னுஞ் சம நிறைவாகவிருக்கும். இந்தச்சம நிறைவாகிய இரண்டு பொருளுந் தாரக நிறைவாயிருக்கின்ற பதியில் வியாப்பியயென்னும் ஒன்றிலடங்கின நிறைவாயிருக்கும். இது எதுபோலவென்னில், சமுத்திரவெளியிலே உப்புஞ்சலமுங் கலந்து அடங்கியிருப்பதுபோலவென்றறிக.

தற்புருஷ சிவம்.

## இன்சொல்.

உலகத்தில் மனிதர் யாவரும் செய்யும் புண்ணிய பாபங்கள் எல்லாம் மானச, வாசிக, காயிகமென மூன்று வகையாற் பிரிக்கப்படும். அவற்றுள், மானசமாவது—மனதினுற் செய்யப்படுவது. வாசிகமாவது—வாக்கினுற் செய்யப்படுவது. காயிகமாவது—உடம்பினுற் செய்யப்படுவது. இம்மூன்றில் வாக்கினுற் செய்துக்கொள்ளப்படும் புண்ணியங்கள் நான்கு அவை—உண்மை பேசுதல், கோள் சொல்லாதிருத்தல், பிரயோஜனமுள்ள வார்த்தைகளையே பேசுதல், இன் சொற்கூறல் என்பனவாம். இதனை ஓர் தமிழ்ப் புலவர்

> "பொய்யே, குறளை, கடுஞ்சொல் பயனில
> சொல்லெனச் சொல்லிற் றேன்றுவ நான்கும்.

என எதிர்மறை வகையிற் கூறியிருக்கின்றனர். (மணிமேகலை)

இவ்வின்சொல் எத்தகையதென ஆராயுமிடத்து, அன்பு கலந்ததாயும், வஞ்சகமற்றதாயும், கேட்பதற்கு இனிமையும் உறுதியும் தந்து மனமகிழச் செய்வதாயும் உள்ளதே எனப் புலப்படும். நாம் பேசும்போது சில சமயத்தில் நம்மைச் சூழ்ந்திருப்பவர் நகைமுகங்கொண்டு இன்புறுகிறதையும், சில சமயத்தில் முகம் அழுங்கித் துன்புறுகின்றதையும் நாம் பார்த்திருக்கின்றோமன்றோ? அதற்குக் காரணம் சொல்லும் சொற்களே என்றுணரவேண்டும்.

நமக்கு மற்ற அவயவங்களை வலியவாகப் படைத்த கடவுள் நாவைமட்டும் அவ்வளவு மிருதுவாகப் படைத்துவைத்த தன்மையை உய்த்துணருமிடத்து நாம் ஒவ்வொருவரும் இனிய சொல்லைப் பேசவேண்டுமென்பது அவருடைய நோக்கமென்பது தெற்றெனத் தோன்றும். ஆகவே நாம் வன்சொல் வழங்குவது கடவுளுடைய ஆஜ்ஞையை மீறி நடப்பதேயாகும். பிறர் மனம் நோகச் செய்கிற தன்மையினுல் வன்சொல் வழங்குவது பாபமெனக் கொண்டனர் நமது முன்னேர்.

நாம் வழங்கக்கூடிய வார்த்தைகளில் இனிய சொற்களைப் பொறுக்கியெடுத்துக்கொள்ளாமல் கடினசொற்களையே பேச ஆரம்பிப்பது, "நல்ல பழம் இருக்கவும் அதனை விரும்பாது, காயை விரும்புவது போலாகும்" என்று தமிழ் வேதம் (திருக்குறள்) கூறுகின்றது. "ஒருவன் பிறனபேசும்போது இனியசொல் தனக்கு இன்பந்தருவதை நோயறிந்து வைத்தும், கடினமான சொல்லை வழங்குவது எதனாலேயோ தெரியவில்லையே" எனவும் அது கூறுகின்றது.

இன்சொல் கூறுபவர்களை யுலகமே விரும்பும், அதனால் பகை வரும் சிநேகர் ஆவர். நம்முடைய காரியங்களையும எளிதில் சித்திக்கப் பெறலாம். சதுர்வித உபாயங்களிற் சிறந்தது, இநத உபாயமே. (சாமோபாயம்) இதனால் காரிய சித்தி பெறுவது சர்க்கரையிற் பித்தம் நீங்கப் பெறுவதுபோலாம். நமது ஏவலாளரிடத்திலும் இனிய சொல்லை யுபயோகிப்போமானால், அவர்கள் மகிழ்ச்சிகொண்டு நாம் ஏவிய வேலைகளை மிக நன்றாய் முடித்துத் தருவார்கள். இந்த இன் சொல்லுக்கு, நகைமுகமும், வஞ்சக மற்ற மனமும் இன்றியமையாத சகாக்கள் ஆகும்.

"இனிய சொற்களையும் வலிய சொற்களையும சண்டைக்கு விட்டால் இனிய சொல்லே ஜயம் பெற்று நிற்கும்; இனிய சொற்களுக்கு இருக்கும் சக்தி வலியசொற்களுக்கு இல்லவே இல்லை." என்று நமது தமிழ் மூதாட்டியார் கூறுகிறார். அது:—

> "வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
> பட்டுருவும கோல்பஞ்சில் பாயாது—நெட்டிருப்புப்
> பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
> வேருக்கு நெக்குவிடும்" என்பதாம்.

இதில் எவ்வித உதா ரணம் காட்டி யிருக்கிறார்? முறையே, பெரிய யானையின் மீதுபாய்ந்து உருவியோடத்தக்க ஒரு பாணமானது ஒரு சிறிய பஞ்சிமூட்டையின் மேற் பிரயோகிக்கப்படுமானால் தான் பாய வலியற்றுப் போவதோடு கூர்மையும் மழுங்கி விடுகிறது. இரும்பினாலாகிய கட்டப்பாரை என்னும் ஆயுதக்

திற்கும் பிளவுபடாத வலியபாறை ஒரு செடியினது மிக நுண்ணிய வேருக்கு அத்யாச்சரியமாகப் பிளந்து போகிறது என உதாரணங் காட்டியிருக்கிறார்.

ஜனங்கள் தங்களை யலங்கரித்துக் கொள்ளும்படி பலவித ஆபரணங்களைப் பல அவயவங்களிலும் அணிந்து கொள்கின்றனர். ஆனால் எல்லா அவயவங்களிலும் சிறந்ததாகிய கண்ணுக்கு ஓர் ஆபரணமும் அணிவதில்லை. தாக்ஷிணிய குணமே அதற்கோர் ஆபரணமாகும் என்று நாயனார் கருதுகிறார். "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்" என்ற குறளால் அது விளங்கும். இக்காலத்திலோ மூக்குக் கண்ணாடியை அழகுக்காகவும் நமது வாலிபர்களிற் சிலர் கண்ணுக்கு அணிந்து கொள்கின்றனர். ஆயினும் வாயிற்கு ஓர் ஆபரணமும், அவர்கள் அணிவதில்லை. அதற்கும் ஆபரணம் நமது நாயனார் கூறாமல் விடவில்லை. அது வணக்கமான வார்த்தையும், இனிமையான சொல்லுமாம் என்கின்றார்.

"பணிவுடையன் இன்சொல்லன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப்பிற"

என்ற குறளால் அது விளங்குகிறது.

'இனிய வார்த்தை பேசுகிறவர்கள் வேறெவ்வித உதவியும் பண்ணாவிடினும் ஜனங்கள் அவர்களை விரும்புகின்றனர். கடிய வார்த்தை பேசுகிறவர்கள் உதவி செய்கிறவர்களா யிருந்தபோதிலும் ஜனங்கள் அவர்களை வெறுக்கின்றனர். ஒரு உதவியும் செய்யாத குயிலின் குரலை மகிழ்வதும், நமது அழுக்கு வஸ்திரங்களை முதலியவற்றைத் தூக்கி யுதவுகிற கழுதையின் குரலை வெறுப்பதும், போல என்னும் கருத்தை யடக்கி

"மென்மதுர வாக்கால் விரும்பும்சகம் கடின
வன்மொழியினால் இகழும் மன்னுலகம்—நன்மொழியை
யோதுகுயி லேதங் குதவியது கர்த்தபம்தான்
ஏதபரா தம்செய்த தின்று.

என்றும் செய்யுள் கூறப்பட்டிருக்கின்றது.

உலகத்திற்குக் குளிர்ச்சியைத் தருகின்றவற்றுள் சந்திர னது அமிர்தமயமாகிய நிலவே நல்ல குளிர்ச்சியையுடையது ; அதனினும் சந்தனம் சிறந்தது; இவ்விரண்டினும், தீக்ஷண்ய புத்திசாலிகள் பொறுமையோடு சொல்லும் அன்பு கலந்த வார்த்தையே மிகவும் சிறந்தது என்னும் கருத்தடங்கிய மற்றொரு செய்யுளும் உண்டு அது :—

திங்களமிர்த கிரணம் மிகச் சீதளமே
திங்களினும் சந்தனமே சீதளமாம்—இங்கிவற்றின்
அன்பறிவு சாந்தம் அருளுடையோர் நல்வசனம்
இன்பமமிகும சீதளமா மே"

என்பதாம்.

ஒருவன் செய்கின்ற எவ்வகைப் புண்ணியச் செயல்களினும் "இன்சொல்" சொல்லுவதுபோற் சுலபமாய்ச் செய்துகொள்ளக் கூடிய எந்தப் புண்ணியமு மிங்கில்லை. இதனை

யாவர்க்குமா மிறைவற் கொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற் கொருவாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே" என்று திரு

மூல நாயனர் தமது அருமைத் திருவாக்கால் வெளியிட்டிருக்கின்றனர்.

சில சமயங்களில் இன்சொல் வன்சொல்லாகவும், வன்சொல் இன்சொலலாகவும் மாறுபடலாம். எங்ஙனம் எனில், நமது பெரியோர்களும் நண்பர்களும் நாம் செய்கின்றகுற்றத்தைக்கண்டு கடிந்துரைக்கலாம். அப்போது அது வன்சொல்லாகவே யிருந்தபோதிலும, முற்றிலும் நம்முடைய உறுதியையே கருதுவதாயிருத்தலான் "மாசற்ற நெஞ்சுடையோர் வன்சொலினிது" என்று அதை, இன்சொல்லாகவே கொள்ளவேண்டும்.

சிலர் நம்மை ஏமாற்றவேண்டியும் கெடுக்கவேண்டியும் இன்சொல் சொல்லலாம். அப்போது அதை வன்சொல்லாகவேபாவிச்

கவேண்டும். "அவர்கள் முகம் தாமரை போலவும், வார்த்தை சந்தனம் போலவும், நம்பத்தகுந்ததாயிருக்க, மனம் மாத்திரம் கத்திரிக்கோல் போலிருக்கும்" என்று

"செங்கமலப் போதலர்ந்த செவ்விபோலும் வதனம்
தங்குமொழி சந்தனம்போலும்—பங்கிபெறி
கத்திரிகை போலும் இளங்காரிகையே வஞ்சமனம்
குத்திரர்பால மூன்றுகுணம்"

என்றும் செய்யுளிற் கூறப்படுகிறது,

சிலர் வாய்க்குமட்டும் இனிப்பாகப் பேசிக் காரியத்தில் ஒன்றும் செய்யாமல் மெல்ல நழுவவிடுவார்கள், அப்படிப்பட்ட வெளிப் பூச்சுக்காரருடைய வார்த்தையையும் வன்சொல்லோடொன்றாய் வைத்துவிடவேண்டும். 'வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்கு' என ஒரு பழமொழியும் இதுபற்றி வழங்கப்படுகின்றது.

இதுகாறுங் கூறியவற்றால், 'இன்சொற் கூறல்' வாக்கினாற் செய்துகொள்ளப்படும் புண்ணியங்களிலொன்றென்பதும், அதன் தன்மை யித்தகையதென்பதும், நாம் இன்சொற் கூறவேண்டுமென்பதே கடவுளுடைய நோக்கமென்பதும், அதனை வழக்கத்திற் கொண்டுவர உபாயம் இன்னதென்பதும், அதனால் நமக்கு வரும் நன்மையும், வன்சொல்லினும் இது சிறந்ததென்பதும், ஒரு ஆபரணம் போன்றதென்பதும், சுலபத்திற் செய்யத்தக்க புண்ணியமென்பதும், சில சமயங்களில் இது வன்சொல்லாகவே யிருக்குமென்பதும் ஒருவாறு பெறப்பட்டது.

இவ்வின்சொல்லைப்பற்றிக் கூறும் ஒரு தேவாரத்தைக் கூறி நிறுத்திக்கொள்கிறேன்.

"வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொலின்றி விலகுமின் வீடற
நஞ்சுநஞ்சு நின்றுள் குளிர்வார்க்கெலாம்
அஞ்சலென்றிடும் ஆனைக்கா வண்ணலே" (திருநாவுக்கரசு).

திருச்சிற்றம்பலம்,

அ. கந்தசாமிப் பிள்ளை.

I

உ

சுபமஸ்து.

## மைசூர் கிருஷ்ணராஜ உடையர் சாசனம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் ௲௬௱௩௰ன்மேல் செல்லாநின்ற ஆநந்த-ஹூ தை-மீ ௨-உ ஸ்ரீமது ஆத்திரேய கோத்திரம் மைசூர் சிங்காசனாதீசுர மகாராஜ-ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையர் ஐயனவர்கள் தர்மமாக முளவாய் சூழ்ந்த சங்ககிரி தாலுக்கா பத்தியம ராஜஸ்ரீ சஞ்சிவேட்டத்து ராஜா வையனவர்கள் அப்பணைப்படிக்கு காணிக்கா சமமதப்படிக்கு கீழ்கரைப் பூந்துறை நாட்டில் மோரூர், தகட்டப்பாடி, மணலி, ஆனங்கூர், குமாரமங்கலம், படைவீடு, கூத்தம்பூண்டி, கத்தாரி, சித்தனந்தூர், பள்ளிப்பாளையம், இருப்பாலி, காவல்குறிச்சி, கருமாபுரம், மோடமங்கலம் வட்டூர், தேவனாங்குறிச்சி, திருமங்கலம், சமயசங்கிலி, ஆக கிராமம் பதினெட்டு இதுக்குச் சேர்ந்த அக்கிராரம் இந்த கிராமங்களிலே இருக்கிற நாட்டுக் கவுண்டர்கள், காணியாளக் கவுண்டர்கள், பின்னும் இருக்கிற கவுண்டர்கள், குடியானவர்கள், தலத்துக் கணக்கப் பிள்ளைகள் ஒபினி பாரபத்தியக்காரர் சேனபாகர் சகலருங்கூடி சம்மதிச்சு திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுவர சுவாமியாருக்குள் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியாருக்கு, திருச்சாத்திகை திருநாளுக்கும், உச்சிக்கால கட்டளைப் படித்தர தீபாராதனைக்கும் கிராமம் ஒன்னுக்கு ஆறு பொன்னும் அஞ்சு பணமாக வருஷம் பிரதியாகத் தப்பாமல் கொடுத்து நடத்திக்கொண்டு வருகின்றோமென்று சகலரும் சம்மதிச்சு எழுதிக் கொடுத்த தாமிர சாசனம். இந்த தாமம் சந்திராதித்தர் உள்ளவரைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரியமாக நடத்தி வருவோமாகவும், இந்த தர்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி நடத்திவிச்ச பேர்களுக்கு சுவாமியார் அர்த்தபாக தரிசனையும் அஷ்ட ஐசுவரியமும் கொடுத்து ரட்சிப்பார். இந்த தர்மத்துக்கு விகாதம் நினைச்சபேர் கங்கைக் கரையிலே கோகத்தி பண்ணிய தோஷத்திலே போவார்கள். அது வந்து தர்மத்தைப் பரிபாலனம் பண்ணினபேர்கள் சுவாமியார் கிருபைபெற்று சுகமாய் இருப்பார்கள். செங்கோடர் துணை. இந்தசாசனம் குருக்கள் மார் வசம் கொடுத்தோம். சிவராம ஆசாரி கையெழுத்து.

## II

உ

சுபமஸ்து

## மைசூர் கிருஷ்ணராஜ உடையார் சாசனம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் ௧௬௩௬ன்மேல் செல்லாநின்ற ஆநந்த-வருஷம் தை-மீ உ-உ ஸ்ரீமது ஆத்திரேய கோத்திரம் மைசூர் சிங்காசனாதீசுர மகா-ரா-ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையா ஐயனவர்கள் தர்மமாக முளவாய் சூழ்ந்த சங்ககிரி துர்க்காதி பத்தியம் ராஜஸ்ரீ சஞ்சிவேட்டத்து ராசா வையனவர்கள் அப்பணைப்படிக்கு காணிக்கா சம்மதப்படிக்கு கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் முளசி, எலப்பள்ளி, உஞ்சிணை, மோளியப்பள்ளி, கோக்கிளாயி, இருப்பிலி, மண்டபுத்தூர், இளையமங்கலம், பிரித்தோக்குபாடி, அணிமூர், காட்ட சிறுநல்லூர், பட்டூர், மாவிரட்டி ஆக கிராமம் பதினொன்றும், இதுக்குச் சேர்ந்த அக்கிராமம் இந்த கிராமங்களிலே இருக்கிற நாட்டுக் கவுண்டர்கள் காணியாள கவுண்டர்கள், பின்னும் இருக்கிற கவுண்டர்கள் குடியானவர்கள், தலத்துக் கணக்கப்பிள்ளைகள் ஓபிளி பார்பத்தியக்காரர் சேனபாகர் சகலருங்கூடி சம்மதிச்சு திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுர சுவாமியாருக்கும், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியாருக்குந் திருக்கார்த்திகை திருநாளுக்கும் உச்சிக்கால கட்டளை படித்தரதிபாரதனைக்கும் கிராமம் ஒண்ணுக்கு ஆறுபொன்னும் அஞ்சு பணமாக வருஷம் பிரதியாகத் தப்பாமல் கொடுத்து நடத்தி வருகிறோமென்று சகலரும் சம்மதிச்சு எழுதிக்கொடுத்த தாம்பிர சாசனம். இந்தத் தர்மம் சந்திராதித்தர் உள்ளவரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமாக நடத்தி வருவோமாகவும் இந்த தர்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி நடத்திவிச்ச பேர்களுக்கு சுவாமியார் அர்த்தபாத தரிசனையும் அஷ்ட ஐசுவரியமும் கொடுத்து ரட்சிப்பார். இந்த தர்மத்துக்கு விகாதம் நினைச்ச பேர் கங்கைக் கரையிலே கோகத்தி பண்ணின தோஷத்திலே போவார்கள் அது அறிந்து தர்மத்தைப் பரிபாலனம் பண்ணின பேர்கள் சுவாமியார் கிருபை பெற்று சுகமாய் இருப்பார்கள். செங்கோடர் துணை. இந்த சாசனம் குருக்கள்மார் வசம் கொடுத்தோம். சிவராம ஆசாரி கையெழுத்து.

௫௨

இந்த சாஸனங்கள் இரண்டின் கீழும் இந்த எண் போடப்பட்டிருக்கிறது,

நாககிரி பண்டிதர்.

## DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

### விவசாயம்.

### பயிர்களுக்கு பூச்சிகளினால் உண்டாகும் நஷ்டங்களைத் தடுப்பதற்கான சில சாதாரண முறைகளைப்பற்றி.

---

"வெள்ளம் வருமுன் அணைபோட்டுக்கொள்" என்ற சிறந்த வாக்கியத்தில் சொல்லியிருப்பதைப்போல விவசாய முறைகளின் நோக்கமாவது பயிரில் பூச்சிகள் தோன்றி பயிர்களை நாசம் பண்ணும்படி அவ்வளவு ஜாஸ்தியாவதற்கு முன்பாகவே அவைகளைக் கொல்வதற்கான உபாயங்களாக ஏற்படுகின்றன. ஆகவே அப்பேர்ப்பட்ட விவசாய முறைகள் அதிக முக்கியமானதும், விவசாயிகள் வழக்கமாய் தங்களுடைய பூமியில் செய்கிற வேலைகளில் ஒன்றாகவும், இருக்கவேண்டுமென்றும் ஏற்படுகிறது. அம்முறைகளில் சில கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன; அவையாவன:—சுத்தமான சாகுபடி, பயிர் மாற்றல், கலப்புப் பயிர் சாகுபடி செய்தல், உழவு, விதைக்கும் பருவத்தை மாற்றல். கோழி, வாத்து, புழுபூச்சிகளைத் தின்னும் பக்ஷிகளை வளர்த்து பூச்சிகளைத் தின்னும்படி உபயோகப்படுத்தல், தக்க எருவிட்டு பயிரின் வீர்யத்தை அதிகப்படுத்தி அதினால் பூச்சிகளை வரவொட்டாமல் தடுத்தல், தண்ணீர் பாய்ச்சி வடியவிடுதல், பூச்சிகளால் பிடிக்கப்பட்ட பயிரை மாட்டுத்தீவனமாக உபயோகப்படுத்தல் ஆகியவைகளே.

சுத்தமான சாகுபடி என்றால் வயல்களிலும் அதற்கு அருகாமையிலுள்ள வரப்பு முதலிய இடங்களிலும் முளைத்திருக்கும் புல் பூண்டுகளை ஜாக்கிரதையாய்ப் பிடுங்கி அப்புறப்படுத்தலும், தவிர பயிர் அறுவடையான பிறகு தாள் முதலியவைகளைச் சேகரித்து வெளியேற்றலும் ஆகிய இவ்விரண்டு சாதனைகொண்டு தன் பயிர்களை நஷ்டப்படுத்தும் பூச்சிகளை கொல்வதற்கு ஏற்ற மிகச்சிறந்த ஆயுதமாகக் கருதவேண்டும். பூமியில் பயிர் விதைப்பதற்கு முன்னும், விதைத்த பிறகு பயிர் வளர்ந்து கொண்டிருக்-

கும்போதும் வயலில் மாத்திரமல்ல வரப்புகளிலும் அதன் பக்கத்திலுள்ள நிலங்களிலும்கூட கூடியமட்டில் புல் பூண்டுகளில்லாமலிருக்கும்படி செய்யவேண்டும். பூச்சிகளில் அநேகம் புல்பூண்டுகளில முதல் முதல் தோன்றி அதைத தின்றபிறகும தின்று கொண்டிருக்கும்போதும் அதன் பக்கத்தில் வளர்ந்துகொண்டிருக்கிற சாரமான பயிர் அதிக ருசிகரமாயிருக்கிறதென்று கண்டு பயிரில் இறங்கி மகசூலை நஷ்டப்படுத்துகிறது. இவ்விதமாய்த் தோன்றுகிற பூச்சிகளில் கம்பளிபபூச்சி ஒன்று என்பது எல்லாருக்கும் தெரியும். நெல் பயிரில் தோன்றுகிற நவாப்பூச்சியும் ஆரம்பததில் நெல்வயலகளின் ஓரங்களிலுள்ள புல்பூண்டுகளைத்தின்று ஜீவித்துக்கொண்டிருந்து நெல் பயிர் கதிரானவுடன் கதிரகளில் இறங்கி அதிலுள்ள பாலைச் சாப்பிட்டுவிடுகிறது. ஆகையால் பயிர் விளையும பூமியில்மட்டுமல்ல, அதைச்சேர்ந்த வரப்புகளிலும் அதை ஒட்டியுள்ள தரிசுகளிலுமுள்ள புல்பூண்டுகளையும் அப்புறப்படுத்துவதில் சரியான கவனம் செலுத்தப்படவேண்டும. சாகுபடி செய்யப்பட்ட ஒரு பூமியின் நாற்புறமும் சுற்றியுள்ள ஒரு தரிசு நிலமானது மிகவும் உபயோகமுள்ளதே. ஏனெனில் அதற்கு வெளியேயுள்ள நிலத்திலிருந்து தோன்றுகிற புழுக்களை சாகுபடி செய்கிற பூமிக்குள் போகவொட்டாமல் தடுக்கிற ஒரு ஏதுவாகும். அவ்வித புழுக்களும் தரிசு நிலங்களைத் தாண்டி பயிருக்குள் போவதற்குள் பக்ஷிகள் முதலிய சத்துருக்களால் தின்னப்பட்டு நாசமடைந்துபோகும்.

மகசூல் அறுவடையானபிறகு பயிரில தாள் முதலியவற்றை பூமியிலேயே விட்டுவிடுவது குடியானவர்களுக்கு வெகு சகஜமான வாடிக்கை. இப்படிச்செய்வது எல்லாப் பயிருக்கும் கெடுதலை உண்டாக்குமென்றாலும் (நெல் சோளம் முதலிய) தான்யப்பயிர்களுக்கு அதிக கெடுதலை உண்டாக்குமென்பது நிச்சயம. ஏனெனில் அப்பயிரின் தண்டைத் துளைக்கக்கூடிய புழுக்கள் அறுவடையானபிறகு பூமியில் விடப்பட்ட தாள் தட்டைகளிலேயே ஜீவித்திருந்து அதே

நிலத்தில் அல்லது அடுத்த வயலில் சாகுபடியாகக்கூடிய அவ்விதப்பயிரை பீடிக்குமென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. சோளம், கேழ்வரகு, நெல், கோதுமை இவைகளைப்போன்ற தான்யப்பயிர்கள் வெவ்வேறுவிதமான குருத்துப்பூச்சிகளால் பீடிக்கப்படுகின்றன. மேற்சொன்ன பயிர்களில் ஒன்று அறுவடையானபிறகு அதன் தாள்கள் அறுவடையாகாமல் விடப்பட்ட ஒரு வயலையும் அதன் பக்கத்திலேயே அதேவிதமான பயிர் வளர்ந்துகொண்டிருக்கப்பட்ட மற்றொரு வயலையும் நாம் சாதாரணமாய் பார்க்கலாம். முதலில் சொல்லிய பயிரின் தாள்களிலுள்ள எல்லாப் பூச்சிகளும் வளர்ந்துகொண்டிருக்கிற பயிரிலிறங்கி அதை நஷ்டப்படுத்துமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மேலும், பயிரின் தாள்களை பூமியிலேயே விட்டுவிடுவதால் கரையான் அதிகமாகி தாள்களில் அவைகளுக்கு வேண்டிய ஆகாரம் கிடையாமல் அந்த வயலில் சாகுபடி செய்யக்கூடிய மறு பயிரையும் நஷ்டப்படுத்துகிறது. இன்னும் தாள்களிலிருந்து வந்த குறுக்கு புழுக்களால் பீடிக்கப்பட்டு வீரியமற்ற பயிராயிருந்தால் அக்கரையான்கள் இன்னும் ஜாஸ்தியாகிறது. ஆகையால் விவசாயிகள் வழக்கமாய் தான்யப் பயிர்கள் அறுவடையானவுடன் அவைகளின் தாள் பட்டைகளை சேகரித்து நெருப்பிட்டு எரித்துவிட வேண்டுமென்று நாம் வற்புறுத்திச் சொல்லுவோம். அப்படிச் செய்வதில் ஷை தாள் தட்டைகளை எருவாக உபயோகிப்பதில் எவ்வளவு லாபம் ஏற்படுமோ அதைவிட அவைகளிலிருந்து வரக்கூடிய பூச்சியினால் உண்டாகும் நஷ்டம் குறையுமென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால் இதிலும் இதைப்போன்ற மற்ற விவசாயப் பழக்கங்களில் கூட்டுறவு அவசியம். ஏனென்றால் மேலே சொல்லிய படி களை முதலியவைகள் இல்லாத சுத்தமான ஒரு வயலின் அருகாமையிலும் அதன் சுற்றிலும் பூச்சிகளால் பீடிக்கப்பட்ட பயிர்கள் இருப்பதில் சற்றேனும் உபயோகமில்லை. எவ்விதப் பயிரையும் பூமியில் அவசியமாய் எவ்வளவு நாள் இருக்கவிட வேண்டுமோ அதற்கு அதிகமாய் இருக்க விடு

வது மேற்கூறிய விதமான பிசகுகளில் ஒன்று. ஏனென்றால் அவ்விதம் அதிக நாள் இருக்க விடுவது பூச்சிகள் உண்டாவதற்கு ஒரு நல்ல இருப்பிடமாகிறது. சென்னை ராஜதானியில் கம்போடியா பருத்தி சாகுபடியானது மேற்கூறியவிதமான பிசகை எடுத்துக் காட்டக்கூடிய ஒரு சிறந்த உதாரணமாக ஏற்படுகிறது. நிறம் கெட்டும் மறறும் பூசசிகளால் கெடுதலாக்கப்பட்ட எதோ கொஞ்சம் பருத்தி கிடைக்குமென்று மறுபடியும் பருத்தி விதைக்கும பருவம் வரும்வரையில் பருத்திச் செடிகளை பிடுங்கிடாமல் பூமியிலேயே இருக்கவிட்டிருப்பதை நாம்பார்க்கிறோம். இப்படி பூமியில் விட்டிருப்பதினால் மறுசாகுபடியில் விதைக்கப்பட்ட பருததிச்செடிகள பழைய செடிகளிலிருக்கும் பூச்சிகளினால் ஆரம்பத்திலேயே பிடிக்கப்படுகிறது. ஆகையால் இப்பேர்பட்ட சந்தர்ப்பத்தில் மூந்தின (பருத்திப்) பயிரின் செடிகளை வேரோடு பிடுங்கி மறுபயிர் விதைப்பதற்கு 3 அல்லது 4 மாதத்திற்கு முன்பாகவே சேர்க்கப்பட்டு எரிக்கப்படுவதே சரியான வழியாகும். அப்படிச் மூந்தின பயிர் அழிக்கப்பட்ட பிறகும் மறுபயிர் வளருவதற்கும் ஊடே இருக்கப்பட்ட சமயத்தில் இப்பூச்சிகள் ஆகாரமற்று செத்துப்போக ஏதுவாகிறது.

பயிர் மாற்றல் :—என்ற முறையை பூச்சிகளைத் தொலைப்பதற்கான விஷயங்களின் சம்மந்தமாய் சொல்லாமல் போனாலும் அது விவசாய முறைகளில் அதிக முக்கியமான விஷயங்களில் ஒன்று என்பது தெரிந்த விஷயம். பயிர் மாற்றலே பூச்சிகளைத் தொலைப்பதற்கு ஒரு வியக்தமானதும் சாத்தியமுமான மார்க்கமாக ஏற்படுகிறது மேற்சொல்லிய விதம் ஒரே பயிரை அதே பூமியில் இடைவிடாது சாகுபடி செய்வது விவசாய முறையில் பிசகென்றாலும அவ்விதம் செய்வது பூச்சிகள் விருத்தியாவதற்கும் ஒரு நேரான மார்க்கமாகிறது. பூச்சிகளைத்தொலைக்கிற விஷயத்திலும அக்கம்பக்கத்திலுள்ள விவசாயிகளுடைய கூட்டுறவு அவசியம். ஏனெனில் ஒரு குடியானவன் மாத்திரம் தன்னுடைய நிலததில் பயிரை மாற்றவும் வேறொரு குடியானவன் பயிரை மாற்றாமலிருநதுதான் பயிர்

செய்த அதே பயிர் பக்கத்திலிருக்குமானால் அதில் தோன்றுகிற பூச்சிகளை தன் பயிருக்கு வரவழைக்க ஏதுவாகும். பூச்சிகள் சம்மந்தப்பட்ட வரையில் அதே பயிர் மாத்திரமல்ல; அந்தப் பயிருக்கு நெருங்கின ஜாதிப்பயிரையும் ஒரே பூமியில் சாகுபடி செய்யக்கூடாதென்பதை முக்கியமாய் கவனிக்கவேண்டும். உதாரணமாக உருளைக்கிழங்குச் செடியும் புகையிலைச் செடியும் ஒரே இனத்தைச் சேர்ந்தது. ஆகையால் அவைகளில் ஒன்றை நாசப்படுத்துகிற பூச்சிகள் மற்றொன்றையும் பாதிக்கும். அதே மாதிரியாக மஞ்சளும், இஞ்சியும், பருத்தியும், புளிச்சை செடியும் ஒரே ஜாதியைச்சேர்ந்தவைகள். அவைகளில் ஒவ்வொரு ஜாதியிலுள்ள ஒவ்வொரு பயிரையும் ஒரே விதமான பூச்சிகள் பாதிக்கிறதாக நமக்குத் தெரியும்.

அநேக ஜில்லாக்களில் பலஜாதிப் பயிர்களைக் கலந்து விதைக்கிற வழக்கம் நடந்துவருகிறது. உதாரணமாக பல்லாரி ஜில்லாவில் மேற்கேயுள்ள தாலூகாக்களில் 5 அல்லது 6 தினுசுப் பயிர்கள் (அதாவது சோளம் முதலிய ஆகாரப் பயிர்களையும், துவரை முதலிய காயதானியங்களையும்) கலந்து ஒரே வயலில் விதைக்கப்பட்டு பயிராகிறதை நாம் பார்க்கலாம். அப்படி விதைப்பதின் நோக்கம் என்னவென்றால் ஏதோ ஒரு காரணத்தால் ஒன்று அல்லது இரண்டு பயிர்கள் பலனைத்தராமல் போனாலும் மற்றப்பயிர்களிலிருந்து மகசூல் அடையலாமென்ற எண்ணம்தான் என்று தோன்றுகிறது. இவ்விதம் விதைப்பது விவசாய சாஸ்திரத்திற்கும் மிகவும் ஒத்திருக்கிறது. ஏனென்றால் வெவ்வேறு தினுசுப்பயிர்கள் அவை அவைகளுக்கு வேண்டிய ஆகாரத்தை பூமியிலிருந்து கிரகிக்கவேண்டியிருப்பதையும் பயிர்கள் பூமியிலிருக்கிற நானாவித அணுக்கிருமிகளோடு சம்மந்தப்பட்டிருப்பதையும் விளக்கி காட்டுகிறது.

மேலும் தக்க தினுசுப் பயிர்களை கலந்து பயிரிடுவதால் அவை ஒவ்வொன்றுக்கும் வரக்கூடிய பூச்சிகள் குறையுமென்று

பதற்கு சந்தேகமில்லை. இப்படி குறைகிறதை நாம் சால் சாலாக விதைக்கப்பட்ட பயிரில் காண்கிறோம். அதின் காரணம் என்னவெனில் பயிரை சால் சாலாக விதைக்கும்போது ஒவ்வொரு சாலும் வெவ்வேறு பயிராயிருப்பதால் ஒரு சாலிலுள்ள பயிருக்கு வரக்கூடிய பூச்சியானது பக்கத்திலுள்ள பயிரைப்பீடிக்கப்பட்டது. உதாரணமாக கம்பும்வேர்க்கடலையும் கலந்து விதைக்கப்பட்டபயிரில் சுருள்பூச்சியின் உபத்திரவம், அப்படி கலந்து விதைக்கப்படாமல் தனியே விதைக்கப்பட்டவேர்க்கடலைப் பயிரிலிருப்பதைக் காட்டிலும் குறைவாகவேயிருக்கின்றது. இதற்கு காரணம் என்னவென்றால் தாய்ப்பூச்சியாகிய வண்ணாத்திப் பூச்சிகள் முட்டையிடும்போது கலந்து விதைக்கப்பட்ட பயிரில் முட்டையிட அதிக விஸ்தீரணத்தில் சஞ்சரிக்கவேண்டியிருப்பதாலும் அம்முட்டைகள் பொரித்தவுடன் அதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் தங்களுக்கு ஆகாரத்துக்குவேண்டிய தினுசுப்பயிரை தேடிப்பிடிக்க அதிகதூரம் சுற்றி அலையவேண்டியிருப்பதாலும், அவைகள் சரியானபடி விருத்தியாகாமல் தடுக்கப்படுகிறதென்பதற்கு சந்தேகமில்லை.

பூமியை உழுவது பயிர்த்தொழில்களில் சாதாரணமாய் செய்யும் வேலைகளில் ஒன்றானாலும் அதே பூச்சிகளை வரவொட்டாமல் தடுக்கக்கூடிய சிறந்த சாதனங்களில் முக்கியமானது. இப்படிப் பூச்சியைத் தடுப்பதற்கு உழும் சமயத்தில் பூமியின் மேற்புறத்தை மாத்திரம் காண்டக்கூடிய நாட்டுக்கலப்பை உதவாது. குறைந்தது 6 அங்குலம் ஆழத்திற்கு மண்ணைப்புரட்டி மடிக்கக்கூடிய இரும்புக்கலப்பைகளே ஏற்றவைகளாகும். வெட்டுக்கிளிகளின் முட்டைகள் பூமிக்குள் சொற்ப ஆழத்தில் இடப்படுகின்றன. கம்பளிப் பூச்சிகளைப்போன்ற சில பூச்சிகளும் தங்களுடைய உருமாறுவதற்கு பூமிக்குள் போகின்றன. மேற்சொன்ன முட்டைகளும் உருமாறின பூச்சிகளின் புழுக்கூடுகளும் கோடைகாலமுழுவதும் பூமிக்குள் கிடந்து மழை பெய்து மறுபடியும்

பூமிக்குள்ளேயே கிடக்கும். இந்தசமயத்தில் பூமியை உழுது புரட்டி கூடியவரையில் கட்டிகளை உடைத்துவிட்டோமானால் மேற்சொல்லிய புழுக்கூடுகளும், முட்டைகளும் தரைமட்டத்திற்கு கொண்டுவரப்பட்டு வெயிலின் உஷ்ணத்தால் கொல்லப்படும், அல்லது (பூச்சி புழுக்களைத் தின்னக்கூடிய). பக்ஷிகளால் பொறுக்கி தின்னப்படும், அல்லது காலத்தில் வெளிக்கிளம்பக் கூடாதபடி அவ்வளவு ஆழத்தில் உழவினால் புதைக்கப்பட்டு நசித்துப்போகும்.

ஆகவே யோசித்துப் பார்த்தால் பூச்சிகளைத் தடுப்பதற்காக செய்யப்படுகிற வேலையும் விவசாயிகள் வழக்கமாய் பூமியில் செய்கிற வேலைகளும் ஒன்றோடு ஒன்று சம்மந்தப்பட்டிருக்கிறதென்பது நன்றாய் விளங்கும். ஏனென்றால் மேற்சொல்லியபடி கோடைகாலத்தில் வயலை உழுவது பூச்சிகளை விருத்தியாகாமல் தடுப்பதுமன்றி அந்த பூமியில விதைக்கப்படும் பின்பயிருக்கு உபயோகப்படும்படி ஈரத்தையும் பூமியில் தங்கும்படி செய்கிறது.

விதைப்பு அல்லது அறுவடையின் காலத்தை மாற்றல்.

பட்டத்திற்கு முந்தி அல்லது பட்டந்தவறி விதைப்பதனாலும், அல்லது காலத்திற்கு முந்தி அல்லது தாமதமாக அறுவடையாகக்கூடிய பயிர் தினுசுகளை விதைத்தோ விதைப்பு அல்லது அறுவடையின் காலத்தை மாற்றுவதினால் பூச்சிகளின் சிலவற்றைவரவொட்டாமல் தடுப்பதற்கு ஒரு சாதனமாக எண்ணலாம். வருஷந்தோறும் குறித்த தவணையில் தோன்றுகிற பூச்சிகளை வரவொட்டாமல் தடுக்க விதைப்புக் காலத்தை தாமதித்தோ அல்லது பூச்சிகள் தோன்றினபிறகு பயிரை அவ்வளவு நஷ்டப்படுத்தக் கூடாதபடி அவ்வளவு அதிகமாய் வளரும்படி முந்தியே விதைக்கப்படலாம்.

நம்முடைய வீடுகளில் வளர்க்கக்கூடிய கோழி, வாத்து, வான்கோழி, மயில் முதலிய பக்ஷிகள் ஓயாமல் பூச்சிகளையே தின்னக்

கூடியவைகளாகையால், நல்ல மகசூலை அடைய விரும்புகிற ஒவ்வொரு குடியானவனும் மேல்சொல்லிய ஜந்துக்களின் உதவியைக் கோரவேண்டும். பருத்திப் பயிரைப்போன்ற மகசூலில் கோழிகள் புழுக்களைத்தின்று தாங்கள் கொழுக்கிறதையும் தவிர மகசூலிலிருக்கும் பூச்சி புழுக்களையும் தொலைப்பதில் குடியானவனுக்கு உதவியாயிருக்கிறது. காட்டுப் பறவைகளில் அநேகம் புழுப் பூச்சிகளையே தின்று ஜீவிக்கின்றன. மயினு, கருங்குருவி இவைகளைப்போன்ற பக்ஷிகள் தங்களுடைய ஆயுள் முழுவதும் பூச்சிகளைப் பிடித்துத் தின்பதிலேயே காலத்தைக் கழிக்கின்றன. ஆகையால் அவைகள் குடியானவர்களுக்கு மிக்க உபயோகமுள்ள சிநேகிதர்களாகக்கருதப்பட்டுக் காப்பாற்றப்படவேண்டும். பக்ஷிகள் தங்குவதற்காக பயிரின் ஊடே சில இடங்களில் அவைகள் உட்கார ஏதுவாக ஒரு நீண்ட கோலின் நுனியில மற்றொரு சிறு குச்சியானது குறுக்கே கட்டப்பட்டு பூமியில ஊன்றப்படுமானால் அக்கோல்களில் கருங்குருவியைப்போன்ற மற்ற பக்ஷிகள் வந்து உட்கார ஆதாரமாகும். அப்பக்ஷிகள் அப்பேர்ப்பட்ட தங்குமிடங்களிலிருந்து பயிரின் ஊடே திரிந்துக்கொண்டிருக்கும் புழுப் பூச்சிகளை பறந்துவந்து கவ்விக்கொண்டு எடுத்துப் போக சுலபமாகும்.

பயிர்களுக்கு எருவிட்டு அவைகளின் வளர்ச்சியையும் வீர்யத்தையும் அதிகப்படுத்துவதால் புழுப் பூச்சிகளை அணுகவொட்டாமலும், ஒருவேளை பூச்சிகளால் பீடிக்கப்பட்டாலும் அவைகளால் அதிகமாய் கெடுதலாக்கப்படாமலிருக்கும்படிக்கும் செய்ய சாத்தியமாகும். கொஞ்சமேனும் நோய் நொடிகளால் பீடிக்கப்படாத பயிரானது புழுப பூச்சிகளுடைய உபத்திரவத்திலிருநது தபபித்துக்கொள்ளும், ஒருவேளை அப்பேர்ப்பட்ட பயிர் அவைகளால பீடிக்கப்பட்டாலும் அதிக நஷ்டத்தை அடையமாட்டாது. நோயினால் ஏற்கனவே பீடிக்கப்பட்ட பயிரோ வெகு சுலபமாய்ப் புழுப்பூச்சிகளால் பீடிக்கப்பட்டு அதில் மகசூலும் அதிகமாய் குறைந்துபோகும்.

பூமியில் வேண்டிய ஈரமிருக்கும்போதுங்கூட தண்ணீர் பாய்ச்ச வசதிப்படுமானால் அவ்விதம் செய்வது பூசசிகளைக் கொல்வதற்கு சில சமயங்களில் ஒரு ஏதுவாகும். சில ஜில்லாக்களில் சிள் வண்டுகள் பயிர்களுக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன. அவைகள் பூமிக்குள் தாங்கள் துளைக்கும் துவாரங்களில் வசித்துக்கொண்டு இராக்காலங்களில் பயிர்களின் மெல்லிய கொழுந்துகளை வெட்டித் தங்களுடைய துவாரத்திற்குள் எடுத்துக்கொண்டுபோய் பகற்காலத்தில் தின்னும். அந்த சந்தர்ப்பங்களில் சிள் வண்டுகளால் பீடிக்கப்பட்டிருக்கிற பாகத்திற்கு தண்ணீரைக் கட்டுவதால் அவைகள் வெளியேற்றப்பட்டு காக்கை கழுகு இவைகளைப்போன்ற பல சத்துருக்களால் பொருக்கித் தின்னப்படும். வயல்களுக்குத் தண்ணீர் கட்டும் சமயத்தில் காக்கை கழுகுகள் கூட்டங்கூட்டமாய்ச் சேருவதை விவசாயிகள் பார்த்திருப்பார்கள். கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் தண்ணீர் பாய்ந்துகொண்டு முன் செலலச்செல்ல வயல் வெடிப்புகளிலிருந்து வெளிக்கிளம்பி வருகிற வெட்டுக்கிளி சிள் வண்டு முதலிய பூசசிகளை மேல் சொல்லிய காக்கை கழுகு முதலிய பக்ஷிகள் வெகு ஜாக்கிரதையாய் பிடித்து தின்றுகொண்டிருப்பதை பார்க்கலாம்.

சிலவகை புழுக்கள் வண்டுகள் முதலிய பூச்சிகளால் பயிர்களுக்கு நஷ்டம் நேரிடும்போது மேல்சொல்லிய விதம் பீடிக்கப்பட்ட வயலுக்கு தண்ணீர் கட்டுவதால் பூச்சியின் நஷ்டத்தை நிவர்த்திக்க சாத்தியமாகும், ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும் அவ்விதமசெய்து சித்தியடையலாமென்று சொல்ல முடியாது. தண்ணீர் பாய்ச்சும்போது (crude oil emulsion) என்ற மண் எண்ணெயும் சோப்பும் கலந்த ஒருவித மருந்தை ஒரு சாக்கில் போட்டு கட்டி தண்ணீர் ஓடும் வாய்க்காலில் வைத்திருந்தால், அது தண்ணீரோடு கலந்து வயலில் பாயும்போது சிலவகை பூச்சிகளை தற்காலத்திற்கேயாயினும் நிவர்த்திக்க ஏதுவாகும். நெல் பயிரின் இலையை வெட்டி அதையே கூடாக ஏற்படுத்திக்கொண்டு தண்ணீருக்குள்ளேயும் வசிக்க சக்தியை உடையதும், வேண்டிய போது வெளியே வந்து நெற்பயிருக்கு நஷ்டத்தை உண்டுபண்

னுகிற (case worm) கேஸ் வொர்ம் என்ற பூச்சியை நிவர்த்திக்க வயலிலிருந்து தண்ணீரை பாச்சுவதற்கு எதிரிடையாக தண்ணீரை வடியவைப்பதால் அப்பூச்சியை நிவர்த்திக்க சாத்தியமாகிறது.

சில சந்தர்ப்பங்களில் பூச்சிகளை கையினுல் பொறுக்கி எடுப்பது சாத்தியமாகும்போது செடி பயிரை விதைக்கலப்பையினுல் சால் சாலாக விதைப்பதினுலும் நாற்றுகளை சால் சாலாக நடுவதிலும் இருக்கும் உபயோகம் தெளிவாய் புலப்படும். உதாரணமாக பருத்திப் பயிரை சால் சாலாக விதைக்கும்போது அப்பயிர் பூச்சிகளால் பீடிக்கப்பட்டால் ஒவ்வொரு வரிசை வரிசையாய் போய் சால் தவறுலும், செடிகளையும் தவறவிடாமல் ஒவ்வொரு செடியிலும் இருக்கப்பட்ட பூச்சிகளைப் பிடிப்பது சுலபமாகுமென்பது எளிதில் புலப்படும், சால் சாலாக நடப்படாத வயலிலோ அவ்விதம் செடிகளை தவறவிடாமல் பார்ப்பது கஷ்டமாகும். சால் சாலாக விதைக்கப்பட்ட பயிரில் பூச்சிகள் தோன்றினுல் அதைக் கண்டுபிடிப்பது சுலபமாயிருப்பதல்லாமல் சால் சாலாக விதைக்கப்பட்ட பயிரை மாடுகளைக்கொண்டு பயிரடித்து பூச்சிகளைப் பரவவொட்டாமல் செய்வதும் சுலபமாகும். அவ்விதம் சால் சாலாக விதைக்கப்பட்ட பயிரை களைப்பதும் சுலபமாகையால் களைக்கப்பட்ட பிறகு வயலில் விடப்பட்ட மற்ற வலுவான செடிகள் பூசசிகளால் அவ்வளவு சுலபமாகப் பீடிக்கப்படமாட்டாது.

தா பெயின்பிரிக்கீ ப்ளேச்சர்,
லேட் கவர்ன்மெண்டு பூச்சி சாஸ்திரி.

## கைகாட்டிமரமும் வழிகாட்டுகிறவனும்.

ஒரு மனிதனிருந்தான். அவன் சொந்த தேசம் அவனுக்குப் பிரியமில்லை. அதை விட்டுவிட்டு வேறொரு இன்பமுள்ள தேசத்திற்குப் போகவேண்டுமென்று அவன் மிகுதியாய் ஆசைப்பட்டான். அப்பேர்ப்பட்ட தேசத்தின் பேர் அவனுக்குத் தெரிந்தது. அதற்குப் போகிற வழியோ தெரியாது. அவன் ஊரில்

ஐந்து வழி சந்திக்கும் ஓரிடமிருந்தது. வழிகள் எங்கே போகிறது என்று சொல்ல ஐந்து கைகாட்டி மரங்களிருந்தன. ஒவ்வொரு வழிக்கு ஒரு மரம். நமது பிரயாணி, இவ்விடத்திற்கு வந்து மரம் மரமாகப் போய் அவைகளுக்கு முன்பாகநின்று அவைகளின்மேல் எழுதியுள்ள வார்த்தைகளை வாசித்தான். கடைசியாக ஐந்தாம் மரத்தினருகில் வந்து அதைப்பார்த்தான். அது "இன்பமுள்ள தேசம" என்று சொல்லிமரக் கைநீட்டு வழி காண்பித்தது. சுந்தரம் என்னும் நமதுபிரயாணி அதைக் கண்டு மிகுதியாய்ச் சந்தோஷப்பட்டு அவ்வழியாய்ப் போக உடனே புறப்பட்டான்.

அவன் போகவேண்டிய வழி சுலபமான வழியல்ல. சில இடங்களில் நல்ல மரங்கள் இருந்தன. அங்கே நிழல் அதிகம். வேறு இடங்களிலோ நிழல் கிடைக்கவே கிடைக்காது. அவன் அநேகந் தடவை பயங்கரமான வனாந்தரங்களைக் கடந்துபோக வேண்டியதாயிற்று. அவைகளில் தண்ணீரில்லை நிழலுமில்லை. மணல், கல், முள் இவைகள் மாத்திர மிருந்தன. சில சமயம் அவன் பெரிய ஆறுகளைக் கடக்கவேண்டியதாயிருந்தது. துறைகளெங்கே என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆகையால் அவன் மோசமான இடங்களில் கடக்கப் பிரயாசப்பட்டு பள்ளங்களில் விழுந்து அநேகந்தடவைகளில் மரணத்துக்குச்சரியான கஷ்டத்தை அடைந்தான். இரண்டு இடங்களில் வழிப் பக்கமாய் மனிதர் எலும்புகள் கிடக்கக் கண்டான். கண்டு பயந்து இதென்னவென்று யோசித்துக் கொண்டிருந்தான். கொஞ்சநேரத்திற்குள்ளே "ஓகோ! தெரியுமே எனக்கு முன் வந்த பிரயாணிகளின் எலும்புகள் இவைகளாமே. கள்ளர் அவர்களின்மேல் பாய்ந்து அவர்களைக் கொன்றுவிட்டு அவர்களின் பணத்தைத் திருடியிருக்கிறார்கள் ஓகோ! ஓகோ பாவம்!! " என்று கூக்குரலிட்டு ஓடிப்போனான். கள்ளர் மறைவிடம் எங்கே என்று அவனுக்குத் தெரியாதபடியால் அவர்கள் தன்னையும் எப்பொழுது பிடிப்பார்களோ என்று தெரியாமையால் அதிக திகிலோடு பிரயாணம் செய்தான். கடைசியாக வழி இரண்டு பிரிவாகப் பிரிந்த ஓரிடத்

திற்கு வந்தான். எந்த வழியாய்ப் போகவேண்டுமென்று அறியாமல் சிலமணிநேரம் அதைப்பற்றி யோசித்து யோசித்து கடைசியாக தற்செயலாக அவ்விரண்டில் ஒன்றைத்தெரிந்துகொண்டு அதில் போனான். நான்கு நாளைக்குப் பிற்பாடு அது முடிவுக்கு வந்தது. அதற்கப்பால் கஷ்டமில்லை காடு மாத்திரமிருந்தது. அங்கே மனிதரில்லை, வீடில்லை, கைகாட்டி மரமுமில்லை அதைக் கண்டு அந்தரம் தரையில் உட்கார்ந்து ஐயையோ! வழி தப்பினேன், நான் சகித்த துன்பங்களெல்லாம் வீண், இன்னும் என்ன செய்வேன் என்று அதிகமாய்த் துக்கித்தான். அப்பொழுது எழுந்து இனிமேல் நான் இன்பமுள்ள தேசத்தைத் தேடுவதில் என்ன பிரயோஜனம் எனச் சொல்லி வந்த வழியாய்த் திரும்பி தான் பிறந்த ஊருக்குப்போகச் சென்றான்.

இப்பொழுதும் துக்கத்தோடும் ஊரில் வந்து சேர்ந்தபோது ஐந்தாம் கைகாட்டி மரத்தைக் கண்டான். உடனே கோபத்துடன் தடிகொண்டு அடித்து மரமே, நான் சகித்த துன்பங்களுக்கெல்லாம் நீ தான் காரணம், உன்னைப்போல மோசக்காரனில்லை. இந்த பயங்கரமான வழியை நீ ஏன் காண்பித்தாய்? நான் உன்னை வெட்டித் தீய்க்கு இரையாக்குவேன் பார் என்று சொல்லி அதைப் பிடிக்கப்போனான். அச்சமயம் தற்செயலாக ஒரு ஞானி அவ்வழியாய் வந்து நடக்கிற சங்கதிகளைக் கண்டார். அவர் அவனைப் பார்த்து "நில்லப்பா! நில்!! நீ என்ன பைத்தியம் பிடித்தவன். அது காண்பித்த வழி சரியான வழிதான். ஆனாலும், அது ஒரு மரமே. அது உன்னோடு கூடவந்து ஆபத்தில் உனக்கு உதவி செய்ய முடியுமா? அப்படி செய்ய கைகாட்டி மரத்தால் முடியாது. உனக்கு வழி காண்பிக்கிற மனுஷன் ஒருவன் வேண்டுமே. கேள் அப்பா! நீ போக விரும்புகிற தேசம் எனக்கு நன்றாய்த் தெரியும். நான் அங்கே பிறந்தவன், அங்கே போகிற வழி முழுவதும் எனக்கு நன்றாய்த் தெரியும், நான் இப்போது அங்கே போகிறேன், உனக்குப் பிரியமானால் நீ என்னோடுகூட வரலாம் வருவாயா? என்று கேட்டார். அதற்கு சந்தோஷத்தோடு "சந்தோஷத்தோடு வருகிறேன்" என்றான்.

அடுத்த நாள் காலமே இவ்விருவரும் இன்பமுள்ள தேசத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். சுந்தரம் முன்னே போனவழியே அவர்கள் போனார்கள். இப்போதோ முன்னிருந்த கஷ்டங்கள் இருக்கவில்லை. ஏனென்றால் ஞானிக்கு வழி நன்றாய்த் தெரியும். ஆறுகளைக் கடக்கவேண்டிய சமயங்களில் அவர் அதோ! அங்கே துறையிருக்கிறது. நாம் அங்கே கடந்துபோவோம் என்று சுந்தரத்தை அதிக ஜாக்கிரதையாய்க் கடக்கச்செய்தார். சில தடவை அவர் "நாளைக்கு நாம் வனாந்தரம் வழியாய்ப் போக வேண்டும், மத்தியானத்திலே நாம் கடந்துபோனால் வெயில் அதிகமாகும், அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன் நாம் எழுந்திருந்து பிரயாணம் செய்தால் மத்தியானமாக இரண்டு மூன்று நாழிகைக்கு முன் ஒரு தோப்பிற்குள் செல்லுவோம். அங்கே நாம் கொஞ்சம் நேரம் இளைப்பாறலாம் என்றார்." இன்னும் சில தடவை அவர் "இதற்கப்பால் இரண்டு மூன்று மைல் தூரத்திற்குள்ளே கள்ளர் மறைவிடம் ஒன்று இருக்கிறது, நாம் இருவர் மாத்திரம் அவ்வழியாய்ச் சென்றால் ஒருவேளை அவர்கள் நம்மைப் பிடித்துக் கொன்றுவிடுவார்கள், இன்னும், சில பிரயாணிகள் வரும்வரை நாம் காத்திருந்து, அவர்களைச் சேர்ந்து கூட்டமாக அவ்வழியாய்ப்போனால் நல்லது." என்று புத்திமதி சொல்லுவார். வழி இரண்டு பிரிவாகப் பிரியும் இடங்களிலும் அவர் இதுதான் சரியான வழி வா! என்று சொல்லி அதில் செல்வார். சுந்தரம் அவருடைய புத்திமதிகளுக்குச் செவிகொடுத்து அவருக்குப் பின் சென்று கடைசியாக இன்பமுள்ள தேசத்தில் வந்து சேர்ந்து அநேக வருஷம் அங்கே வசித்தான்.

அவனை விட்டுவிடுகையில் ஞானி பிரயாணியைப் பார்த்து "ஐயா! நானும் அந்த மகாகாட்டிமாரும் இரண்டு விதமான குருக்கள். ஒரு மனிதன் "நான் இருக்கிற நிலைமை நல்லதல்ல இதை விட்டு நான் மோட்சம் அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டு" ஒரு குருவிடம் வந்து "சுவாமி, மோட்சம் எனக்கு வேண்டும். நான் எப்படி அதை அடையலாம் என்று கேட்டால், சிலவேளை அக்குரு அதோ அங்கே வழி இருக்கிறது அதில் நடந்துபோ

னுல் மோட்சம் உனக்குக் கிடைக்கும் என்று சொல்லுவார்." அவனே, அவ்வழியாய்ப் போகிறதில்லை, அநுபவத்திலே அது அவனுக்குத் தெரியவேயில்லை. பிரயாணி தனிமையாய்ப்போக அவனை விடுகிறான். மோசமும், சந்தேகமும் சோதனையும் வரும்போது அவன் உதவி செய்கிறதில்லை. ஆனாலும், என்னைப்போன்ற ஒரு குரு இருக்கிறார். அவர் "அதோ! அங்கே போ!" என்று சொல்லாமல் என்னோடுகூட வா என உன்னை அழைக்கிறார். நீ போகவேண்டிய வழியே அவரும் போய் உனனுடைய துன்பங்களில் பங்கிட்டு சந்தேகம், மோசம் கஷ்டம் வரும்போது உன் பக்கத்தில் நின்று உதவிசெய்து, உன்னை மோட்சலோகத்தில் சேர்ப்பார். அப்படிப்பட்ட குருவையே தேடித்தேடி அவருக்கே செவிகொடு ஐயா! என்று புத்தி சொல்லி செலவுபெற்றுப் போய்விட்டார்.

ரேவரண்டு-T. C. உவிட்னி பி.ஏ.

## மிளகு.

மிளகுக் கொடியானது மலபாரில் (மலையாள தேசத்தில்) ஒரு விசேஷமான பயிர். இது தற்காலத்திற்கூட மலைத்தொடர்களிலுள்ள உன்னதமான காடுகளில் யாராலும் பயிரிடப்படாமலே தானுயுண்டாகும் காட்டுச் செடிகளைப்போற் காணப்படுகிறது. இங்கேயிருந்து ஒரு திக்கில் குடகு (Coorg) வைனாட் (Wynad) பரியந்தமும் மற்றொரு திக்கில் நேர்குறுக்கே சமுத்திர பரியந்தமும் பரவி யிருப்பதுடன், மரங்களடர்ந்த ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு சிறு மிளகுத் தோட்டம் வைத்துண்டாக்கப்பட்டிருக்கிறது. மிளகுச்செடி பூர்வீகத்தில் மலபார் (மலையாள தேசத்து) பயிராகவே யிருந்ததெனினும் அது மற்றப் பாகங்களுக்குப் பரவித் தற்காலத்தில் ஆஸ்திரேலியா பரியந்தமுள்ள எல்லாத் தீவுகளிலும் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றன. இக்காரணத்தால் மிளகின் முக்கிய வியாபாரஸ்தலம் இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு மாறிவிட்டது. தெல்லிச்சேரி (Telli-

cherry)யைவிட சிங்கப்பூரில் நூறு மடங்கு சரக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் மலபார் (மலையாள தேசத்து) மிளகு, ஏற்றுமதியின் அளவில் பின்தாங்கிவிட்டபோதிலும் வியாபாரிகள் தெல்லிசேரி மிளகையே அதிசிலாக்கியமானதென்று இன்னும் எண்ணுகிறார்கள். இது இந்தியாவின் மேற்கு சமுத்திரக்கரையில் மாத்திரம் பயிரிடத்தக்கது.

இந்துதேச சரித்திரத்தில் மிளகின் சம்பந்தமானது மிகவும் விசேஷமானதாயிருக்கிறது. இந்தியாவின் தற்கால நிலைமைக்கு அநுகுணமாயிருந்தது மற்றெல்லாப் பயிரையுமவிட மிளகேயென்று ஒரு வகையாகச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. இந்தியாவைச் சுற்றிப்பார்த்து 'ஆராய்ந்துபோகவந்த ஐரோப்பியர்களுடைய கவனத்தையும், ஐரோப்பிய வியாபாரிகளுடைய முக்கிய கருத்தையும் முதல் முதல் கவர்ந்தது இந்த மிளகேயாம்.' நன்னம்பிக்கை முனையை (Cape of Good Hope) சுற்றி பெயர்பெற்ற கப்பல் யாத்திரை செய்த வாஸ்கோடிகாமா (Vasco de Gama) என்பவர் மலபாருக்கு (மலையாள தேசத்திற்கு) வந்ததும் மிளகின் விலையை நயமாக்குவதற்கு வழி ஏதாவது உண்டாவென்று கண்டுபிடிப்பதற்காகவே. மேல்சமுத்திரக்கரையில் போர்த்துக்கல் தேசத்தார் (Portuguese) குடியேறினதற்குக் காரணமும் அதுவே. ஐரோப்பாவில் இந்த மிளகு வியாபாரத்தில் வேறொருவருக்கும் யாதொரு பாத்தியதையுமில்லாமல் தாங்களே ஒப்பந்தமாய் வியாபாரம் நடத்திவந்த டச்சுத்தேசத்தார்கள் (Dutch) இதற்கு பின்வந்தார்கள். இவர்கள் மிளகின் விலையை உயர்த்தினதினால்தான், தனவந்தர்களாகிய சில லண்டன் (Loudan) வியாபாரிகள் ஒன்றுகூடி இந்தியாவுடன் மிளகு வியாபாரம் நேரே செய்யத் தீர்மானித்து ஈஸ்ட் இந்தியா கம்பெனி (East India Company) யென்று ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள். ஆகவே இந்துதேச சரித்திரத்திற்கே எப்போதும் ஒரு முக்கிய அடையாளமாயிருந்து ஓயாத உள்நாட்டுக் கோரச் சண்டை சச்சரவுகளை ஒழித்துப் பற்பல நாட்டார்களையும் ஒற்றுமைப்படுத்தி, ஒரே ஆளுகைக்குள்ளாக்கி இத்தேசத்தை ஆங்கிலேய சுவாதீனமாக்கியது மிளகே முதற்காரணமாயிருக்கிறது.

மிளகுக்கொடி சாகுபடி செய்தல் மிகவும் வருத்தமில்லாத காரியம். கொடி வளர்ந்து தொத்துவதற்கு ஆதாரமாய் நடப்பட்ட மரத்தில் கொடி தொத்திக்கொண்டபின் இந்தப் பயிருக்கு அதிகக் கவனம் செலுத்தவேண்டியதில்லை. எவ்வளவு அஜாக்கிரதையாயும் கவனம் செலுத்தாமலும் பயிர் செய்தாலும் இந்த ஒவ்வொரு வருஷமும் தோட்டக்காரர்களுக்குத் தீர்வையைச் செலுத்த உபகாரமாகும்படி கொஞ்சம் நல்ல மகசூலைக் கொடுக்கும். ஆனால் எந்தத் தோட்டத்திலிருக்கும் மிளகுக்கொடிகளும் பலன் தருவதிலும் மற்ற விஷயங்களிலும் வெவ்வேறு வகையாயிருப்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயம். சில வகைகள் நன்றாயும் சில மாதிரிகள் கேவலமாகவும் வளர்கிறது. சில வகைகள் நன்றாய்க் காய்பிடித்துப் பலன் கொடுக்கும். மற்றும் சில எட்டிலோ பத்திலோ காய்த்து அற்ப சொற்பமாய்ப் பலன் கொடுக்கும். மிளகுச் செடிகளில் குண லக்ஷணங்களை அறிந்து, அனந்த விருத்திசெய்து, மிளகுத் தோட்டக்காரர்களுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் கவர்ன்மெண்டார் தாலிப்பரம்பா (Taliparamba) என்னுமிடத்தில் மிளகு சாகுபடி செய்ய ஒரு பண்ணையை ஸ்தாபித்தார்கள். மிளகுக் கொடிகள் நடுமுன்னே இன்னின்ன இனுசுகள் நல்லதென்றும், இன்னின்னவைகள் நல்ல பலன் தராவென்றும் பகுத்தறிவது இப்போது மிக எளிதான காரியமென்று தெரியவந்திருக்கிறது. இவ்விஷயங்களைக் குறித்து வேண்டிய சமாச்சாரங்களை அறிய விரும்புகிறவர்கள், அந்தப் பண்ணை மானேஜர் அவர்களைக் கேட்டுக்கொண்டால் அவர் மிகச் சந்தோஷத்துடன் தெரிவிப்பார். நல்ல மாதிரிச் செடிகளையும் உபயோகமற்றவைகளையும் வைத்துப் பயிராக்கச செல்லும் செலவு ஒன்றாகவே இருக்கும். மிளகைச்சாகுபடி செய்வதில் தற்காலத்தைவிடச் சற்று அதிகக்கவனம் செலுத்துவதினால், அப்படிச் செலுத்திய கவனத்திற்கு மிகவும் அதிகமாகவே அதன் மகசூல் வருஷாவருஷம் இருக்கும். மிளகுச் செடியிலிருந்து மகசூல் கிடைக்க மிகுந்த நாள் ஆகுமென்பது வாஸ்தவம். இக்காரணத்தைக்கொண்டு அநேகர் அப்படிப் பிரயாசை எடுப்பதில் பிரயோஜன மில்லையென்று சொல்ல இட-

மூன்று. வெகு நாட்சென்று விசேஷபலன் தராத ஒரு வகைச் செடியை வைத்துப் பரிபாலிப்பதைப் பார்க்கிலும், நெடுநாட் சென்று காய்ப்புக்கு வரக்கூடியதாயும் சரியானபடி பலன் தரும் வகைச் செடியையே வைத்துப் பரிபாலிப்பது உத்தமம். பின் சந்ததிகளின் பிரயோஜனத்தையும் இலாபத்தையும் உத்தேசித்தாவது சிதோஷ்ண மழைப்பேதங்களால் எளிதில் கெடுதியடையாமல் பொறுத்துக் காய்க்கும் வழிபமாதிரி மிளகுச் செடிகளுக்குச் சற்று கவனம் செலுத்துங்கள். நல்ல மாதிரிகளைப் பார்த்துத் தெரிந்தெடுங்கள். வேர்களைச் சுற்றிக் கொஞ்சம் ஒவ்வொரு வருஷமும் தோண்டி, தோட்டத்தில் மற்றப் பாகங்களிலிருந்து மக்கிய இலைசருகுகளையும் வீட்டைச் சுற்றி அகப்படும் குப்பையையும் சேகரித்து அக்கொடிகள் தொத்தியிருக்கும் மரத்தின் அடியில் ஒரு சிறு குவியலாகப் போடுங்கள்.

ஸி. எ. பார்பர்,
கவர்ன்மெண்டு தாவர சாஸ்திரி.

உ
பரமபதி துணை.

# விக்கிரகச் சிற்பம்.

---

### பால கணபதிக்கு,

தேங்காய் ஒரு கை, மாமபழம ஒரு கை, வாழைப்பழம் ஒரு கை, பலாப்பழம் ஒரு கை, கரும்பு ஒரு கை, மோதகம் ஒரு கை ஆக கை ௬, பால சூரியனைபபோல் வர்ணம்.

### தருண கணபதிக்கு,

இடதுகைகளில் ஒருகை பாசம, ஒருகை விளாம்பழம், ஒருகை நாவற்பழம், வலதுகைகளில் அங்குசம ஒருகை, எள்ளுருண்டை ஒருகை, மோதகம் ஒருகை ஆக கை ௬, இரத்த வர்ணம்.

(இன்னும் வரும்)

ஏகாம்பர ஸ்தபதி.

உ

கடவுள் துணை.

# கொங்கு.

## முதற்பாகம்.

காப்பு.

விருத்தம்.

கொங்குதேர் வாழ்க்கை யென்றகை கூடற்கோக் கொருபாத் தீட்டும்
கொங்குகு கொன்றை வேணிக் கூத்தனார் மதலை காக்குங்
கொங்குவார் பொழில்களெல்லாம் கொங்குவீ சுதலாற் பேர்கொள்
கொங்குநீ டியலை யன்பிற் கொங்கெனச் சிறியேன் சொல்ல.

## நூல்.

### முதல் அதிகாரம்.

சொல்லாலும், நினைவாலும் அளத்தற்கு அரிய ஒப்புயர்வற்ற கடவுளால் தோன்றிய உலகங்கள் பல அவற்றுள் இப்பூவுலகமும் ஒன்று. இப்பூவுலகமானது, சமுத்திர நீரால் சூழப்பெற்று நிலமும் நீருமாகக் காணப்படுகின்றது தரையாக இருந்த இடம் சமுத்திரமாகவும், சமுத்திரமாக இருந்த இடம் தரையாகவும் சிற்சில பகுதிகள் மாறுதலடைதலும் உண்டு. சமுத்திரத்தாலும், பெரிய பர்வதங்களாலும், பூமியின் பகுதிகள் பிரிவுபடும். புராண இதிகாசப்பிரகாரம், ஜம்புத்தீவு, சாகத்தீவு, குசத்தீவு, கிரவுஞ்சத்தீவு, இலவுததீவு, கோமேதகத்தீவு, புட்கரத்தீவு என ஏழுதீவுகள் உண்டு. இவற்றுள் நாம் வசிப்பது ஜம்பு (நாவல்) தீவு. இந்த நாவலந்தீவு ஆனது, பாரதகண்டம், கிம்புருடகண்டம், அரிவிருதகண்டம், இளாவிருதகண்டம், இரமியகண்டம், இரணியகண்டம், பத்திராவத கண்டம் என ஒன்பது கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (சிவதருமோத்திரம் கோபுரவியல்)

கிழக்கே கீழ்சமுத்திரம், பர்மா, அசாம் தேசத்தையும், தெற்கிலே கன்னியாகுமரியும், மேற்கிலே மேல்சமுத்திரம், பாரிசு தேசம், ஆப்கானிஸ்தான் பெலுசிஸ்தானமும், வடக்கிலே தார்தாரிதேசத்தலையுங்கொண்டு இமயமலைக்கும், தெற்கு சமுத்திரத்க்கும நடுவிலிருக்கும் இந்த இந்துதேசமே பரதகண்டமென்று சொல்வது இதைத்தான் கரும பூமி, புண்ணிய பூமியெனபது. இவ்விதேசத்தான் பிராமணர் முதலிய ஜாதியினர் விளக்குவது. யாகாதி கிருதநியமங்கள் ஒக்குவதும் இவ்விடமே.

கங்கை, யமுனை, பிரமபுத்திரி, சிந்து, முதலானநதிகள் வடக்கிலும, நருமதை, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி, தாமிரபருணி, துங்கபத்திரை முதலிய நதிகள் தெற்கிலும் உண்டு. வடக்கே இமயமலையும், தெற்கே பொதியமலையும், நடுவே விந்திய மலையுமிருக்கிறது. விந்தியமலைக்கு வடக்கே உள்ளது வட இந்தியா, உத்திரதேசம் கௌடதேசமாம். தெற்காக உள்ளது தென் இந்தியா தக்ஷிண தேசம், திராவிட தேசமாம்.

சரசுவதி நதிக்கும், திருஷத்வதி நதிக்கும் மத்தியிலுள்ள தேசத்துக்கு பிரமவர்த்த தேசம் என்று பெயர் (மநு க-கஎ) கங்கா நதிவரையிலுள்ள குருக்ஷேத்திரம, மச்சதேசம, பாஞ்சாலதேசம், வடமதுரை முதலியவைகளுக்கு பிரமரிஷி தேசம் என்று பெயர் (மநு 1-19) இமோறபர்வதத்துக்கும் விந்திய பர்வதத்துக்கும் நடுவாயும் விசனசதேசத்துக்கு கிழக்காயும பிரயாகைக்கு மேற்காயும் உள்ளவைகளுக்கு மத்தியதேசம் என்று பெயா. (மநு க-உக) இந்தியாவின் மேலசமுத்திர முதல் கீழ்சமுத்திரம் வரையிலும், வடக்கே இமயகிரிமுதல தெற்கே விந்தகிரிவரையிலுள்ளதேசமெல்லாம்சேர ஆரியாவர்த்தம் என்றுபெயா (மநு க-உஉ)

## பஞ்சகௌடம்.

மூன்கூறிய உத்தரதேசமாகிய கௌடதேசமானது, ஐந்து பிரிவினை யுடையது. ஸ்ரீசைலமுதல், பதரிகேதாரம் வரையில்

உள்ள இடம் சுத்தகௌடம் என்றும், அயோத்திமுதல் காசிவரை யிலுள்ள இடம் கானுகோ பிஜகௌடம் என்றும், டில்லிமுதல் அன்திருபுரிவரையிலுள்ள இடம் ஜராசந்த கௌடம் என்றும், மிதிலைமுதல் பங்காளம் வரையிலுள்ள இடம் மாந்தலிகௌடம் என்றும், ஜகநாதமுதல் ஒட்டியம் வரையிலுள்ள இடம உத்கல கௌடம் என்றும் பெயராம்.

தக்ஷிண தேசமாகிய திராவிடதேசமும் ஐந்து பிரிவினை யுடையது. கன்னியாகுமாரி முதல் காளத்தி வரையிலுள்ள இடம் கர்னுடகம் என்றும, காளத்திமுதல் கஞ்சம் வரையிலுள்ள இடம் ஆந்திர தேசம் என்றும், மைசூர் முதல் கோலகொண்டா வரையிலுள்ள இடம் கன்னடதேச மென்றும, கோலகொண்டாமு தல் மேற்கு சமுத்திரம் வரையிலுள்ள இடம மஹாராஷ்டிர தேசம் என்றும், குஜராத்திமுதல டில்லிவரையிலுள்ள இடம கூர்ஜர தேசம் (இந்துஸ்தான்) தேசமென்றும் பெயராம். இந்தப் பத் துப்பிரிவினைகளும் வைதிக விஷயம் பற்றியது. ஆரியர்கள் வடக்கே இருந்து தென்முகம் நோக்கிக்குடியேறி அப்போது அப்போது தங்கின தேசங்களுக்கு அவ்வப்பொழுது அமைந்த பெயர்களெனத்தெரிகிறது.

ஐம்பத்தாறு தேசம்.

இந்த இந்தியாவை ஆளுகைவகையில ஐம்பத்தாறுதேசங் களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன :—

அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம் இலாடம், இய வனம், ஒட்டியம் கஞ்சம், கலிங்கம், கன்னடம, காசம, காஸ் மீரம, காந்தாரம், காம்போஜம், கிராடம, குருகு, குடகம், குந்தளம், குருகுலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங் கணம், கோசலம, சகம, சவ்வீரம், சாலவம, சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம, திராவடம், துளுவம, தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பலல

வம், பாண்டியம், புளிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம் என்பவைகளே.

இவற்றுள்ளே காளத்திமுதல் கன்னியாகுமரிவரையிலுள்ள இடத்தைக் கன்னடமெனப் பெயரென்று முன்னே சொல்லப்பட்டதன்றோ; அவ்விடத்தை நம் தமிழர் எப்பெயரால் அழைத்தார்கள் என்பதைப்பற்றிச் சற்று விசாரிக்கலாம்.

## உ-வது அதிகாரம்.

## தமிழகம்.

"சம்புத்தீவினுள் தமிழகமருங்கில்" என மணிமேகலையினும் "இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க" எனப் பதிற்றுப்பத்தினும், "இமிழ்கடல் வரைப்பிற்றமிழகமறிய" எனச் சிலப்பதிகாரத்தும், செவ்வனே விளங்கக் குறிப்பிடுவதால் இத்தமிழ் தேசமானது தமிழகம் எனப் பழயகாலத்தே வழங்கிவந்தது என்பது நன்கு தெரிகின்றது. இத்தமிழகம் என்ற பெயரைத்தான் 1750 வருஷங்களுக்குமுன் இத்தேசங்களுக்கு வந்துபோன தூரதேசயாத்திரிகனாகிய டாலமி என்னும் யவனபண்டிதர் குறிப்பில் லிமிரிக் எனவும், 1600-வருஷங்களுக்கு முன் வரையப்பட்டதென்னும் பியூடெஞ்சர் படங்களில் டிமிரிக் எனவும் மாறுபட்டு அந்த அந்த பாஷைகளில் எழுதப்பட்டிருக்கிறது. இதனால் நம் தமிழ்நாட்டின் ஆதிப்பெயர் தமிழகம் என வழங்கினதாக அந்நியதேசத்தாரின் சாக்ஷியமும் சொல்லப்படுகிறது.

### தமிழக வரம்பு.

இத்தகைய தமிழகமும் என்னும் தமிழ் நாட்டின் எல்லை எதுவரையுள்ளது என்பதைப்பற்றி இப்பொழுது ஆராய்ந்து பார்க்க வேண்டியது அத்தியாவசியமானதால் அதனையும் சற்று விசாரிக்கலாம். "குணகடல் குமரிகுடகம் வேங்கடம் எனுநான்கெல்லையினிருந்தமிழ்க்கடலுள்", எனப் பவணந்தியார் நன்னூலினும்;

"வேங்கடங்குமரி தீம்புனற்பௌவத் திந்நான்கெல்லையினிருந்தமிழ் பயின்ற" எனச்சிலப்பதிகாரம் உரைப்பாயிரத்தும், "தென்குமரி வடபெருங்கற் குணகுட கடலாவெல்லை" எனப் புறநானூற்றினும், "வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்தமிழ் கூறு நல்லுலகத்து" எனத் தொல்காப்பியத்தும் கூறப்பட்டிருத்தலால் தெற்கில் கன்னியாகுமரியும், வடக்கில் திருவேங்கட மலையும், மேற்கிலும் கிழக்கிலும், சமுத்திரமுமான எல்லையை யுடையது எனத்தெரிகிறது.

## செந்தமிழ் நாடு.

"குமரிவேங்கடங் குணகுடகடலா மண்டிணிமருங்கிற் றண்டமிழ்வரைப்பிற் செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிருபகுதியின்" எனச்சிலப்பதிகார சுற்றுக்கட்டுரையிற் சொல்லியபடி, செந்தமிழ்நாடு கொடுந்தமிழ்நாடு எனத்தமிழ்நாடு இரண்டு பகுதியாகின்றது. அவை கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு, வைகையாற்றின் தெற்கு, மருதயாற்றின் வடக்கு இதனிடையே உள்ளது செந்தமிழ் நாடு என்பர்.

## கொடுந்தமிழ் நாடு.

பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலையமாநாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு; என்னும் பன்னிரண்டு நாடுகளும், செந்தமிழ்நாட்டுத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பால் இறுதியாகச் சூழ்ந்துள்ள கொடுந்தமிழ்நாடுகள் எனத் தொல்காப்பியம் எச்சவியல் "செந்தமிழ் சேர்ந்த" என்னும் சூத்திரத்துக்கு சேனாவரையர், நச்சினார்க்கினியர் எழுதிய உரைகளால் தெரிகிறது.

## தென்மதுரை, கபாடபுரம்.

தென் சமுத்திரத்திருந்த பாண்டி நாட்டில் தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றுக்கும் இடையே, எழுநூற்றுக்காவத வாறும், இவற்றின் நீர்மலிவானென்

மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்பாலைநாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ் குறும்பனைநாடும், ஆன நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும், கடல்கொண்டு விட்டதால சமுத்திரமாய்விட்டது. இவ்விதம் சமுத்திரம் பெருங்கடலாக்கியதற்குக் காரணம், முன்னொரு காலத்தில் பாண்டியன், கடல் சுவறவேலெறிந்த பகையைப்பொறாதகடல், பின்னொருகாலத்தில் நாட்டைக்கொண்டது என "வடிவேலெறிந்த வான்பகை பொறாது, பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள" எனச்சிலப்பதிகாரத்துக் கூறப்பட்டுளது.

## காவிரிப்பூம்பட்டினம்.

இக்கடற்கரையில் காவிரி சங்கமமாகுமிடத்தில், நகருள் கள்வர் புகுவாராயின் அவரைமயக்கிக் கால்கடுப்ப ஊரைவலம் வரச்செய்யு மியல்பினை யுடைய வெள்ளிடை மன்றமும், எவ்வகையான பலநோய்களையும் அகற்றும் பொய்கையுள்ள இலஞ்சிமன்றமும், பித்தேறினோர் நஞ்சுண்டோர் பாம்புகடிக்கப்பெற்றோர் பேய்பிடித்தோராகிய இத்தகையினர் துன்பொழிப்பதாகிய நெடுங்கன்மன்றமும், தவவேடத்தில் மறைந்து தீமைபுரிந்தொழுகுவோர் முதலினோரைப்புடைத்துண்ணும் பூதம நிற்றலையுடைய நாற்சந்தியாகிய பூத சதுக்கமன்றமும், அரசன் செங்கோல கோணியவழி, அங்குள்ள பாவை யதனை யுணர்த்தற்கிடமாயுள்ள பாவைமன்றமும் என்ன ஏகாட்டுமில்லாத இவ்விதமான ஐந்து சபைகளையு முடையது காவிரிப்பூம பட்டினம். சம்பாபதி, புகார் என்னும் மறுபெயரும் இதற்குண்டு. இதனை ராஜதானியாகக்கொண்டு ஆண்டுவரும் நெடுமுடிக்கிள்ளியென்னும் அரசன, தன் முன்னோர்கள் நடத்திவந்த இந்திரவிழாவைச் செய்யாது விட்டனன். இந்திரன் ஏவலால் சமுத்திரம பொங்கி இக்காவிரிப்பூம் பட்டினமும, அதனைச் சேர்ந்த பிற இடமும்

கடல்கொண்டுவிட்டது; என்பதை மணிமேகலை. ஆபுத்திர னொடு மணிபல்லவமடைந்த காதையில் "வடிவேற்கிள்ளி........ வானவன் விழாக்கோள் மாநகரொழிந்து, மணிமேகலா தெய்வம் மற்றது பொறா ஆள், அணிநகர் தன்னை அலைகடல் கொள்கென, இட்டனள் சாபம் பட்டதிதுவால், கடவுள் மாநகர் கடல்கொள" எனக்கூறப்பட்டிருத்தலால் கீழ்சமுத்திரம் பரவிவிட்டது. இவ் வாறு இலக்கியங்களால் கடலான இடம்போக மீதியுள்ள நாடுகள் தான தமிழ்நாடு தமிழகம் என விளங்குகின்றது.

## ௩-வது அதிகாரம்.

### தமிழ்.

தமிழ்நாடு என்னும்பெயர் தமிழ்மொழிபற்றி வந்தபெய ராக இருத்தலின் இந்தத் தமிழைப்பற்றிச் சிறிது விசாரிக்கவே ண்டியது அவசியமாக இருக்கிறது.

திராவிடமென்றமொழி, காலஅளவில் திரமிளமென்றாகிப்பின் னர் தமிழ் என்றாயிற்று என்பர் சிலர். தமிழ் தெலுங்கு, கன்ன டம், மஹாராஷ்டிரம், கூர்ச்சரம் என்னும் ஐந்து பாஷைகளுக் கும், அல்லது இந்த ஐந்து பாஷைகள் வழங்கும் இடத்துக்குத் திராவிடம் எனப்பெயராக வழங்குகிறது. பொதுப்பெயராக வழங்கும் திராவிடமென்பது சிறப்புப்பெயராக எவ்வாறு மருவி (தமிழ்) ஒரு பாஷைக்கு வழங்கக் கூடும் என அதனை மறுப்பர் சிலர். தமிழ் என்பது மதுரம், இனிமை, மென்மை யெனப் பொருள்கொண்டு விளங்குவது. "இனிமையு நீர்மையுந் தமி ழெனலாகும்" (பிங்கலந்தை) "தமிழியன் மென்னடை மடந்தை யர் சார." (பெருந்திரட்டு) தெலுங்கு முதலிய மற்றை வடபுல எழுத்துக்களைப்போல உந்தல், உரத்தல் முதலான சடினசத்த மின்றி மென்மையாய் இனிமையோடுகூடக் கேட்போருக்கும் உச்சரிப்போருக்கும் மதுரம் விளைவிக்கத்தக்கது ஆதலின் தமிழ் என்றபெயர் தமிழேயாகும். சம்ஸ்கிருதம் வடநாட்டிலும், தமிழ் தென்னாட்டிலும் வழங்குதல் நோக்கி, சமஸ்கிருதத்தைவடமொழி யென்றும், தமிழைத்தென்மொழியென்றும் கூறுவர். வடக்கின்

கண் வழங்கும் பற்பலமொழிகளுக்கு ஆரியம் (சம்ஸ்கிருதம்) பிறப்பிடமாகும். தென்னாட்டில் வழங்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகளுக்குத் தென்மொழி (தமிழ்) பிறப்பிடமாகும். இதனால் வடமொழி தென்மொழியென்னும் இரண்டு பாஷைகளும், இங்கு வழங்கும் மற்றைமொழிகட்கெல்லாம் பழமைப் பெருமை யுள்ளனவாம. இவ்விரண்டு பாஷைகளும் தெய்வத்தோற்ற முடையனவாய்த் தெய்வத்தன்மையுடைய ரிஷிகளால் வளர்க்கப்பட்டன வென்பது, இவ்விரு பாஷையினரின கோட்பாடாம்.

சிவபெருமான் பாணினிமுனிவருக்கு வடமொழி வியாகரணத்தையருளியதுபோலவே, அகஸ்தியமுனிவருக்கு தமிழ் இலக்கணத்தை அருளினர். "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்—தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தும், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகனார்," (காஞ்சி-பு-தழுவக்-உச-அ) "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்....இருமொழியு மான்றோரேதழீஇ னார்..." 248) எனக் கூறப்படுகிறது. கல்வியிற் பெரிய கமபநாடரும் "தழற்புரை நிறக்கடவுள் தந்த தமிழ் தந்தான்" (ஆரணிய-அகத்தியப்படலம் சக) என வலியுறுத்துகின்றார்.

வடமொழியைச் சிருஷ்டி ஆரம்பத்தில் இறைவன் அருள, அந்தந்த ஊழிதோறும் வியாசராக ஒவ்வொரு தேவர் தோன்றித் திருத்துதல் செய்தல்போலவே, செந்தமிழும் படைப்பு முதலிலேயே அருளப்பெற்று, அந்த அந்த ஊழிதோறும் அவதரிக்கப்பெற்ற தெய்வப்புலமையோரால் செப்பனிடப்படுதலான் எக்காலத்தும் குறையின்றி விளங்கும். எக்காலத்தும தமிழ் உண்டு என்பது "என்றுமுளதென்றமிழியம்பி யிசைகொண்டான்" (அகத்தியப் படலம் சஎ) என்பதால் விளங்கும்.

சிவபெருமான் இமயமலையில் பார்வதி தேவியாரை மணங் கொண்ட காலத்து எல்லாத் தேவர் முனிவர்களும் ஆங்கு நின்ற

காலத்துத் தென்புலம் உயர்ந்து வடபுலந்தாழல் கண்ட விண்ணவரா தியர் வேண்டுதலும், குறுமுனியை இனிதிரேக்கிப பொதியை சென்று வருதியென இறைவன கட்டளையிட்டருள, முனிவன் வணங்கி, இறைவ! ஆங்குள்ளவர் செந்தமிழிற் சிறந்தார். அவ ரிடை யெவ்வாறு உறைவேன், அத்தமிழை யெளிபெற்றுப புகட்டி யருளுதல்வேண்டுமென வேண்டியவாறு முற்றுணர்ந்தோன் அருளி னனெனக்கந்தப் புராணம் கூறு நின்றது.

இதையனுசரித்தே நச்சினார்க்கினியரும், தொல்காப்பியப்பா யிரவுரையிலே "தேவரெல்லாங்கூடி யாம சேர இருத்தலின் மேரு தாழ்ந்து தென்றிசையுயர்ந்தது. அதற்கு அகத்தியனாரே ஆண்டி ருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்றி சைக்கட்போதுகின்றவர், துவராபுரிப்போந்து நிலங்கடந்த நெடு முடி யண்ணல வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண் கோடி வேளிருள்ளிட்டோரையும் கொண்டு போந்து காடுகெடுத்து நா டாக்கிப் பொதியின்கண் இருந்தனர்" என்பர். இதனை இராமாயணம் ஆரணியகாண்டம் பதின்மூன்றும் அதியாயத்தில்:—

"பகவான அகஸ்தரிஷி ஸ்ரீராமனை நோக்கி, ராகவா! இத்தே சத்தினது வரலாற்றை உள்ளவாறு கூறுவேன் கேட்பாயாக."

"பார்க்கவமஹாரிஷியினது சாபத்தால் தண்டகனுமழிந்து, அவன் தேசமாகிய இதுவும் மக்களும் விலங்குகளும் வாழப்பெறாத தாயிற்று".

"விந்தியகிரியினது அடிவாரமுதல் தெற்கே ஆயிரம் யோசனை தூரம் வரையும் மழை வீழ்தலும், சுகமான காற்று வீசுதலும் இல்லை.

மிக்க பயங்கரமுடையதும், கொடியதும், கனற்புகை சூழ்ந்தது மாகிய காடாய்ப் பலலாயிரம் வருஷம் நிர்மானுஷியமாய்க்கிடந்தது".

"பின்னர் வெள்ளிமயமாகிய இமயத்தினின்றும் இங்கு வந் தேன். பர்ஜந்ன்னியனென்னும் ஜலதேவதையோடு மேகங்களைக்கொ ணர்ந்தேன்".

"இமயத்திலிருந்து நானாவித ஓஷதிகளும் கொணர்ந்து வளர்க்கப்பட்டன".

"மீண்டும் அழகிய தாமரை ஓடைகளும் நதிகளும் குளங்களும் அமைக்கப்பட்டன".

"அலர்ந்து செழித்தடர்ந்த திவ்விய வனங்களும் பல்வகைத் தான்யங்களும் விளைகின்ற விளைபுலன்களும் உண்டாயின".

"வனங்களெல்லாம் இருடி குடிகொண்டார்கள். மனதுக்குக் களிப்பைத்தருகின்ற காட்சிகளையுடைய தேசமாயிற்று" என்றார் என வான்மீகிரிஷி கூறியுள்ளார்.

அகஸ்தியர் தமிழ்நாட்டிற்கு எழுந்தருளி அகத்தியம் என்னும் இலக்கணநூல் செய்வதற்குமுன் இருந்த இலக்கணநூலானது குமரவேளாலருளிச்செய்த "குமாரம்" என்பது. குமாரக் கடவுளிடத்து அகத்தியர் தமிழ் பயின்றார் என்பதை "சேந்தனைக்கந்தனைச் செங்கோட்டுவெற்பனைச் செஞ்சுடர்வேல்—வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை" என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்துக்கூறியுள்ளதும் ஓர்க. சில ஆராய்ச்சியாளர் இன்னும் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். நிற்க,

---

## தமிழ்ச்சங்கம்.

### தலை.

சுப்பிரமணியரிடம் தாம் கற்ற தமிழுக்கு இலக்கணம் செய்யத் தொடங்கித் தன் பெயரால் அகத்தியமென ஒருநூல் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப் பன்னீராயிரம் சூத்திரத்தால் இயற்றினர். அந்நூலைத் தம்பாற் கற்கும் தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பிகன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் பன்னிருமாணாக்கர்க்குங் கற்பித்தனர். மாணாக்கர் பன்னிருவருள் முதல்வராய தொல்காப்பியரென்,

பவர் முத்தமிழில் இயற்றமிழை வேறு பிரித்துத் தம் பெயரால் தொல்காப்பியம் என ஒரு நூலை செய்தருளினர். அக்காலத்துக் காய்சினவழுதி யென்னும், பாண்டியனால் தென் மதுரையில் ஆதியில் ஒரு தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. முதலிலானதாலதை முதற்சங்கமெனபர். தமிழாய்ந்தோர் அகத்தியாதியர் பலர். அத்தலைச்சங்கம் காய்சினவழுதி முதல கடுங்கோன் வழுதி காலம் வரையினும் இருந்தொழிந்தது

இடை.

அதன்பின்னர் வெண்டேர்ச்செழியனால் கபாடபுரத்தில ஒரு தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனை இடைச்சங்கமென்பர். தமிழாராய்ந்தார் அகத்தியனும், தொல்காப்பியரும், ஏனைப்பல ஆசிரியர்களும். இச்சங்கமிருந்த கபாடபுரத்தைத்தான் இராமாயணம் கிஷ்கிந்தகாண்டம் "கோதாவரியாற்றையும் மற்றும் எல்லா வற்றையும் காண்பீர். அவ்வாறே ஆந்திர, புண்டர சோழ பாண்டிய கேரள நாடுகளையும் காண்பீர். (௪௧ அத்தியாயம் ௧௨ சுலோகம்) பொன்னிறைந்ததாயும் அழகுடைத்தாயும் முத்துமணி இவற்றால் இணைக்கப்பட்டதாயும் உள்ள பாண்டியர் வாயிற்கதவை வானரர்கள் போய்க் காண்பீர் (௧௮, ௧௯ சுலோகம்), என வான்மீகி முனிவர் கூறியதாகும்.

கடை.

இவ்விடைச் சங்கமிருந்த கபாடபுரம் கடல் விழுங்கியபின், முடத்திருமாறனென்னும் பாண்டியனால் இப்போதுள்ள உத்தர மதுரையில் ஒரு சங்கம் நிறுவப்பட்டது. இதனைக்கடைச்சங்கமென்பர். தமிழாராய்ந்தார், சிறுமேதாவியார், கபிலர் பரணர் நக்கீரர் கல்லாடர் முதலியோர். இச்சங்கத்துக்கதான் திருக்குறள் முதலிய நூல்கள் அரங்கேறியது என்பர்.

வச்சிரநந்தி சங்கம்.

இச்சங்கங்களுக்குப்பின் விக்கிரம சகாப்தம் 526-ல் (கி. பி. 470) பூச்சியபாதர் என்பவரின் மாணாக்கரான வச்சிரநந்தி என்பவரால் மதுரையில் ஒரு சங்கங்கூட்டப்பட்டதென்று திகம்பர தரிசனம் என்

லும் சமண சமய நூலிற் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சங்கம் எத்தனைநாள் நடைபெற்றது என்றும் தெரியவில்லை. ஆனால் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் காலத்தில் மதுரையிற் சைனர் அழிந்துவிட்டதால் அதன்பின் இருந்திருக்கமாட்டாது. அந்த நாயனார்காலத்து விளங்கிய பாண்டியன் திருநெல்வேலி வென்ற நெடுமாறன். அப்பாண்டியனுடன் யுத்தம் செய்தவன் நந்திபோதவன்னுடைய சேனாபதியான உதய சந்திரன் என்பான். உதயேந்திரம் முதலிய இடங்களிலுள்ள சாசனங்களால் கி. பி. 710 முதல் 760 வரையில் அவனிருந்தகாலம் எனவும், இச்சங்கத்தான் கிளிவிருத்தம், எலிவிருத்தம் முதலிய நூல்களை உண்டாக்கியதாகும் எனபதற்கு,

> கூட்டுணூர் கிளியின் விருத்த முரைத்ததோ ரெலியின் றொழில்
> பாட்டு மெய்சொலிப்பக்கமே செலுமெக்கர் தங்களைப் பல்லறங்
> காட்டியே வருமாடெலாங்கவர் கையரைக்கழிவொன்றிலா
> சேட்டைசட் கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே.

எனச்சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத்தாலறிகக வேண்டியிருக்கிறதென்று, சாசனப்பரிசோதகரான ஸ்ரீமான் து. அ. கோபிநாதராவ அவர்களின் அபிப்பிராயம்.

## பொய்யாமொழிப்புலவர் சங்கம்.

தமிழ்ச்சங்கம் இல்லாத குறையை நினைந்து வருந்தி அழிந்த சங்கத்தைக்கூட்டக்கருதிய பொய்யாமொழிப்புலவர் மதுரையை அடைந்து பாண்டிய ராஜனைக்கண்டு தங்கருத்தை உணர்த்தினர். பாண்டியன் கொண்ட அபிப்பிராயத்தைக்குறிப்பாலுணர்ந்து, சங்கத்தார் மண்டபத்தையடைந்து அங்கு விளக்கும் திருவுருவங்களைப் பார்த்து,

> உங்களிலே நானொருவ னொவ்வுவனோ வொவ்வேனோ
> திங்கட்குலனறியச்செப்புங்கள்—சங்கத்துப்
> பாடுகின்ற முத்தமிழ்என் பன்னூலு மேற்குமோ
> ஏடெழுதா ரேரெழுவீ ரே.

என்றுபாட, சங்கப்புலவர் திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ்செய்தன. இதனைக்கண்ட பாண்டியன், வியந்து இப்பொற்றாமரை நீர்த்தத்தே மூழ்கிப்போன தெய்விக சங்கப்பலகை மிதக்கும்படி பாடிவீரேல சங்கத்தைக்கூட்ட இசைவேன் எனறனன். பொய்யாமொழிப புலவரும்,

பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாறனறிய மதுராபுரித் தமிழோர்
வீறனையே சற்றே மித.

என்னும் வெண்பாவைக்கூறுதலும், சங்கப்பலகை மிதந்து எழுந்து பின்பு தாழ்ந்தது என்பர். இச்சங்கத்தே சீவக சிந்தாமணி அரங்கேறியதென்று கூறுவர். இச்சங்கத்தைத்தான் சடகோப ஆழ்வார் மானபங்கப்படுத்தியதென்றும் சொலகிறாகள்.

சுவடிறக்கத்தொடாசைக் கனிற்றைத்தொடாந்திரண்டு
கவடிறக்கட்டிய பாசத்தனைக்கண் பரிந்து சங்கங்
குவடிறக்குத்திய மாறப்பெயர்க் கொலையானை நங்கா
யிவடிறத் தொன்றும் படாங்திவான மிருள்கின்றதே.

எனச்சடகோப ரந்தாதியில் கம்பர் கூறியிருத்தலுங் கவனிக்கத்தக்கது.

மற்றைச்சேர, சோழ அரசர்கள் இதுபோற் தமிழ்ச்சங்கம ஸ்தாபிக்காவிடினும் நல்லிசைப்புலவர்களை மிகவும் ஆதரித்து வந்ததோடு தமிழ் நூல்கள் செய்ய வல்லவர்களாகவும் இருந்தார்கள்.

அவர்களன்றிச் சிற்றரசர்களான வேளிர்கள் தமிழ் மொழியைமெத்தவும் அபிமானித்து வளர்த்து வந்தார்கள். சமண பௌததர்களும் பல இலக்கிய இலக்கண நூல்கள் செய்து வளர்த்தார்கள. இவ்விதமாகத்தமிழ்க்கலை பெருகி வந்தது. பின்னர், திருவாவடுதுறை யாதீனம் முதலியவற்றாலும, சேது சமஸ்தானம் போன்ற சமஸ்தானங்களாலும், அங்கங்குள்ள சில உபகாரிகளாலும்சில தமிழ்

வித்துவான்களை வைத்து ஆதரித்துத் தமிழை யபிமானித்து வளர்க்கப்பட்டு வந்தன. மஹமதிய அரசாட்சியில் தமிழ்மொழி குன்றியது, பின்னர் ஆங்கிலேய அரசாங்கத்தில் வர்த்தகம், ராஜாங்க நடவடிக்கை முதலியனவெல்லாம் இங்கிலீஷிலேயே நடத்தப்படுகிற படியால் தமிழபிமானம் மிகவும் குறைந்துபோயிற்று.

---

## நான்காம் சங்கம்.

இதனையறிந்து வருந்திய அருந்தமிழ் விநோதரான சேது சமஸ்தானம், பாலவநத்தம் ஜமீன்தார் ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் கடந்த சுபகிருது வருஷத்தில், பல அறிஞர்களைக் கூட்டி மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் ஸ்தாபித்தனர். மாணவர்களுக்குத் தமிழறிவிப்பான் வேண்டிச் "செந்தமிழ்க் கலாசாலை," பல நூல்களைச் சேகரித்து, வாசிப்போர்க்குதவுமாறு, "பாண்டியன் புத்தகசாலை" பரிசோதித்துப் பிரசுரிப்பதற்குத் "தமிழ்ச்சங்க முத்திராசாலை" என்பனவும் ஸ்தாபித்தனர். தமிழ்ப்பரீக்ஷைகள் நடத்தி பரிசுகள் கொடுத்துந் தமிழைவளர்த்தனர். இவ்வமயத்துப் பெருங்கொடை வள்ளலாரான ஸ்ரீமத் விஜய ரகுநாத பாஸ்கர சேதுபதி மஹாராஜா அவர்கள் இந்த ஸ்தாபனங்கள் நன்னிலையில் நடைபெற்று வளர்ந்தோங்குமாறு வேண்டும் பொருளுதவி புரிந்து, அவ்வுதவி என்றும் நிகழுமாறு தக்க சாதனமும் அளித்தார்கள். அதன் பின்னர், ஸ்ரீமத். ராஜ ராஜேசுவர சேதுபதியவர்களால் அக்கிராசனம் வகித்துத் தமிழ்ச் சங்கத்தை வளர்த்து வரப்படுகிறது.

## தமிழ் நாட்டுக் குடிகள்.

### ஆரியர்-திராவிடர்.

முதலதிகாரத்தில் வடக்கிலிருந்து ஆரியர்கள் குடியேறினதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு. இந்து தேசத்தின் வடமேற்கேயுள்ள பார்சீகக் குடிகளான ஆரியர்கள் அதிபூர்வீக காலத்திலே இவ்விந்தியாவில படிப்படியாகக் குடியேறி வரும்

போது, அவர்க்கு முன்னும் பின்னும் வடமேற்குத்திசையினின்று வேறு சில சாதியார்கள் குடியேறினார்கள் என்பது புதிய சரித்திர நிபுணர்களது அபிப்பிராயம். இத்தேசத்துப் பழங்குடிகளுடன் போராட வேண்டியிருந்ததுடன் தங்களைப்போலக் குடியேறிய விதேசிகளுடனும் ஆரியர் போர்புரிந்து அடக்கவேண்டியிருந்தது. ஆரியர்கள் தம் அறிவாற்றலால் இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடையிலுள்ள பிரதேசத்தைத் தம் அடிப்படுத்திக்கொண்டார்கள். அப்பிரதேசத்துக்கு "ஆரியாவர்த்தம்" எனப் பெயரிட்டார்கள். விந்திய மலைத் தொடர்ச்சியானது அடர்ந்த காடாக இருந்தமையால் அதன் தெற்கே குடியேறவில்லை. விந்திய மலைக்குத் தெற்கே வந்தவர்கள் மறுபடி திரும்பிச் சென்றதானால், "புனஸ்தோமம்" அல்லது சர்வ பிரஷ்டயாகம் செய்தே புகவேண்டும். (மனுஸ்மிருதி II 23. பதஞ்சலி மஹாபாஷ்யம்-II-4. 10) அக்காலத்தே ஆரியர் தங்களை மூவகையாகப்பிரித்துக்கொண்டு ஆரிய ஆசாரணைக்குரிய "துவிஜர்" (இருபிறப்பாளர்) எனப் பெயரிட்டார்கள். தம்மைப்போல வந்தேறிகளான விதேசக்குடிகளை நான்காம் வருணத்தாராகவும், இந்நாட்டுப் பழைய குடிகளை அவர்களுக்குத் தாழ்ந்த இழிகுலத்தாராகவும் பிரித்தனர். விதேசிகளாகிய நான்காம் வருணத்தார் "சூத்திரர்" எனப் பெயர் கொண்டு ஆரியர்களுக்குக் குற்றேவல் செய்பவராகவும், சுதேசப் பழங்குடிகளோ அவர்க்கும் கீழ் நிலையில் ஆரியர்களைக் கண்டால் விலகும்படியான தாழ்நிலையை அடைந்தனர்.

வடகிழ் நாட்டிலிருந்து இங்குக் குடியேறிய விதேசிகள், ஊக்கமும் நாகரிகமுமுள்ள மக்களாதலால் அவர்களுடைய சேர்க்கை, தமிழ்ப் பழங்குடிகளாகிய சுதேசிகட்கு விருப்பமாக இருந்திருக்கலாம். இக்கூட்டத்தாரில் சேரனே மிகப் பழைய அரசனாகக் கருதப்படுகிறான். பின்னுளில ஆரியர் தக்ஷிணத்தில் குடியேறிய காலத்தில், இவ்விதேசிகள் அங்குமிங்கும் நீளக்குடியேறியிருந்ததைக் கண்டு இவர்களுக்குத் திராவிடர் என்ற பெயரை ஆரியர் வழங்கலாயினர் என்று கருதுகிறார்கள். இதற்கு ஓடிவளைந்தவரென்பது பொருளாம்.

விசுவாமித்திர முனிவர் தம்முடைய வம்சத்தவர் சிலரைச்சபிக்க நேர்ந்தபோது, புண்ணிய பூமியாகிய ஆரியாவர்த்தத்தினின்று விலகி, விந்தியமலையின் தென்பாகம் விழும்படி விதித்ததாகவும், அச்சாபத்தைப்பெற்ற அவர்கள், விந்திய மலைக்குத் தெற்கே சுதேசப் பழங்குடியினரான தஸ்யுக்கள் அல்லது தாசர்களுடைய நாட்டைக் கைக்கொண்டார்களென்று ஐதரேய பிராஹ்மணங் கூறுகின்றது. ஆரியர்கள் தென்முகநோக்கி வருகையை தஸ்யுக்கள் (தாசர்கள்) மீளத்தடுத்தனரென விளங்குகிறது.

ருக்வேதம முதல் அஷ்டகம் 4-வது அத்தியாயம்,

11-வது வருக்கையில :—

இந்திரனே! ஆரியர்களையும் தாசர்களையும பகுத்தறியும்படி வித்தியாசம் செய்தருளும. வைதிக கருமஙகளைச் செய்யாதவர்களைத் தண்டித்து யாகத்துக்கு உடன்படச் செய்தருளும். யாகம் செய்பவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்பவரே! வல்லவராயிரும்.

i-7-11. எல்லாராலும் வந்திக்கப்பட்ட இந்திரனே! நாம் மருத்துக்கள் சூழத் தாசர்களையும் சிமயூனாக்களையும் எதிர்த்துத் தமது இடியினால் அவர்களைச் சேதித்து அருளினீர். இடிக்காரசே! பின்பு புலங்களை வெண்மை நிறமுள்ள நண்பர்களுக்குப் பகுத்தருளினீர்.

i-7-16. இடியினை ஆயுதமாகக் கொண்டு தனது வல்லபத்தில் நம்பிக்கையுடைய இந்திரன், தாசர்களின் பட்டணங்களை அழித்துக் கொண்டு போனார். அறிவிற்சிறந்த இந்திரனே! இடிக்காரசே! தாசர்களின்மீது உமது அம்புகளைச் செலுத்தும். ஆரியர்களின் வீரத்தையும் புகழையும் விருத்தியாக்கும்.

ii-6-16. தாசர்கள், சூமுரியர், துனியர் இவர்களுக்குத் தூக்கத்தை விளைவித்துக் கொன்றீர். தாபதியரைக் காப்பாற்றினீர்.

viii-2-19. நீர் ஆரியர் பொருட்டாகத் தாசர்களை ஓட்டினீர்.

என இந்திரன் தோத்திரஞ் செய்யப்பட்டிருக்கிறான்.

தாசர் என்பவர்கள் ஷிமாயுக்கள், சூமூரியர், தானியர், கிக்காதர், பிரமகண்டர், மாகவதர், கைசாஷர், ஷம்பரர், பாணியர் எனத் தெரிகிறது.

ஆரியர்கள் இந்தியாவிற் குடியேறினகாலத்தில், இவர்களது ஒழுக்கம் ஆசாரம், அனுஷ்டானங்களுக்கு, மேற்கண்டவர்கள் நேர் விரோதிகளாக இருந்து அநேக இடையூறுகள் செய்தார்கள்.

அதனால் ஆரியர் இந்த விரோதிகளாகிய தாசர்களுடன் நேர் நின்று சண்டை செய்ததுமன்றி, இந்திரன், மருத்துக்கள், அசுவினி தேவர்கள், அக்கினி, வருணன் முதலிய தேவர்களை அஷ்ட கர்மங்களால் வசியம் செய்து, அத்தேவர்களைக்கொண்டு உச்சாடன மாரணம் முதலியவை செய்து நாசமாக்கினர். இவ்விதம் நாசம் செய்யப்பட்ட சத்துருக்களுக்கு தாசரென்று பெயர் வழங்கினார்கள்.

இதுகாறுங் கூறியவற்றுள் பார்ஸீக நாட்டிலிருந்து வந்தவர்கள் ஆரியரென்றும், இந்தியாவில் இவர்களுக்கு முன்னிருந்தவர்கள் தாசர், முதலியவர்களென்றும் தெரியவருகின்றது.

இவ்வாறு ஆரியரது பிரவேசம் சிறுகச் சிறுகத் தென்னாட்டிலும் பரவவே, வடதேசத்தைப்போலவே தென்தேசத்திலும், விதேசிகளாகிய திராவிடர் நான்காம் பிரிவினராகவும் சுதேசப் பழங் குடியினர் பஞ்சமராகவும் ஆரியராற் கருதப்பட்டார்.

---

திருத்தம் :—14-ம் பக்கத்தில் தமிழ் நாட்டுக்குடிகள் என்பதன் தலைப்பில் ௪ வது அதிகாரம் என்பதை அமைத்துக்கொள்க.

## ௫-வது அதிகாரம்.

### தமிழ்நாட்டுப் பழங் குடிகள்.

---

திராவிடர் ஆராய்ச்சியை இத்துடனிறுத்திக்கொண்டு தென்னாட்டுத் தமிழ்ப் பழங்குடிகளிற் சிறந்தவகுப்பினர் சிலரைப்பற்றி

இங்கு சுருக்கமாய் விசாரிக்கலாம். இத்தென்னாட்டிற் பழயகுடியாவார் பலராயினும்; அவருள் ஒரு நால்வரே சிறப்புடையரெனத் தெரிய வருகிறது. அவராவார்; பாணன், பறையன், துடியன், கடம்பன் என்போர். இற்றைக்கு 1800 வருஷங்களுக்கு முன் இந் நால்வருமே தமிழ்ப் பழங்குடிகளிற் சிறந்தவராகக் கொள்ளப்பட்டார்.

அடலருந்து..............................
......................குருந்தே முல்லையென்
றிந்நான் கல்லது பூவுமில்லை.
கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது... ..............
துடியன பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியுமில்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
யொளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தே
............................... வினல்லது
நெல்லுகுத்துப்பரவுங் கடவுளுமிலவே. (௩௩௫)

புறநானூறு.

தானியத்திற் சிறப்புடைய நான்கையும் எடுத்துக் கூறப்பட்டதுபோல "பாணன் பறையன் துடியன் கடம்பனென் றிந்நான் கல்லது குடியுமில்லை" என்று சிறப்புடைய நால்வரை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவர்களை அன்றி வள்ளுவர் பழையர் முதலிய பழந் தமிழ்க் குடிகளுமுண்டு. இவர்களைப்பற்றி விசாரிக்கலாம்.

பாணர் :—ஆரியரால் இழிகுலத்தவரெனக் கருதப்பட்ட ஈழ்நிலைப் பழங்குடிகளுக்குள்ளே இவ்வகுப்பினர் உயர்ந்தவர். கல்வியாலும், ஆடல் பாடல்களிலும் வல்லவர். தமிழரசரால் மதிப்புடன் ஆதரிக்கப் பெற்றவர். இப்பாண்குடி மகளிர் "விறல்பட ஆடுதலால் விறலியர்" எனப் பெயர் கொண்டனரென்பர். இவர்

மூங்கிற்கோல் வைத்திருப்பர். மீன் பிடிக்கும் தொழிலை யுடையவர். "மாதங்கர்" எனவும் படுவர். அரசர் போர்க்களத்திலிருக்கும்போதும் கூடவிருந்து அவரை ஆடல் பாடல்களால் மகிழ்விப்பர். பகைவரிடங்கொண்ட பொருளை அரசர் மகிழ்ந்து கொடுக்கப் பெறுவர். வேற்றரசர்களிடம் தூதுபோதற்கும் உரியராவர். திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருப்பாணாழ்வார், பாணபத்திரர் ஔவையார் முதலிய பெரியோர்கள் இக்குலத்துதித்தவர்கள்.

சிறுபாணாற்றுப்படை யுரையிலே பாணர்—பாடுவோர்; இவர் இசைப்பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப்பாணரும் எனப் பலர் எனவும்,

பொருநராற்றுப் படையில் பொருநர்—ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பலர் எனவும்,

மதுரைக்காஞ்சி 749,750 அடிகளில் "பாணர் வருக பாட்டியர் வருக யாணர்ப்பாணரொடு வைரியர் வருகென" என்பன வற்றின உரையில் கவியாகிய புதுவருவாயினையுடைய புலவரோடே பாணர் வருவாராக, பாணிச்சியர் வருவாராக, கூத்தர் வருவாராக எனவும்,

மலைபடு கடா முறையில் [கூத்தர்—ஆடன் மாக்கள்; இவருக்குச் சாதிவரையறையிலது, இவர்கள் எண்வகைச் சுவையும் மனத்தின்கட்பட்ட குறிப்புகளும் புறம்போந்து புலப்பட ஆடுவோர்.] எனக்கூறப்பட்டுளதால பாடல் ஆடற் றொழிலினை யுடையாரில் உட்பிரிவுகளிருப்பன காண்க.

கூத்தச் சாக்கையர்:—இக்கூத்தச் சாக்கையர் என்பவர் சாக்கையரில் ஒரு பிரிவினராய் அரசரை நடனத்தால் மகிழ்விப்பவராதல் வேண்டும். இச்சாக்கையர் அப்பெயருடனும், அத்தொழிலுடனும் மலைநாட்டில இன்னும் உளரெனத்தெரிகிறது.

"உற்சவ காலங்களிலும், மற்றக் காலங்களிலும், ஆலயங்கட்குச் சம்பந்தமானதும் கூத்துக்கென் றேற்பட்டதுமான உட்புறக்கட்டடக்

களில் சாக்கையர் கூத்து நடத்தப்படுகிறது. கூத்தன் காதுகளிலும், கைகளிலும் சதங்கை கட்டிக்கொண்டும், இடையைச் சுற்றி கச்சை உண்டாக்கத்தக்கதும், மிகுந்த மடிப்புகளுடன் கூடியதுமான விநோத உடைகளைத் தரித்துக்கொண்டும் தேகமுழுதும் விபூதி பூசியவனும் வெறுந்தலையுடன் தன் கூத்தைத் தொடங்குவான். சாக்கையர் பெண்கள் "நங்கையார்" என்று சொல்லப்படுவர். சாக்கையர் ஆடும்போது அந்த நங்கையாரில் ஒருவர் எப்போதுங்கூட இருத்தல் வழக்கம். அவர் சுலோகங்கூறி அவற்றின் அர்த்தத்தாற்பரியங்களை விளக்கிக்கொண்டு வருங்காலையில், நம்பியார் என்று அழைக்கப்படும் ஒருவனால் இடை இடையே தம்பட்டம் அடிக்கப்படுவதுண்டு. புராண சுலோகங்களைச் சொல்லி அவற்றின் அர்த்த தாற்பரியங்களை விளக்குவதே இக்கூத்திற்குரிய விசேடம். அதனை விநோதமாகவும் மிக நுணுக்கமாகவும் நடித்துக்காட்டுவன்.

"சாக்கையர், மக்களியல்புகளையும் உலகவியல்புகளையும் பற்றிக் குணதோஷ ஆராய்ச்சி செய்வதில் பிரமிக்கத்தக்க வல்லமை யுடையவர். கூத்தைக் காண்பவரில் முக்கியமானவர்கள் மிக அதிசயிக்கும்படி சுலோக தாற்பரியங்களை உபயோகிப்பதிலும், அம்முழுக் கூட்டத்தையும் கொக்கரிப்புடன் குதூகலமடையச் செய்வதிலும் வேண்டிய அளவு சாமர்த்திய முடையவர்கள். சாக்கையர் கூத்தாடுங்கால் அவர் நிகழ்த்தும் பரிகாசங்களால் எவருஞ் சினங்கொள்வதில்லை. அவைகளை நோக்கிப் பிறர் அவமரியாதையாய் உரத்துச் சிரிப்பதுமில்லை. இது தொன்றுதொட்டு வரும் ஒரு மரியாதை. இம்மரியாதையில் ஏதேனுஞ் சிறிது குறைவு நேரிடுமாயின், அதுவே அவர்கள் கூத்தை நிறுத்திவிடப் போதியதாகும். கோயில் தருமகர்த்தாக்களால் இவர்கள் சந்தேகமின்றி சம்மானிக்கப்பட்டு வருகின்றனர்."

என "மலையாளமும் அதில் வாழ்நரும் (Malabar and its folk) என்னுந் தலைப்பெயருடன் T. K. கோபாலபணிக்கரவர்களால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட நூலில் காணப்படுகிறது. (செந். தொ. 7)

இந்நாடகத்தை செங்குட்டுவனென்னும் சேர வேந்தனுக்கு நடித்துக்காட்டியவன், கூத்தச் சாக்கையனென்று சிலப்பதிகாரத்துக் கூறப்பட்டது.

"ஆங்கவ டன்னுட னணிமணி யரங்கம்
வீங்குநீர் ஞாலமாள்வோ னேறித்

திருநிலைச்சேவடி சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும
செங்கணாயிரந் திருக்குறிப் பருளவும
செஞ்சடைசென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழாது
உமையவ ளொருதிற னாகவோங்கிய
இமையவ னாடிய "கொட்டிச்சேதமும்"
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கைய னாடலின் மகிழ்ந்தவ
னேத்தி நீங்க விருந்தவ மாள்வோன்
வேத்தியன் மண்டப மேவிய பின்னர்."

இவ்வடிகளிற் சொல்லப்பட்ட ஆடல், கொட்டிச் சேதம் என்பது இது "கொட்டி" எனவும், "கொடுகொட்டி" எனவும் வழங்கும். இது திரிபுரந் தீயிடுத் தெரியக்கண்டு, ஜயபாகத்தால் சிவபெருமான் உமையவளுடன் ஆடியதென்பர். இதன் விவரம் பாலைக் கலியிலும் விளங்கும். பதினொரு புறநாடகங்களில் ஒன்றெனவும் கூறுவர். பழய காவியங்களிலே கூறப்பட்டதுபோலவே இன்றும் நடக்கிறது கவனிக்கத்தக்கது.

மலையாளத்தில் கற்கடக மாதத்து விசேட நாட்களில் பாணனென்னும் பெயருடனின்றுமுள்ள ஒரு வகுப்பினர் அதிகாலையிலே இனிய கீதங்களால் "துயில் உணர்த்தல்" என்னும் வினையை நடத்தி வருகின்றனர். மற்றொரு சாரார் தெருக்கூத்து ஆடுகின்றனர். அதனைப் புறக்கூத்து என்றும், பாணர் கூத்து என்றும் சொல்கிறார்கள்.

பறையர்:—இக்குலத்தார் இக்காலத்துமிகுதியும் உள்ளனர். இவர் பறைகொட்டுதலால் இப்பெயர் பெற்றனர் என்பர். சுதேசப் பழங்குடிகளுள்ளே தாழ்ந்தவரென்பர்.

துடியர்:—இக்காலத்துப் பள்ளர் எனப்படுவர். கிணையென்னும் மருதப்பறை யொலிப்பவராதலால் துடியர் எனப் பெயர் பெற்றனர் என்பர்.

கடம்பர்:—பூர்வகாலத்திலே ஒரு சேரன் கடம்பைத் தன் காவல் மரமாக வைத்த பகைவனொருவனை வென்றனன் முன்

லால்களால் தெரிகிறது. முருகவேளுக்குரிய கடம்பை வளர்த்து வருவதால் அப்பெயர் பெற்றனர்போலும்.

வள்ளுவர் :—பழய தமிழ்க்குடிகளில் பாணரையடுத்து இராவிடரால் மதிக்கப்பெற்றவர். இவர் அரசர்பால் கருமத்தலைவரா யும் யானைமேலிருந்து முரசறைந்து அரசாணை தெரிவிப்பவராயு முள்ளவர். "வள்ளுவன் சாக்கையெனும் பெயர் மன்னருக் குள் படுகருமத்தலைவர்க்கொன்றும்." எனத் திவாகரத்துப் பேறப்படு கின்றது. தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அவதரித்தது மிக்குலமே.

பழையர் :—இவர் மலைநாடுகளில் தேனெடுத்துவரும் ஒரு பழங்குடியினர். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியற்கு படைத்தலைவனாக விளங்கிய "பழையன் மாறன்" என்பான் இக்குலத்தவனென்று கருதப்படுகிறான். இக்குடித்தலை வர் சிறந்த வீரராய் முற்காலத்தே விளங்கினர். மலைநாடுகளில் இப்பழையவகுப்பார் படைத்தொழிலோடும், பெயரோடும் இன்று முள்ளனர் என்பர்.

ஓயர் அல்லது ஒவியர் :—என்னும் பெயருள்ள ஒரு ஜாதி பூர்வம் இருந்ததாகத் தெரிகிறது. ஓயர் அல்லது ஓவியர் குலத்தான் எனறும், செறுமாநாடு உடையானென்றும், எயிற்பட்டினம் மாவிலங்கை என்னும் ஊர்கட்குத தலைவனென்றும், குறிஞ்சிக் கோமானென்றும "நல்லியக் கோடன்" எனறும வள்ளற்றலைவன், சிறுபாணாற்றுப்படை [அடி 119] புறநானூறு 176-வது பாடலாலும புகழப்படுகிறான். இவனது குடிப் பெயராகிய ஓயர் அல்லது ஓவியரென்பது வடஆர்க்காடு ஜில்லாவில் ஓயர் எனப்பட்ட ஒரு வேட்டுவ ஜாதியார் இருக்கிறார்கள். அப்பக்கத்துள்ள பாளயக்காரரிற பலரும் அக்குடியைச சேர்ந்தவர்கள். என வடஆர்க் காட்டு மானுவல் கூறுகினறது.

முத்தரசர் :—"கல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே செல்வ ரைச் சென்றிரவாதார்" என இருத்தலால் நம் தமிழ்நாட்டின் கண்ணே "முத்தரசர்" என்னும் வகுப்பினர் நன்னிலை பெற்றிருந்தனர் எனத் தெரிகிறது. வடஆர்க்காட்டு பிரதேசத்தில் இவ்வகுப்பாரில் பலர் அநேக ஊர்களுக்குத "தலையாரி" களாக இருக்கின்றார்களென்றும் சித்தூர் புரள

யக்காரராக இவ்வகுப்பினரிருக்கிறார்களென்றும் இவர்கள் முற்காலத்தில் சிற்றரசராக இருந்தனரென்றும் வரலாறு கூறுகிறார்கள்; என வட ஆர்க்காடு ஜில்லா மானுவலறிவிக்கின்றது. இப்பெயரையுடைய வகுப்பினர் ஒரு காலத்தில் பாண்டி நாட்டை ஆண்டதாக ஸ்ரீமான். கோபிநாத ராயரவர்கள் M. A. எடுத்துக்காட்டும் பல சாசனங்களால் விளங்குகின்றது.

மேற்கூறியவர்களையன்றித் தமிழ்ப் பழங்குடியினராகக் கருதப்படுவோர் வேறு சிலருளரெனினும், விசேஷமாக முன்னூல்களில்எடுத்தோதப்பெற்ற இவர்கள் வரலாறுமட்டும் எடுத்தோதற்குரியனவெனச் செந்தமிழ்ப் பத்திராசிரியர் கூறுவர்.

## ௬வது அதிகாரம்

### தமிழ்நாட்டு வேந்தர்.

### சோழர்.

தமிழ்ப் பழங்குடிகளின் விசாரணையை இத்துடன் நிறுத்திக் கொண்டு அரசர்களை விசாரிக்கலாம்.

தமிழ் நாட்டைச் சேரர், சோழர், பாண்டியர் என மூன்று முடியுடை மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். இவர்களில் சேரன் அக்கினி குலம் என்றும், சோழன் சூரிய குலம் என்றும், பாண்டியன் சந்திர குலம் என்றும் கூறுவர். இவர்களுள்ளே சோழர்களைப் பற்றி முதலில் விசாரிக்கலாம். வைவச்சுவத மநுவின் பரம்பரையில் வந்தவர்களென்று இக்ஷ்வாகு, முசுகுந்தன், வல்லபன், சிபி, இவர்களின்பின் சோளன், இராஜகேசரி, பரகேசரி, இராஜேந்திர மிருத்த சித்து, வியாக்கிரகேது, அரிகாலன் முதலியவர்கள் ஆண்டனர் என்பர். வரிசைக்கிரமமாகப் பரம்பரை சொல்லத்தகும் சரித்திர மகப்படவில்லை யாயினும், தமிழ் இலக்கியங்களாகிய புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலியவற்றிற் புகழப்படும் சோழர்களை இங்கு கூறுவாம் :—

சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி :—யுத்தத்தில் வல்லவன். கோச்சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ்சேர லிரும்

போரையும் வெற்றிகொண்டவன். இவன் நண்பர் சேரமான் மாவெண் கோவும், கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியுமாவர். இவனைப் பாடிய புலவர் ஔ வை யா ர், பாண்டரங்கண்ணனார், உலோச்சனார் முதலியோர்.

சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி :— சிறந்த போர்வீரன். பல போர்களிற் ஜயங்கொண்டவன். இவனைப் பாடிய புலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார். சோழன் நலங்கிள்ளி சேட்சென்னி யெனவுமபடுவன். (புறநா)

சோழன் உருவப்பஃறே ரிளஞ்சேட் சென்னி :—இளஞ்சேட்சென்னி யென்றும், உருவப்பஃறே ரிளையோனென்றும் சொல்லப்படுவன். சோழன் கரிகாற் பெருவளத்தான் தந்தை. ஈகைவீர முதலியவற்றாற் சிறந்தவன். அழுந்தூர் வேளிடத்து மகட்கொண்டோனென நச்சினார்க் கினியருரையாலுணரப்படும். இவனைப் பாடியவர் பரணரும், பெருங்குன்றூர் கிழாருமாவார். (புறநா)

சோழன் கிள்ளிவளவன் :—(1) குராப்பள்ளி துஞ்சிய கிள்ளிவளவன். கருவூரை யழித்தவன். இவனைப் பாடிய புலவர் கோவூர் கிழார். (2) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். கல்வி, ஈகை, வீர முதலியவற்றாற் சிறந்தவன். இவன் இராஜதானி உறையூர். இவனைப் பாடிய புலவர் ஆலத்தூர் கிழார், இடைக்காடனார், கோவூர் கிழார், மாறோக்கத்துப் பசலையார் முதலினோர்.

சோழன் செருப்பாழிஎறிந்த இளஞ்சேட் சென்னி :—மிக்க வீரமுங் கொடையு முடையோன். இவனைப் பாடிய புலவர் ஊன்பொதி பசுங்குடையார். (புறநா)

சோழன் நலங்கிள்ளி :—சோழன் மாவளத்தான் தமயன். கவி செய்யும் புலமையன். போர்புரிந்து வெல்லுதலில் விருப்புடையவன். பாண்டிநாட் டேழரண்களை வென்று புலிக்கொடி நாட்டியவன். தாயத்தாரொடு பகைத்து அவர்களிருந்த ஆவூரை

யும் உறையூரையும் முற்றுகை செய்தவன். இவனுக்கு சேட்சென்னி, புட்பகை, தேர்வண்கிள்ளி யென்றும் பெயர்கள் வழங்கும். உறையூர் முதுகண்ணன் சாத்தனாரால் பாடப்பட்டு உறையூர் அறநெறி நிறுத்தப்பட்டது. இவனைக் கோவூர் கிழாரும் ஆத்தூர் கிழாரும் பாடியுளர்.

**சோழன் நல்லுருத்திரன்** :—சோழநல்லுத்தரன் என்றும் சொல்லப்படுவன். கவிபாடும் புலமை மிக்கவன். முயற்சியுடையார்பால் விருப்பும் அஃதில்லாரபால வெறுப்பு முடையானென

"விளைபதச் சீறிட நோக்கிவளை கதிர்
வல்சிகொண்டளை மல்கவைக்கு
மெலிமுயன் றனையராகி.........என்றத் தொடக்கத்து

190-வது புறப்பாட்டினால் அறியத்தகும்.

**சோழன்செய்தலங்கான விளஞ்சேட்சென்னி**:—ஊண்பொதி பசுங்குடையாரால் பாடப்பெற்றவன். இளவரசராயிருந் தரிய காலத்து அரசு பெற்றவனுகலின் இப்பெயரேற்றவன். (புறநா)

**சோழன் பெருந்திருமாவளான்** :—பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியின் நண்பரிலொருவன். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாலும், உறையூர் மருத்துவன் றமோதரனாலும் பாடப்பெற்றவன்.

*சோழன்போரவைக்கோப் பெருநற்கிள்ளி*—தித்தனென்னும் சோழன் புத்திரன். தந்தையைப் பகைத்து வறுமையுற்றுப் புலவரிசியுண்டு சிலகாலமிருந்த பின்னர் அரசுபெற்று முக்காவனாட்டு ஆமூர் மல்லனைப் பொருது கொன்றனன். இவனைப்பாடினார் சாத்தந்தையார் பெருங்கோழி நாய்கன் மகன் கண்ணனார்.

*சோழன் மாவளத்தான்* ;—சோழன் நலங்கிள்ளிக் கிளவல். சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானென்றுஞ்சொல்வதுண்டு. தாமப்பல் கண்ணனாற் பாடப்பட்டவன்.

**சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி**:—சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையின் பகையரசன். உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரால் பாடப்பட்டான்.

சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி :—சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதனோடு போர்புரிந்திறந்தவன். பரணராலும் கழாஅத்தலையாராலும் பாடப்பட்டவன். சோழன் வேற்பஃறடக்கைப்பெருவிறற்கிள்ளி யென்றுஞ் சொல்லப்படுவன்.

புகழ்ச் சோழநாயனார் :—அறுபான் மும்மை நாயன்மாருளொருவராகிய சிவபக்த சிரோமணி. உறையூரில் அரசு செலுத்திய சோழர்களிலொருவர். சிவகாமி யாண்டாரெனுஞ் சிவனடியார் கொண்டுசென்ற திருப்பள்ளித் தாமக் குடலையை யிழுத்துச் சிதைவுசெய்த பட்டத்து யானையைப் பாகர்களுடன் கொன்றொழித்த எறிபத்த நாயனாரிடஞ்சென்று, இத்துன்பங்கள் நிகழ்தற்கு அடியேனும் காரணனாதலின், என்னையுங் கொன்றருள வேண்டுமென்று தம்முடைய வாளையுருவிக் கொடுத்தார். "பொழிற்கருவூர்த்துஞ்சிய புகழ்ச்சோழர்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் துதிசெய்யப் பெற்றவர்.

மநுநீதிகண்ட சோழன் :—திருவாரூரில் அரசு செலுத்திய சோழர்களிலொருவன். மநுநீதிதவறாது செங்கோல் செலுத்தி, தன் ஆணையின் கீழுள்ளாருக்கெல்லாம் ஒரு பிதாவைப்போலொழுகியவன். அவ்வரசனுடைய புத்திரன் சில அரசிளங்குமரர் சூழ ஒருநாள் தேரூர்ந்து ராஜவீதியிற் செல்லுகையில் ஒரு பசுவின் கன்று தேர்க்காலிற் சிக்கியிறக்க, அரசகுமாரன் மிகவும் வருந்தி வேதியரையுசாவி இதற்குரிய பரிகாரஞ் செய்வேனெனத் துணிந்து விசாரித்துக் கொண்டிருந்தான். கன்றையிழந்த பசுவோ கதறிப்பெருமூச்சுவிட்டுக்கொண்டு மன்னன் மாளிகைவாயிலடைந்து ஆங்குகட்டப்பட்டிருக்கும் முறைப்பாட்டுமணியைக் கொம்பாலசைத்தது. மாளிகையிலிருந்த மன்னன் பெரிதும் மனமாழ்கி யாது தீது விளைந்ததோவென வெருண்டு புறம்போந்து பசுவினைக்கண்டு அதன் மெலிவு யாதெனவினவி, அங்கிருந்த மந்திரியாலறிந்து அக்குமாரனைக் கோறலே யதற்கியையு மெனக்கூற அமைச்சர்கள் வைதிக முறையாகக் கோவதைக்குரிய பிராயச்சித்தஞ் செய்தல் தகுதியென, மன்னன் அது தகுதியன்று, வேறொருவனுக்குக் கொலைத்

தீண்டமும், என் மகனுக்குப் பரிகாரமுமா? இது மநுமுறையன்று. எந்தப பசு எக்காலத்தில் இப்படித் தன்றுயரை வெளியிட்டது. திருவாரூரிற் பிறந்த வுயிரைக் கொன்றனனே என்று கடுமையாகக்கூறி, இவனை நீ தேர்க்காலில் ஊர்கவென்றொரு மந்திரிக்குக் கட்டளையிட, அவன் அவ்விடம்போய்த் தன்னுயிர் விட்டனன். அது கேட்டுத் தானே தேரூர்ந்து மகனைக் கொடுசென்று, ஏகபுத்திரனென்றுங் கருதாது அவன் மார்பில் சக்கிரம் புதையத் தேரைசசெலுத்தினன். அரசன் செயலையாற்றாது கண்டவர்கள் கண்ணீர் சொரிந்தார்கள். தேவர் மலர் மழை சொரிந்தனர். (திருவாரூரி லெழுந்தருளிய) வீதிவிடங்கப பெருமான் மன்னன் கட்புலனுக்குத் தோன்றியருள்புரிய, இறந்த கன்றும், மந்திரியும், அரசகுமாரனும் உயிர்பெற்றெழுந்தனர். அரசன் களிப்புற்று வாழ்ந்திருந்தனர். இது பெரியபுராணம் திருவாரூர்ச் சிறப்புட் கூறப்பட்டது.

அங்கிலேயே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலும்
இன்னபரிசானு னென்றறிந்திலன் வேந்தனும் யார்க்கு
முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ.

கோப்பெருஞ் சோழன்:—இவனுடைய இராஜதானி உறையூர்; பிசிராந்தையார்க்கும், பொத்தியார்க்கும் உயிர் நண்பன்; இவன் தன் பிள்ளைகளிருவரோடு பகைமைகொண்டு போர் செய்தற்கு எழுந்தபொழுது புலலாற்றூர் எயிற்றியனாரால் சமாதானம செய்யப்பட்டான். செய்யுள் செய்தலில் வல்லவன்; இவன் பின்பு எல்லாவற்றையுந் துறந்து வடக்கிருந்து, உயிர் நீத்தற்கு வந்த பொத்தியாரை 'மகன் பிறநதபின் வருக' எனக்கூறி தான் உயிர் நீத்துக் கல்லாகியும் இவ்வாறு வநத அவருக்கு இடங்கொடுத்துப் புகழ்பெற்றுவிளங்கினன்; இவன் வடக்கிருந்ததைக் கேட்டு வநத பிசிராந்தையாரும் உடனுயிர் நீத்தனர்; இவனைப் பாடியபுலவர் பிசிராந்தையார், புல்லாற்றூரெயிற்றியனார், பொத்தியார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்.

தித்தன்:—இவன் உறையூரிலிருந்த ஒரு சோழன்: சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியின் தந்தை. அவனோடு மிக்க

பகைமை கொண்டிருந்தான். 'நொச்சி தித்த னுறந்தை' என அகநானூற்றிற் கூறப்பட்டவன் இவனே.

நெடுங்கிள்ளி:—இவன் சோழபரம்பரையைச்சார்ந்தோன்; ஆவூரும் உறையூரும் இவனுடையவை; சோழன்நலங்கிள்ளி இவற்றை முற்றியிருந்தபொழுது கோட்டைவாயிலை அடைத்துக்கொண்டு உள்ளேயிருந்த இவன்பின்பு கோவூர்கிழாரால்தேற்றப்பட்டான்; காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி யெனவும் இவனுக்குப்பெயருண்டு; இவனைப்பாடியபுலவர் கோவூர்கிழார்.

மாவளத்தான்:—இவன் சோழன்நலங்கிள்ளி தம்பி. தாமப்பல் கண்ணனாரோடு வட்டாடியபோது, அவர்கைகரப்பத் தான்வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்து, அவர் 'நீ சோழன் மகனல்லை' என்றுசொல்ல, நாணமுற்று, பின்பு அவராற்புகழ்ந்து பாடப்பெற்றான். இவனைப்பாடியவர் மேற்கூறிய தாமப்பலகண்ணனார்.

கோச்செங்கட் சோழநாயனார்:—அறுபான் மும்மை நாயன்மாருளொருவர். இவர் தந்தை சுபதேவனென்னுஞ் சோழன். தாய் கமலவதி, அவள் இவரைப் பிரசவிக்குஞ் சமயத்தில் அங்கே குழுமியிருந்த சோதிடர்சிலர், இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிரசவித்தால் திரிலோக கர்த்தனாயிருப்பானெனக் கேட்டு, ஒரு நாழிகை காலம் அடக்கிவைத்திருந்து பிரசவித்து, அளவுக்குமேல் வயிற்றிலிருந்ததால் கண்கள் சிவந்திருக்கக்கண்டு "கோச்செங்கண்ணான்" என விளித்து இறந்தனள். இதுவே இவர் பெயராயது. இவர் முற்பிறப்பில் திருவானைக் காவில் ஜம்புகேச்வரர்க்கு விதானங்கட்டிய சிலந்தி யெனப் பெரிய புராணத்திற் கூறப்பட்டுளது.

செங்கணான் என்பவருமிவரே. சேரமான் கணைக்காலிரும்பொறையோடு பொருது அவனைப் பற்றிக்கட்டிச் சிறையிலிட்டவர். பதினெண் கீழ்க்கணக்கி லொன்றான களவழி நாற்பதின் றலைவன். பொய்கையாரால் பாடப்பட்டவர்.

இதனை
திருநாவுக்கரசரும், திருக்கச்சி ஏகம்பத் திருத்தாண்டகத்தில்,

ஆய்ந்தவன்கா ணருமறையோ டங்கமாறு
மறிந்தவன் காணுடரவோ டென்புமாமை
காய்ந்தவன்காண் கண்ணழலாற் காமனாகங்
கனன்றெழுந்த காலனுடல் பொடியாய்வீழப்
பாய்ந்தவன்காண் பண்டுபல சருகாற்பந்தர்
பயின்றநூற் சிலந்திக்குப் பாராளச்செல்வ
மீந்தவன்கா ணெழிலாரும் பொழிலார்கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத்தானே.

திருப்பாசூர்ப் பதிகத்திலும்,

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயினூலாற்
பொதுப்பந்த ரதுவிழைத்துச் சருகால்மேய்ந்த
சித்தியினா லரசாண்டு சிறப்புச்செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலான்மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளாவன்பு
விரவியவர் கண்டதற்கு வீடுகாட்டிப்
பத்தர்களுக் கின்னமுதாம பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே.

திருமங்கையாழ்வார்,
இவ்வேந்தனைப்பற்றி நாலாயிரப் பிரபந்தம் பெரிய திருமொழியில்
௬ வது திருநறையூர் நம்பி விஷயம் ௮ வது பாசுரம்.

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னைகேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச்சென்று வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்றவேந்தன்
சிரந்துணித்தான் திருவடிநாம் சென்னிவைப்பீர்
இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்
கெழில்மாட மெழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

காவிரி நதிக்கு இருபுறமும் கரை கட்டியவன்,

"தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற் றொடர வந்தி லா முகரி யைப்படத் தெழுது கென்றுகண் டிறுமி சைகக்கெணன் றிங்கழிக்கவே யங்கழிந்ததும்" (கலிங்கத்துப்பரணி-இராசபாரம் பரியம்-பா-20)

**நெடுமுடிக்கிள்ளி**:—சோழர் குலத்தரசரி லொருவன். இவன் தன் முன்னோர் தொன்றுதொட்டு நடத்திவந்த இந்திரவிழாவை நடததா தொழிந்தவன். இது காரணமாகக் காவிரிப்பூம் பட்டினம் கடலாற கொள்ளப்பட்டது. காரியாற்றிற் போர்செய்து, சேரபாண்டியர்களை வென்றவன், கிள்ளிவளவன், மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி, வென்றிவேற்கிள்ளி யெனவும் பெயர் பெறுவன். (மணி)

## எ-வது அதிகாரம்.

இப்பொழுது கிடைத்திருக்கும் சிலாசாசனம் தாம்பிர சாசனங்களைக்கொண்டு பார்த்தது தெரியவரும் முக்கியமான சோழ சரித்திரம் அடியிற்கண்ட விதமாக ஏற்படுகிறது. இதின் குறிப்பாகும் காலத்துக்கு முன்னிருந்தவர்களைப்பற்றியும், பின்னிருந்தவர்களைப்பற்றியும் சாசனங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

விஜயாலயன் :—தஞ்சாபுரியை இராஜதானியாகக்கொண்டவன்.

**ஆதித்த சோழன் I.** விஜயாலயன் மகன். சோழர்களில் பிரக்கியாதி பெற்றோர்களில் முதல்வன். பல்லவ சார்வ பௌமத்தைத் தொலைத்து, சோழ அரசாக்ஷியை நிலைநிறுத்தினவன். இவன் காலத்தில் பாண்டியன் வரகுண பாண்டியன், மாறன் சடையன். இவன் ஆட்சிக்காலம் கி. பி. 850. பராந்தகன் I, கன்னர தேவன் என இருபுதல்வர்.

பராந்தகன் :—முதலாம் ஆதித்தன் மகன், வீரநாராயணன், மதுரைகொண்ட கோப்பர கேசரி, மதுரையும், ஈழமும்கொண்ட கோப்பர கேசரி, சங்கிராம ராகவன் எனமறு பெயர்களுண்டு.

இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், ஆதித்தனுகிய கோதண்டராமன் என நான்கு புத்திரர்கள் சிற்றம்பலம் பொன் வேய்ந்தான். இவன் காலத்தில இராஜசிம்ம பாண்டியன் மதுரையிலும், இலங்கையை ஐந்தாங் காசிபனும் ஆண்டார்கள். இவன் காலத்திலேதான் சோழ ராச்சியம் மிகப்பிரபலமாக ஆரம்பித்தது. இவன் 49 வருஷம் ஆண்டான். ஆட்சித் தொடக்கம் கி. பி. 907 முதல்.

இராஜாதித்தன் :—முதல் பராந்தகனின் மகன். இரட்டகன்னர தேவன்மேல் படையெடுத்துச் சென்று தக்கோலத்தில் கி. பி. 945ல் போர்புரிந்து ஜயித்தான். அன்றியேல பூதுகன் என்னுங் கங்கவரசன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டான். திருநாவலூரில் இராஜாதித்தேச்சுரம என்னும் கோயில் கட்டினுன். இவன் ஆட்சித் தொடக்கம் கி. பி. 947.

சுந்தரசோழ பராந்தகன் II :—இராஜராஜதேவன் Iன் தந்தை. பொன்மாளிகைத்துஞ்சிய தேவர் என்னும் காரணப் பெயருடையவன். மக்கள் ஆதித்தன் II. ராஜராஜதேவன் I. இவன் காலத்தவன் வீரபாண்டியன்.

மதுராந்தகன் :—கண்டராதித்தன் (Iன்) மகன். இராஜராஜன் (Iக்கு) முன் ஆண்டவன். இவன் மகன் திருவிசைப்பாவுடையாரான கண்டராதித்தர் II.

இராஜராஜதேவன் :—அருண்மொழித்தேவர், சிவபாதசேகரன், ராஜாசிரயன், க்ஷத்திரியசிகாமணி, மும்முடிச்சோழன், கோவிராஜ கேசரிவர்மன். சக்கிரவர்த்திகளில் ஒப்பில்லாதவனென்று புகழ்படைத்தவர். பராந்தகன் IIன் குமாரர். இவர் தமயன் ஆதித்தன் II. இவர் குமாரன், இராஜேந்திர சோழதேவன் I. இவரால் ஜயிக்கப்பட்ட அரசர்கள். அமரபுஜங்க பாண்டியன், கங்கராட்டிரசன், நுளம்பபாடி, வேங்கை நாடு, குடகு இரட்டபதிகள் முதலியோர். தஞ்சாவூர் பிரஹதீசுரன் கோவில் கட்டினவர். நம்பியாண்டார் நம்பிகளும், கண்டராதித்த தேவர் முதலியோரும் இவர் காலத்து இருந்தவர்கள். திருமுறைகண்ட சோழனுமிவரே. "மல்லன் மிகுசேனையுடனிராஜராஜ மன்னவனு மன்னகரில் வந்து

சேர்ந்தான் " (திருமுறைகண்ட புராணம் பா. கூ,) வடக்கே கலிங்கம் வரையும, தெற்கே ஈழமும சேரபாண்டியமும் கீழ்ப்படிந்தது. கருவூர்த்தேவர் திருவிசைப்பாவிற் புகழ்ந்து பாடினர். சைவசமயத்திற பற்றுடையவராயினும், விஷ்ணுக்கிரஹம, பௌத்த விஹாரம், ஜைனப பள்ளிகளுக்கும் விசேஷ உதவிபுரிநதுளளார். ஆட்சித்தொடக்கம் கி. பி 985 ராஜ்ஜியபார வருஷம் 27.

பரகேசரி இராஜேந்திர சோழதேவன் :—இராஜராஜ தேவர் (I ன்) மகன், கங்கைகொண்ட சோழன, பண்டித சோழன், உத்தம சோழன் II, மதுராந்தகன், விக்கிரம சோழன், முடிகொண்ட சோழன் என்னும பல பெயர்களை உடையவன். இவன் காலத்து, வடக்கே கங்கை, தெற்கே ஈழம், மேற்கே சமுத்திரம், கிழக்கே கடாரம, (பர்மா) வரையில சோழ ராஜ்ஜியம் பரவிற்று. இவ்வரசன் பகைவர், இரட்ட ஜயசிங்கன், கடாரத்து சங்கிராமவிஜயோததுங்கவர்மன் வடராடடுஇந்திரதன் மகீபாலன், இரணசூரன், கோவிந்த சந்திரன் முதலியோர். தகபபனைப்போலவே கௌடம் முதலிய தேசங்களிலிருந்து பிரபல பிராமணாகளைத் தருவித்து ஆதரிக்கப்பட்டார்கள். . தன பெயரால் ஒரு நகரங்கட்டி கங்கைகண்ட சோழீசுரமென்னும் ஆலயமுமாக்கினுன். திருவிசைப்பா பெற்றுளது. ஆட்சிககாலம் கி. பி. 1012.

இராஜதிராஜன் I :—இவன் எதிரிகள் மானுணன், வீரசோழன், சுந்தரபாண்டியன் என்னும பாண்டியர் மூவர். ஆஹவமல்லன், விகதி, விஜயாதித்தன் ஆகிய மூவர்கள் இரட்டர்கள். விக்கிரமபாஹு, விக்கிரபாண்டியன், வீரசலாமேகன், ஸ்ரீவல்லபமதனராஜன் என்னும் சிங்களவரசர்கள் இவனுக்கு ஜயங்கொண்ட சோழனென்னும் மறுபெயருண்டு. ஆட்ச்சித தொடக்கம் 1018.

இராஜேந்திர தேவன் :—விஜயராஜேந்திரன் என்ற பெயருண்டு " ஆனைமேற்றுஞ்சியருளிய பெருமாள், விஜயராஜேந்திர தேவர்" எனக் கூறப்படுவோன் இவனே. குந்தலத்துப் படையெடுத்துச் சென்று, ஜயசிங்கன், புலகேசி, தசபன்மன், அகேர

கேசுயன், ஆவியன், மொட்டையன், நன்னிநுளம்பன், முத லிய சாளுக்கிய தண்டநாயகர்களை மடித்தனன். வன்னிரே வதன், துத்தன், குண்டமையன் முதலியோர் ஓடிப்பிழைத் தனர் அநேகம் யானைப்படைகளை மாய்த்தனன். சத்தி யவ்வை, சாங்கப்பை என்னும் இரண்டு ராஜபத்தினிகளையும் சிறைபிடித்தனன் ஸ்ரீரங்கத்துக் கோவிலில் " இராஜ மகேந் திரன் தெருவீதி " என ஒரு வீதிப்பிரகாரத்தை கட்டி முடித்தான்.

வீரராஜேந்திர சோழன் :— வீர சோழியமென்னும் தமி ழிலக்கியத்தில் குறிப்பிடப்பட்ட வீராஜேந்திரன் இவனே. ஆஹவமல்லன் இவனிடத்தே சரணடைந்தான். வடக்கே துங்கபத்திரையில் ஒரு ஜயஸ்தம்பம் நாட்டினான். கலிங்க மும் சக்கரக்கோட்டையையும் கைபற்றினான்.

அதி ராஜேந்திரன் :—சோழசக்கிரவர்த்தி, வீராஜேந்தி ரன் மகன். சொற்பகாலமே ஆண்டான் குலோத்துங்க சோழன். (1) ஆல் இவன் ராஜயத்தைப் பிடுங்கிக்கொள்ளப் பட்டது.

அநபாயன்:—அபயன், அநபாயன், ஜயதரன், இராஜே ந்திர சோழதேவ II, குலோத்துங்கன் I, சுங்கந்தவிர்த்த சோழன், கரிகாலன், திருநீற்றுச்சோழன், சோழ சக்கிரவர் த்தி, இராஜேந்திர சோழன் (I), மகள் அம்மங்காதேவியின் குமாரன் கீழநாட்டுச் சாளுக்கிய ராஜராஜன் மகன். இவன் காலத்தில்தான் இராமாநுஜர் இருந்தது. இவ்விராஜன் தனக் குத் தீங்கு செய்வான் எனப்பயந்து சாளுக்கியராஜயம் தொ ண்டனூரில் ஒளித்திருந்தார். பேரம்பலம் பொன்வேய்ந் தான். இக்குலோத்துங்கன் சுத்தசைவனாயினும் வைஷ்ணவ ஜைன, பௌத்த கோயில்கள் தோறும் இவன சாசனம் காணலாம். மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோவில் இவன் பெயரால் கட்டப்பட்டது. குலோத்துங்க விண்ண கரம் என்பது அத்தலத்துக்கு பழம்பெயர். சிறந்த கல்வி

மான், கொடையாளி, சேக்கிழாரைக்கொண்டு பெரிய புராணம் பாடுவித்தவன் இவனே. இவனுக்கு மக்கள் சோடகங்கன், மும்முடிச்சோழன், வீரசோடன், விக்கிரமசோடன் முதலானோர் எழுவர். கலிங்கத்துப்பரணி நாயகன் இவனே. விவசாயத்துக்கு அநுகூலமாக இருக்கவேண்டிப் பல ஏரி, குளம் அணைகட்டினவன். 49 வருஷம் அரசாண்டான். ஆட்சித் தொடக்கம் 1070.

விக்கிரமசோழன் :—தியாகசமுத்திரம்-அகளங்கன் என மறுபெயருண்டு. இவன் வைஷ்ணவ மதத்தில் பற்றுடையவனென்று வைஷ்ணவ கிரந்தங்கள் கூறும. இவன் ஸ்ரீரங்கத்தில் தன் பெயரால் 2 திருவீதிகளுக்கும், அகளங்கன் திருவீதி, திருவிக்கிரமன் திருவீதி என்றுபெயர். இவன் ஆக்ஷிக்காலத் தொடக்கம கி. பி. 1118. 18 வருஷமரசாண்டான்.

“குலோத்துங்கன்” II:—குமார குலோத்துங்கன் எனப்படுவன். “குலோத்துங்க சோழன் கோவை” “உலாக்களின்” நாயகன் இவனே. இக்காலந்தான் கம்பர் ஒட்டக்கூத்தர் காலமாகும்.

இராஜராஜன் :—இராஜராஜன் உலாக்கேட்டவன்

இராஜகேசரி இராஜாதிராஜன் II—பாண்டி நாட்டில் குலசேகர பாண்டியனுக்கும், பராக்கிரம பாண்டியனுக்கும் பட்டாபிஷேகத்தைப்பற்றி விவாதம் நேர்ந்தது. இதில் ஒரு தரத்தானாகிய குலசேகர பாண்டியனுக்கு உதவியாகச் சேனைகளை அனுப்பி வீரபாண்டியனைத் துரத்திவிட்டான். இவன் காலத்தில் சிங்களத்தைப் பராக்கிரமபாகு என்பான் ஆண்டான்.

மூன்றும் குலோத்துங்கன்:—வீரராஜேந்திரன், திரிபுவன வீரதேவன். “மதுரையும, ஈழமும், பாண்டியன் முடித்தலை

யுங் கொண்டருளிய கோப்பரகேசரிவர்மரான திரிபுவன சக்கி ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்." என இவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது. காஞ்சீபுரத்தில் காகதீய வமி சத்தரசனை கணபதி என்பானும், விஜயகண்ட கோபாலன் என்பானும், சிலசிலங்களை ஆண்டார்கள். அவர்களை அடக்கி னான். இவன் கீழடங்கியிருந்த சிற்றரசர்களில் ஒருவன் அமராபதி சீயகங்கன்; இவன்தான் பவணந்தி முனிவரை நன் னூல் எழுதும்படி வேண்டினவன். மகதை என்கிற நடுநாட் டதிபதியான ஆர்க்களுருடையான பொன்பரப்பினான், மக தைப்பெருமாளான இராஜராஜ வாணகோவரையனும், இரா ஜராஜக்காடவராயனும் குலோத்துங்க வாணகோவரையனும், ராஜராஜ காடவராயனும் பகைமை பாராட்டினார்கள். அக் காலத்தில் சோழசைனியங்களுக்கு மஹாசாமந்தனான இரா ஜராஜ சேதிராயன், தாண்டுதலால், பாண்டிநாடு கொண்டா னான ஐம்புவராயன், செங்கேணி அத்திமல்லன், வீராண்ட னான எதிரிலிசோழ சம்புவராயனான அத்திமல்லன் பல்லவாண் டானான குலோத்துங்கசோழ சம்புவராயன் கிளியூர் மலைய மான் ஆகார சூரனான இராஜ கம்பீரச் சேதிராயன், குந்தன் நம்பூரனான இராஜராஜ நீலகங்கரையன், அம்மையப்பன மரு ந்தனான இராஜராஜரூபேவந்தரையன், பாவந்தித்தானான இரா ஜேந்திர சோழ சம்புவராயனான ஆடையூர் நாடாள்வான், சோமன் திருவண்ணாமலையுடையானான, குலோத்துங்கசோழ பிருதிகங்கன், சோழன் வரந்தருவானான சோளேந்திரசிங்க பிருதிகங்கன் என்னும் இவ்வொன்பது சிற்றரசர்களும் கி. பி. 1178 சோழ சக்கிரவர்த்தியிடத்தில் பகைமை பாராட்டிய அம்மூன்று சிற்றரசர்களும் ராஜதுரோகிகளாய் விட்டபடி யால் அவர்களிடம் சேவதில்லையென்றும் சக்கிரவர்த்திக்கும் மஹாசாமந்தருக்கும் கீழ்ப்படிவோமென்றும் ஒப்பந்தஞ்செய் துகொண்டார்கள். இவனரசாகிய வருஷம் 24-ல் ஒரு பஞ் சம் வந்தது. அப்பொழுது "காசுக்கு உழக்கரிசி விற்ற" தென்று திருவண்ணாமலையில் ஒரு சாஸனம் கூறுகிறது.

மூன்றும் இராஜராஜன்:—மூன்றும் குலோத்துங்கன் மகன். கி. பி. 1216—ல் பட்டந்தரித்தான். முதல்முறை மாறவர்மன் சுந்தரபாண்டியனாலும், இரண்டாந்தடவை கோப்பெருஞ் சிங்கதேவன் என்பவனாலும் ராஜ்ஜியத்தையிழந்தான். போஜன் வீரசிங்கதேவன் மாப்பிள்ளை, இதனால் இருமுறையும் இவனால் உதவிபுரியப்பெற்றான். கி. பி. 1246 வரை ஆண்டான். மூன்றும் ராஜேந்திரன் 1246 ல் அரசனானன். கி. பி. 1251-ல் பாண்டியவரசன் "ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் மஹாராஜாதி ராஜன் சக்கிரவர்த்திப் பட்டந்தரித்திருந்திருக்கின்றான் "சோழவம்சமென்னும் மலைக்குத்தான் ஒரு இடியேறு" என்று அவன் மெய்க்கீர்த்தி புகழ்கிறபடியால் இவன் சாஸனம் சோழநாட்டிலும் வடக்கே நெல்லூரிலும் காணப்படுவதால் சோழராச்சியம் சற்று குறுகிப்போயிருக்கலாமெனத் தோன்றுகிறது. இவன் 22 வருஷம் ஆண்டிருக்கிறான். இவனுடன் சோழராச்சிய பிராபல்யம் அடங்கிவிட்டதாய் நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இவனுக்குப்பின்னும் சிற்சில சோழர்கள் சிற்றரசர்களாக ஆண்டிருக்கிறார்கள். கி. பி. 1314-ல் வீரசோழன்மகன் வீரசயபன் சிற்றரச நிலையில் ஆண்டுவந்ததாகத் தெரிகிறது.

மேற்குறித்த சோழர்களே அன்றி பல காலத்துப் பல சோழ அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். புராணங்களிலும், ஸ்தல புராணங்களிலும், மற்றைச் சில சரித்திரங்களிலும் அங்கங்கே ஒவ்வொரு சோழ அரசர்கள் பெயர் காணக்கிடைக்கின்றது. அன்றி ஒன்று சேர எடுத்துக்கூறும் நூல் கிடைத்திலது. இதனை இத்துடன் நிறுத்தி, தொண்டைமான் சக்கிரவர்த்தியைப்பற்றி சற்று விசாரிக்கலாம்.

## அ-வது அதிகாரம்.

ஆதொண்டைச் சக்கிரவர்த்தி:—எல்லா வளமும் பொருந்திய சோழமண்டலத்தை வெகு சிறப்புடன் ஆட்சிபுரிந்து வந்த

* சோழமஹாராஜன் தன்னுடைய ராஜ்ஜியத்திலுள்ள குடிகளும் பயிர்களும் துஷ்ட மிருகங்களால் வருந்துவதைக் கண்டு மந்திரி, பிரதானி, வேட்டுவர் குறவர் மறவர்கள் முதலானோர் புடைசூழ வேட்டையாடப் புறப்பட்டான். வடதிசை நோக்கி ஆரணியத்துள் புகுந்து புலிகரடி காட்டுப்பன்றி முதலிய துஷ்ட மிருகங்களை அதஞ்செய்துகொண்டு வருகையில் உச்சி வேளையாய்விட்டது. தன்னுடன்வந்தவர்களை ஓர் சோலையிலிருக்கச் செய்தான். சற்று தூரத்தில் அலங்காரமான ஓர் சோலை தெரிந்தது. அதனைப் பார்த்துவருவோமென்று குதிரை ஏறிச் சென்றான்.

அது ஒரு முனிவர் ஆசிரமமென்று தெரிந்து கொண்டான். அங்கே ஒரு பெரியவர் நிஷ்டையிலிருந்தார். அதிரூப லாவண்ணியமான ஒரு வாலிபப்பெண் அவருக்கு ஏவல் புரிந்திருக்கப் பார்த்தான், அந்த ரிஷியின் புத்திரி என்றுந் தெரிந்து கொண்டான். அவள்மீது மிகுந்த மோகங்கொண்டு தன் கருத்தைக் குறிப்பால் அக்கன்னிகைக்கு அறிவித்தான். "என் தந்தை சம்மதமின்றி உன்னுடன் கூடமாட்டேன்" என்று அறிவித்தாள். "உன் தந்தை தவத்திலிருக்கிறார்; எழுந்தபின் கேட்பதானால் காலதாமதமாகும். இப்பொழுது நாம் பிரயத்தனப்பட்டால் தவம் கெடும்; ஆதலின் நாமே இசைந்துகொள்வது நலம். நானே இந்நாட்டையாளும் சோழமஹாராஜன்; உன்மீது காதல் கொண்டுவிட்டேன்; என் காதலைத் தணிப்பாயேல் நீ கேட்பன வெல்லாம் அளிப்பேன்; தயைசெய்" என்றான். இவ்வாசனத்து அழகில் மயங்கிய அப்பெண்மணி "விவாகமின்றிச் சேர்வது யோக்கியதை அல்ல" என்றாள். சமீபத்திருந்த ஆதொண்டைப் பூக்களைக் கொய்து தொடுத்து அந்த நாக கன்னிகையின் கழுத்திலிட்டுத், தன் விரலிலிருந்த கணையாழி மோதிரத்தைக் கழட்டிக் கடவுளை நினைத்து அம்மாது சிரோன்மணியின் விரலிலிட்டு அணையத்தொடங்கினான். மிகுந்த அறிவுள்ள அப்பெண்

* மணிகொண்ட சோழனென்றும், குலோத்துங்க சோழனென்றும் கூறுப.

மணி "அரசே கர்ப்பமாய்ப் பிள்ளை பிறக்குமாயின் அக்குழந்தைக்கு யாது உதவுவீர்?" என்று கேட்டனள். "நங்காய என் அரசை அவ்அரசிளங்குமாரனுக்குக் கொடுப்பேன்" எனச சத்தியம் செய்துக் கொடுத்துக் கூடினன் பின்பு வருகிறேன் எனறு விடைபெற்றுக்கொண்டு தன் பரிசனங்களை சேர்த்துவா இராஜதானிவந்து சேர்ந்து ராஜகாரியத்தில் கருத்துக்கொண்டிருந்தான்.

நாககன்னிகை கர்ப்பவதியாய் நல்ல ஓரையில் ஆண்மகவை ஈன்ருள். தந்தையாகிய முனிவர் நிஷ்டை நீங்கித தன் அருமை மகளால், நடந்த விவரம் அறிந்து சந்தோஷப்பட்டான. குழந்தைக்கு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து ஆதொண்டைப் பூச்சூட்டி உற்பத்தியான குறிப்புத்தோன்ற ஆதொண்டைமன்னன் எனப் பெயரிட்டு வளாததான். அரச குமாரனுககு வேண்டுவனவான கலவிகளையெல்லாம கற்பிததான். பிள்ளைககு வயது 20 ஆயிற்று.

சோழமஹாராஜனுக்குக் குழந்தையின்றி யிருந்து பட்டத்து ராணியார் கறபமாய் ஆண்மகவைப்பெற்றனள். குழந்தை கலைகளோாநது சமர்த்தனுனன். அரசன் கிழத்தன்மை கொண்டதால் அரசிளங்குமாரனுக்குப் பட்டாபிஷேக நாள் குறிதது தனது ராஜ்ஜியத்தில முரசு அறைவித்தான். நாககன்னிகைக்குச் செய்த வாக்குதத்தத்தை மறந்துவிட்டான். இது விவரந்தெரிந்த நாககன்னிகை, தன் பிதா அடியிற்பணிந்து ஐயா! சோழ மஹாராஜன் எனக்கு அக்காலததில் வாக்குதத்தம் செய்ததற்கு மாருக இப்பொழுது பறையறைவித்திருக்கிருனென்று சோர்நது சொன்னுள். "இதுகேட்ட கன்னிகையின் பிதாவான முனிவர் பௌத்திரனை வரவழைதது, பூர்வ சரிதங்களை செவ்வையாகச் சொல்லி, குழநதாய் நீ அரசனிடம் சென்று உன் வாக்குதத்தப் பிரகாரம் இராஜ்ஜியத்தை எனக்கு மகுடாபிஷேகம் செய்துகொடு. இல்லையேல யுததத்துக்கு வா? என்று, கேள். கொடானுயின் யுத்தம் செய்து உனது நாட்டைக்கைக் கொள்" என்று அதற்கேற்ற மநதிரங்களை உபதேசித்து ஆசிகூறியனுப்பினர்.

அக்குமாரனும் சோழவரசன் இராஜதானிக்குவந்து தக்க ஒரு தூதனைக்கொண்டு "நாககன்னிகையிடத்து உதித்த உமது குமாரன் வந்திருக்கின்றான். சோழ ராஜ்ய பட்டாபிஷேகம் தனக்கு ஆகவேண்டும் என்று கேட்கிறான்" என அறிவிக்கும்படி ஏவினான்.

அத்தூதன் தூது இலக்ஷணப்படிக்கு ஆஸ்தானமண்டபம் சேர்ந்து அரசனை வணங்கி "ஓ சோழராஜ சிகாமணியே! நீர் வேட்டையாடச் சென்றபோது ஆரணியத்தில் சேர்ந்த நாககன்னிகையிடத்து உற்பவித்த தங்கள் குமாரன் வந்திருக்கின்றார்; இந்த ராஜ்ஜிய ஆட்சி தனக்குச் சேரவேண்டியது" என்கிறார் என்றான். இது நடந்து இருபது வருஷங்கள் கழிந்ததால் அரசனுக்குச் சற்றும் ஞாபகத்துக்கு வரவில்லை. குலுங்கக் குலுங்கச் சிரித்து, "தூத! எவனோ பயித்தியக்காரப்பையல் சொன்னதைச் சிறிதும் அச்சமின்றி அரச சபையில் கூறினையே? சரியன்று; தூதனென்று வந்தமையால் உன்னை விடுத்தேன்; உயிர் பிழைத்துச்செல்" என்றான். இந்த விவரத்தை ஆதொண்டை மன்னனுக்கு அறிவித்தான். அக்குமாரனும் தூதனைப் பார்த்து "நீ மறுபடியும் போய் யுத்தத்துக்கு வருகென அறிவி" என்றனன். தூதனும் அத்தாணி மண்டபத்தை அணுகி அரசனை வணங்கித் தங்கள் மகவு "யுத்தத்துக்கு ஆயத்தமாய்ப் புறப்படுக" என அறிவித்தார் என்றனன். இதனைக்கேட்ட மன்னன் மறுமொழி கூறாது ஆலோசித்தான். முன் வேட்டைக்குச் சென்றபொழுது கூடச்சென்று அங்கு நடந்தவற்றுள் சில சங்கதி தெரிந்துள்ள ஒரு மந்திரி அரசனை நோக்கி "வேந்தே! இவ்வளவு தைரியமாகத் தூதனுப்பிய பராக்கிரமக் குமாரனைச் சபைக்கு வரும்படி உத்திரவு செய்தால் நலமாகு"மென்றான். அரசன் அப்படியே உத்திரவு செய்தான். சந்தோஷம் கொண்ட தூதன் ஆதொண்டை மாலை சூடிய அவ்வரசிளங்குமாரனை ராஜசபையில் கொண்டுவந்து விடுத்தான். அந்த ஆதொண்டைமானும் அரசன் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்றான். "ஐயா, தாங்கள் எவ்விதம் அரச குமாரர் ஆவீர்" என மந்திரி விசாரித்

தான். அக்குமாரன் சபையோர்களைப் பார்த்து "இராஜசபையோர்களே! இந்த வேந்தன் 20-வருஷங்களுக்குமுன் வேட்டையாடப் புறப்பட்டார்; வனத்தில் ஒரு ரிஷி ஆசிரமத்தில் ஒரு நாககன்னிகையைக் கண்டார்; மோகங்கொண்டார்; அக்கன்னிகை விவாகமின்றிக் கூடச் சம்மதிக்கவில்லை; உடனே சமீபத்திருந்த ஆத்தொண்டைப் பூவைப்பறித்துத் தொடுத்து பிள்ளை பிறந்தால் தன் ராஜ்ஜியத்தைக் கொடுக்கிறேனென்று பிரமாணம் செய்து தன் கணையாழியைக் கொடுத்து அரசர்க்குரிய காந்தர்வமணம் செய்துகொண்டார். அக்கன்னிகையின் கற்பத்திலிருந்து பிறந்த குழந்தை நான்; இவர் கொடுத்த கணையாழி இது" என்று காண்பித்தான். அந்தச் சோழராஜனுடைய உருவமாகவே குமாரன் விளங்குவதாலும், கம்பீரகுணம் விசேஷமாக இருப்பதாலும், இராஜ தேஜசு முகத்தில் ஜொலிப்பதாலும், இச்செய்தி உண்மையாய் இருக்குமென்று சபையோர் நம்பினார்கள். சோழராஜனுக்கும் இந்த விவரங்களெல்லாம் ஞாபகத்துக்கு வரவே இளஞ்சூரியன்போல விளங்கும் குமாரனை மார்புறத்தழுவி அருகிலிருக்கச்செய்தான்.

அரசன் இவ்விதம் சிந்திக்கின்றான்; "இக்குமாரன் பிறந்திருப்பது தெரியாமையால், பட்டஸ்திரியின் பிள்ளைக்கு முடிசூட்டுவதாக விளம்பரப்படுத்திவிட்டோம்; அப்படிச் செய்யாவிட்டால் உலக நிந்தனை வரும்; இப்பிள்ளைக்கு ராஜ்யம் கொடாவிட்டால் சத்தியம் தவறுகிறது;" என மயங்கினான். இதை யோர்ந்த மந்திரிமார்கள் அரசனை நோக்கி, "எமது இறைவ! நமது தேசத்தை இரண்டாகப்பிரித்து இரு குமாருக்கும் கொடுத்துவிடுவது தருமமாகும்" என்றார்கள்.

ஆம்! ஆம்!! என அரசன் மகிழ்ந்து பெண்ணையாற்றுக்குத் தென்பாலுள்ள நாட்டைத் தென் சோழமென்றும், வடபாலுள்ள நாட்டை வட சோழமென்றும் இரண்டு பிரிவாக்கி தென் சோழத்தை பட்டமகிஷி பெற்றெடுத்த குமாரனுக்கும், வட சோழத்தை நாககன்னிகை வயிற்றிற் பிறந்த பிள்ளைக்கும்

கொடுத்து இருவருக்கும் மகுடாபிஷேகம் செய்து வாழ்ந்திருக்குமபோது மன்னன் விண்ணுலகடைந்தான்.

தென்சோழம். (சோழமண்டலம்.)

வெண்பா.

" கடல் கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப பண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல். (ஔவை.)

சோழராஜன் வடசோழத்தைப் பிரித்துக் கொடுத்தது மன்றி தன்னிடத்திருந்த மந்திரி பிரதானி முதலியவர்களிற் சிலரையும், சதுரங்க சேனையையும், குடிகளையும கூட்டியனுப்பியதுடன ஆதொண்டைப் பெருமான் எனத திருநாமமும் இட்டனன். தொண்டைமான் ஆட்சிக்குள்பட்டது ஆனதால் தொண்டைமண்டலம் எனப்பெயராயிற்று இவன் சரித்திரத்தை மற்றொரு விதமாகவும மாறுபட வழங்குதலைப், பத்துப் பாட்டில் ஒன்றான " பெரும்பாணாற்றுப் படை" யிலே காணக் கிடக்கின்றது. அது இது :—

"அந்நீர்த்-திரைதருமரபின் ...பல்வேல் திரையன்" என்னும் அடிகளுக்கு மதுரை யாசிரியர் பாரத்துவாசி, நச்சினார்க்கினியர் எழுதிய விசேட உரையிலே " நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று, நாககன்னிகையைப் புணர்ந்த காலத்து அவள் யானபெற்ற புதல்வனை என் செய்வேனென்றபொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட அவன வந்து கரையேறின் அதற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பமெனறு அவன் கூற அவளும புதல்வனை அஙஙனம வரவிடத் திரை தருதலின், திரையனென்று பெயர் பெறற" கதை கூறினர் என எழுதியுள்ளார். கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பட்ட அப்பெரும்பாணாற்றுப் படைத்தலைவன் இவனே.

பாடுதலில் வல்லவன் என்பர். இவன் காஞ்சிபுரத்திருந்து அரசாண்டனன்; திரையன் எனவும் பெயர் பெற்றவன்.

## ௰-வது அதிகாரம்.

### வடசோழம்

### தொண்டை மண்டலம்.

வெண்பா.

மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம
ஆர்க்கு முவரி யணி கிழக்குப்—பார்க்குளயர்
தெற்குப பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு. (ஔவையார்)

ஆதொண்டை மன்னன் வருங்காலத்தில் அந்த வடசோழமென்று சொல்லப்படுவது சோலைகளடர்ந்த காடாக இருந்தது.

பதவேடு, மகேந்திரவாடி, ஆம்பூர்ப்பேட்டை, நாராயணவனம், வள்ளிமலை இவை முதலான இடங்களில் குறும்பர்கள் (ஒரு வகை இடையர்) கோட்டை கட்டிக்கொண்டு இருந்தார்கள். கோமந்த குறும்பப்பிரபு என்பவன் வடசோழத்திற்கு அரசனாக இருந்தான். அவன் அந்த வடசோழத்தில் அங்கங்கே இருபத்துநான்கு கோட்டைகட்டி ஆண்டுவந்தான். அந்தக் கோட்டைகள் இன்னும் தெரிகிறது. அந்தக் கோட்டை என்பதே கோட்டங்கள் என வழங்கலாயிற்று. இந்தக் குறும்ப அரசனை ஆதொண்டன் தனக்குக் கீழடங்கப் பல பிரயத்தனஞ் செய்தான். அடங்கவில்லை. புழற் கோட்டத்தில் இந்தக் குறும்பர்களை எதிர்த்துப் போர்செய்தான்; என்றாலும் குறும்ப சேனைக்கு ஆற்றாதவனாய் சோழிங்கபுரத்தில் ஒழிந்தான். இந்தப் போரில் தனக்கு வெற்றிவேண்டி சிவலிங்கப் பிரதிட்டை செய்து ஆராதித்துத் தவம் புரிந்தான். இதனால் அங்கெழுந்தருளிய சிவபெருமானுக்குச் சோழலிங்கம் என திருநாமமாயி

ற்று. சோழலிங்கபுரமென்னும் பெயரே சோழிங்குபுரம் என மருவி வழங்குகிறது என்பர்.

ஆதொண்டைப் பெருமான் மிகவருந்தி அருந்தவம்புரியக் கிருபாகடாக்ஷனான சிவபெருமான் அவனைவந்தன் கனவில் தோன்றி அருள்புரிந்தனர். விழித்து சிவானுக்கிரகத்தை வியந்து களிகூர்ந்து சேனைகளைகூட்டிக் குறும்பப்படையை எதிர்த்தான். பெரும்போர் செய்து புழற் கோட்டையைப் பிடித்தான். அதிலிருந்த வெண்கலக் கதவினையும் எடுத்துச் சென்றான் பின்பு இன்னும் உள்ள கோட்டைகளையும் இடிக்க ஆரம்பித்துப் பெரும்போராட்டம் செய்து ஆதொண்டைமன்னன் கடைசியில் வெற்றிபெற்றான். அரசன் போருக்கு ஆற்றமுடியாத குறும்பர்கள் இழைத் தொண்டை நாட்டைவிட்டு மைசூர், நீலகிரி முதலிய இடங்களுக்குக் குடியேறிவிட்டார்கள்; என்றாலும் மேலைத் தொண்டை நாட்டிலுள்ள குறும்பர்கள் பிடிவாதமாக அங்கேயே இருந்தார்கள். மேலைத்தொண்டை நாட்டிலுள்ளவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். இந்தச் சரித்திரம் சென்னை கன்னிமாரா புத்தகசாலை (liberary) யிலுள்ள சரித்திரங்களாலும் இன்னும் பல நூல்களாலும் அறியக்கிடக்கின்றது.

இவ்வினத்தவர்கள் பழையகாலத்தில் நம் தமிழ் நாட்டில் பராக்கிரமசாலிகளான சிற்றரசர்களாய் இருந்தார்கள். அவர்களிற் சிலரைச் சேரனும், சோழனும் அடக்கியதாகத் தெரிகிறது. எட்டுத்தொகையுள் நான்காவதான பதிற்றுப்பத்தில் ஒன்றான பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில் கிழார்பாடிய எட்டாம் பத்தில் "......ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்க" என்னும் இளஞ்சேரலிரும்பொறையை பெருங்குன்றூர்க்கிழார் பாடிய ஒன்பதாம் பத்தில் "பொரு முரண்எய்திய கழுவுள் புறம்பெற்று" என்று கூறப்பட்டவைகளில் கழுவுளா வான் இடையர்களுக்குத் தலைவனாய் அக்காலத்தில் குறும்பு செய்திருந்த ஒருவன் என்று உரை கூறுகிறார். சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலையில் "புன் பொதுவர் வழிபொன்ற"

| | | |
|---|---|---|
| குன்றபத்திரக் கோ. நா. | 3 | தொண்டமான் |
| மாகாளம் | | பேரத்தப்பி. |
| தின்றை | | மேலைத்தொண்டை மண்டலநா 13. |
| மங்கலம். | | |
| வேங்கடக் கோ. நா. | 3 | ஆகத் தொண்டை மண்டல நாடு 79. |
| குடகரை | | |

இவ்விதம் இருபத்து நான்கு கோட்டம், எழுபத்தொன்பது நாடு ஆயிரத்துத் தொள்ளாயிரம் நத்தம (கிராமம்) ச்சேர்ந்த தொண்டை மண்டலத்தை வளப்படுத்தக் கருதிய ஆதொண்டை மன்னன், தென் சோழநாட்டிலிருந்து அழைத்து வந்த சோழிய வேளாளர், கன்னட தேசமாகிய துளுவ நாட்டிலிருந்து வந்த துளுவ வேளாளர், தொண்டை மண்டலத்திலேயே இருந்த தொண்டைமண்டல வேளாளர் (குறும்பர் சகவாசத்தில அவர்களைப்போல தலைமயிர் வளர்த்துக் கொண்டை கட்டியதால் கொண்டைகட்டி வேளாளரெனப் பிறரால் குறிப்பிடுபவர்கள்). ஆகிய மூவகை வேளாளர்களைக் குடியேற்றினன். பல ஏரிகள், காலவாய்கள் கட்டிய பாசன வசதி உண்டாக்கி நாடு விவசாயத்தால் வளம்பெறச் செய்தனன். பல வருணத்தவர்களும் குடியேறினார்கள் நீர்ப்பாசானம், உள்நாடுகளில் ஜாதி வகை விவகாரம் முதலியவற்றைத் தீர்க்கும்படி சில சுதந்தரங்களைக் குடிகளுக்குக் கொடுத்தனன். அதனால் குடிகள் ஒற்றுமையாய்ச் செழித்தது. அதில் சிலவருமாறு :—

MIRASI RIGHT OF 1852, PAGE 57.

"The sub division of Nadus was introduced by the agricultural colonists and the office of Nattan or head of the Nadu which still remains and possesses some authority as to questions of Casts especially was established and conferred on the principal Vellalar whose descendants now hold it".

1852-வருஷத்திய மிராசு ராயிட்டு, 57-வது பக்கம்.

'நாடுகளின் உட்பிரிவுகள் குடியேறின கிருஷிகர்களால் உண்டாக்கப்பட்டன. சாதியைப்பற்றிய விவகாரங்களை விசாரிப்பதற்காகச் சிறிது

அதிகாரத்தைப்பெற்று விளங்குகிற நாட்டான் அல்லது நாட்டுத்தலைமை (நாட்டாண்மையானது), முக்கியமாக உண்டாக்கப்பட்டு, அவ்வுத்தியோகம் வேளாண்டலவருக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் சந்ததியார் இக்காலத்தும் அந்நாட்டாண்மைத் தனதைப் பெற்றிருக்கின்றனர்'.

The junction of the Nattan of a Kottam, with the chief proprietors of their respective Nadus formed what was called the Maha-Nadu, an assembly of which the tradition now only remains: the consideration of agricultural improvements in the Kottam, of the means of extending irrigation, &c. seem to have been principally the purposes for which it met. Whether its members possessed deliberative and administrative powers and resembled our ancient Witena-Gemohtes, I posses not data for determining; though the phrase, Manthri Mahanadu, the former term signifying a Minister of State being generally used to express the concurrence of the Government and the people would seem to indicate that it actually had such powers.

### இதின் மொழிபெயர்ப்பு

ஒவ்வொரு கோட்டத்தினது நாட்டான்கள் தங்கள் தங்கள் முக்கியமான மிராசுதாரர்களுடனே கூடும் கூட்டமானது மகாநாடென்னப்படும். அந்தக் கூட்டமானது விசாரிக்குமிடத்து இக்காலத்தில் சரித்திரமாத்திரமே யிருக்கிறது. இந்தக் கோட்டத்தில் நீர் பாய்ச்சலை எவ்விதமாக விருத்திசெய்தால் பயிர் விருத்தியாகுமென்பதை ஆலோசிப்பதற்காகவே இக்கூட்டம் ஏற்பட்டதென்று அபிப்பிராயப்படுகின்றது. நம்முடைய பூர்வ Witena-Gemoht என்ற கூட்டத்தாரைப்போலவே இந்த கூட்டத்தாருக்கு வாதிப்பதற்கும், அதிகாரத்தைச் செலுத்துவதற்கும், அதிகாரமுண்டோ இல்லையோ அதை நிச்சயிக்க எனக்குச் சாதனங்கள் அகப்படவில்லை. இராஜாங்க மந்திரி என்னும் பொருளைக்கொள்ளும் மந்திரி மகாநாடு என்னும் பூர்வபதம் இராஜ காரியங்களைக்குறித்து ஆலோசிப்பதற்காகவே வழங்குவதால், ஜனங்கள் அவ்வித அதிகாரத்தைப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது.

### TINNEVELLY MANUAL OF 1879.

The land owners had always the complete command of the village servants, and could refuse the use of barbers wash-

erman or watchman to recusant members of any of the other classes.

1879-வருஷத்தில் திருநெல்வேலி ஜில்லாச் சரித்திரம்.

*காணியாளர் அல்லது மிராசுதாரர்கள் கிராமத்தொழிலாளிகளை நடத்துவதற்குப் பூரண அதிகாரமுண்டு. அதனால் அம்பட்டன் வண்ணான் காவலாளி முதலியவர்களை இதர சாதியாருக்கு வேலைக்குப் போகவொட்டாமல் தடைசெய்யலாம்.*

இவ்வாறு பலவிதத்திலும் முன்னேற்றம் பெற்று ஆதொண்டைச் சக்கிரவர்த்தியென யாவரும் புகழும்படி பல அரியபெரிய செய்கைகளால் விளங்கினன். "நற்றொண்டை, நன்றுடைச் சான்றோருடைத்து" என நாடு செழிப்புற்றிருந்தது. இத்தொண்டைமான் காலமேறக்குறைய கி. பி. 2-ம் நூற்றாண்டு ஆக இருக்கலாமென ஊகிக்கிறார்கள். இதைப்போலவே தென் சோழ மண்டலத்திலும் உள்நாடுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன; எனினும் அதன் சரியான கணக்கு அகப்படவில்லை. இதனுடனி ஆத்திக் காஞ்சிபுரத்திருந்து மிகுந்த சிறப்பாக ஆட்சிபுரிந்த பல்லவர்களைப்பற்றி சிறிது விசாரிக்கலாம்.

## ௧௦-வது அதிகாரம்.

### பல்லவர்கள்.

சேர, சோழ, பாண்டியர்களென்கிற மூவேந்தர்களே தமிழ் நாட்டு அரசர்களெனப் பிரசித்தமாக வழங்கினும், பல்லவர்களும் பெருங்கீர்த்தி வாய்ந்தவர்களே ஆவர். இவர்கள் சுமார் கி. பி. 6 முதல் 8-ம் சதாப்தம் வரையிலாண்டார்கள் என்பது சாசன பரிசோதகர்களின் அபிப்பிராயம். இவர்கள் காலத்தே நாயன்மார்களிற் சிலரும், ஆழ்வார்களிற் சிலரும் விளங்கி இருக்கிறார்கள். வட நாட்டிலிருந்து அநேகம் பிராமணர்கள் வந்தார்கள். அவர்களுக்குப் பல தானங்கள் செய்திருக்கிறார்கள். காஞ்சிபுரம், மாமல்லபுரம் முதலிய இடங்களில் இவர்கள் கட்டி-